பக்கங்கள்: 15


விலை: 30.00

THEEMPUNAL

தீம்புனல்

வாராந்தப் பத்திரிகை

தீ : 01 புனல்:30 20.11.2021 சனிக்கிழமை வள்ளுவர் ஆண்டு 2052



நாட்டின் பொருளாதாரம் களைத்துப் போன மாடுகள் இழுக்கும் வண்டி

சிக்மலிங்கம் றெஜினோல்ட்

பக்கம் 05



இலங்கையில் தமிழர்களின் அரசியல் உறுதிப்பாடு

ஏன் கேள்விக்குள்ளாகியிருக்கின்றது?

யாதுமானவன்

பக்கம் 07





செல்வழகன்

# அமெரிக்கப் பயணம்:
# நேர்கோட்டில் இணையும் தரப்பினர்



தமிழரசுக் கட்சியின் சிரேஷ்ட துணைத் தலைவர் எம்.ஏ.சுமந்திரன் தலைமையிலான சட்ட நிபுணர் குழுவினர் அமெரிக்கா சென்றுள்ளமையும், அங்கு உலகத் தமிழர் பேரவையினருடன் இணைந்து அமெரிக்க அதிகாரிகளுடன் பேச்சு நடத்தி வருகின்றமையும் இந்த வாரத்தில் முக்கிய செய்திகளாக இருந்தன. பங்காளிக் கட்சித் தலைவர்களுக்குக் கூட எதுவும் தெரிவிக் கப்படாமல் சுமந்திரன் தலைமையில் இந்தச் சட்ட நிபுணர் குழுவை சம்பந்தன் நியமித்து, அமெரிக்காவுக்கு அனுப்பி வைத்திருக்கிறார் என்பதே இப்போதைய தகவல்.

சம்பந்தன் மிகத் தளர்ந்து போன பாத்திர மாகவே அண்மைக் காலத்தில் சித்திரிக்கப் பட்டு வந்துள்ளார். அவரது தலைமைத்துவம் குறித்து அவரது கட்சி யினரான சிறிதரன், சுமந்திரன் கூட கருத்துரைத்திருந்தனர். கட்சி யின் திருகோண மலை மாவட்டக் கிளையினர் அவரை வழி விட்டு ஒதுங்கியிருக்கக் கேட்டி ருந்தனர். இந்தச் சூழலில் சம்பந்தன் தனது மிடுக்கை வெளிப்படுத்தக் கூடிய வகையில் யாருடைய கருத்தையும் கேட்காமல் அல்லது யாரையும் கருத்தில் எடுக்காமல் தனது சுய முடிவில் ஒரு குழுவை நியமித்து அமெரிக் காவுக்கு அனுப்பி உள்ளார். அத்துடன் சுமந்திரன் நாடு திரும்பியதும் அனைத்துத் தமிழ்க் கட்சிகளையும் ஒன்றிணைத்து பேசப் போவதாக வும் அறிவித்துள்ளார்.

இந்த நிலையில் ரெலோவின் அழைப்பில் நடத்தப் பட்ட கட்சிகளின் ஒன்றிணைந்த கூட்டத்துக்கு என்ன நடக்கப் போகிறது? ரவூவ் ஹக்கீமும், மனோ கணேச னும் சந்தித்துக் கேட்டுக் கொண்டதற்கிணங்க சம் பந்தன் உள்ளிட்ட தமிழரசுக் கட்சியினரும் இணைந்து பங்குபற்றும் அடுத்த கூட்டம் கொழும்பில் நடை பெறுமா? என்ற கேள்வி எழுகிறது. அத்துடன் புதிதாக சம்பந்தன் தமிழ்க் கட்சிகளை

▶14

'பேசாப் பொருளையும் பேசும் குரல்'

ஐ.வி.மகாசேனன்



# பைடன்–ஜின்பிங் சந்திப்பு
# போரற்ற உலக அமைதிக்கு
# வழிவகுக்குமா?

சர்வதேச அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றும் இலக்கில் மோதிக்கொள்ளும் இரு வல்லரசுகளின் தலைவர்கள் மெய்நிகர்வழியில் முதல்முறையாகச் சந்திப்பை மேற்கொண்டுள்ளமையே சமீபத்திய சர்வதேச அரசியலில் முதன்மையான தேடல் பகுதியாகக் காணப்படுகிறது. கொரோனாத் தோற்றம் தொடர்பான அமெரிக்க அறிக்கைகள், சீனாவின் மனித உரிமைகள் விவகாரம் தொடர்பில் அமெரிக்கா சர்வதேச நிறுவனங்களில் ஏற்படுத்திவரும் நெருக்கடி, தைவான் தொடர்பில் அமெரிக்கா-சீனாவிடையே எழும் கருத்து மோதல்கள் மற்றும் வர்த்தகப் போட்டி என அமெரிக்க-சீன இடையிலான முரண்பாட்டு நிலைமை பனிப்போருக்கான அறிகுறிகளுடன் உக்கிரம் பெற்றுள்ளதொரு சூழலில் இரு நாடுகளினதும் தலைவர்கள் மெய்நிகர்வழியாகச் சந்திப்பை மேற்கொள்வது சர்வதேச அரசியல் பரப்பில் அதிக கவனத்தை ஈர்த்துள்ளது. இக்கட்டுரையும் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் மற்றும் சீன ஜனாதிபதி ஷி ஜின்பிங் சந்திப்பு தொடர்பான அரசியல் தாக்கங்களைத் தேடுவதாகவே உருவாக்கப்பட்டுள்ளது.

ஷி ஜின்பிங் மற்றும் ஜோ பைடன் ஏற்கனவே பைடன் உப ஜனாதிபதி என்ற அறிமுகத்துடன் நேரடியாகச் சந்திப்புக்களை மேற்கொண்டுள்ளனர். எனினும் கடந்த ஜனவரி (2021) ஜோ பைடன் அமெரிக்க ஜனாதிபதியாகப் பதவியேற்று 11 மாதங்களாகின்ற போதிலும் இரு நாட்டு தலைவவர்களாக ஷி ஜின்பிங் மற்றும் ஜோ பைடன் ஆகியோருக்கு இடையிலான சந்திப்புக்கள் சாத்தியமில்லாமலே இருந்து வந்துள்ளது. இது சார்ந்த அதிருப்தியை பைடன் ஜி-20 மாநாட்டு நிறைவின் பின்னரான ஊடக சந்திப்பிலும் வெளிப்படுத்தியிருந்தார். இந்நிலையிலேயே கடந்த நவம்பர்-16(2021) அன்று மெய்நிகர்வழியாக ஷி ஜின்பிங் மற்றும் ஜோ பைடன் ஆகிய இருவருக்கும் இடையே சீன மற்றும் அமெரிக்க நாட்டின் தலைவர்களாக முதல்முறையாக சந்திப்பு இடம்பெற்றுள்ளது. இரண்டு போட்டி வல்லரசுகளின் தலைவர்கள் அன்பான வாழ்த்துக்களைப் பரிமாறிக் கொண்டு கடந்தகால சந்திப்புக்களை மீளநினைவூட்டி தமது உரையாடலை ஆரம்பித்தார்கள்.

பைடன்-ஜின்பிங் சந்திப்பு பரந்த நோக்கங்களுடன் மூன்று மணி நேரத்திற்கும் மேலாக நீடித்தது. குறித்த சந்திப்பில் உரையாடப்படும் என சர்வதேச அரசியல் பரப்பில் முக்கியத்தவ மளிக்கப்பட்ட விடயங்களிற்கும் சந்திப்பில் உரையாடப்பட்டுள்ள விடயங்களுக்குமிடையிலான முரண்நகைகளை அறிதல் அவசியமாகிறது.

முதலாவது, தைவான் விவகாரம் முதன்மை பெற்றது. அமெரிக்க-சீன தலைவர்களின் சந்திப்புக்கு ஒரு வாரங்களுக்கு முன்னர் நவம்பர்-09(2021) அன்று, அமெரிக்க காங்கிரஸின் தூதுக்குழு அமெரிக்க இராணுவ விமானத்தில் தைவானுக்குச் சென்றது. இந்தப் பயணம் சீன பாதுகாப்பு அமைச்சகத்தால் விரைவாக கண்டனம் செய்யப்பட்டது. தைவானை மையப்படுத்தி அதிகமாக அமெரிக்க-சீனாவிடையே போர் உரையாடல்கள் நடைபெறுவதால் சந்திப்பில் அதன் பிரதிபலிப்பு எதிர்பார்க்கப்பட்டது. அமெரிக்க அதிகாரிகளின் கூற்றுப்படி, நீடிக்கப்பட்ட விவாதத்தின் தலைப்பு தைவான் என்பதாகவே காணப்பட்டது. தைவான் நீரிணை முழுவதும் அமைதி மற்றும் ஸ்திரத்தன்மையைக் குழி தோண்டிப் பார்க்கும் நிலைமையை மாற்றுவதற்கான ஒருதலைப்பட்ச முயற்சிகளை அமெரிக்கா கடுமையாக எதிர்க்கிறது என்று பைடன் தெரிவித்துள்ளார். அதாவது, தைவானின் சுதந்திரத்தை அங்கீகரிக்காத ஆனால் தீவின் பாதுகாப்பை ஆதரிக்கும் நீண்டகால அமெரிக்கக் கொள்கையை வெள்ளை மாளிகை மீண்டும் வலியுறுத்தியுள்ளது. மறுதலையாய் சீனாவும் தனது மாறாத நிலைப்பாட்டை வெளிப்படுத்தி இருக்கிறது. அமெரிக்க அரசியல்வாதிகள் மத்தியில் ஆதரவை அதிகரிக்க, தைவானின் முயற்சிகளை ஜின்பிங் நிராகரித்ததுடன் அமெரிக்கா தைவானின் சுதந்திரத்தை ஊக்குவிப்பதை நெருப்புடன் விளையாடுவதற்கு ஒப்பிட்டார். மேலும், “தைவான் சுதந்திரம் தொடர்பில் பிரிவினைவாத சக்திகள் எங்களைத் தூண்டினால், எங்களை வற்புறுத்தினால் அல்லது சிவப்புக் கோட்டைத் தாண்டினால் தீர்க்கமான நடவடிக்கைகளை எடுப்பதைத் தவிர எங்களுக்கு வேறுவழியில்லை” என்று ஜின்பிங் மோதலின் மறைக்கப்படாத அச்சுறுத்தலில் கூறினார்.

இரண்டாவது, உய்குர் முஸ்லிம்களுக்கு எதிராக, சீனா இனப்படுகொலையில் ஈடுபட்டதாகக் குற்றம் சாட்டப்பட்ட ஜின்ஜியாங் பிராந்தியத்தில் சீனாவின் அத்துமீறல்களை மற்றும் ஹொங்கொங் விவகாரம் தொடர்பில் அமெரிக்கா கடுமையாக விமர்சிக்கும் என்று மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள் நம்பினார்கள். ஆனால், பைடன் மனித உரிமைகள் விவகாரங்கள் பற்றி கவலைகளை வெளிப்படுத்தினாரே அன்றி பரந்த அளவில் பேச்சுவார்த்தைகளில் அதிகாரப்பூர்வ முக்கியத்துவத்தை அளிக்கவில்லை. சீனாவின் மனித உரிமை மீறல்களுக்கு பதிலடி கொடுக்கும் வகையில், அடுத்த பெப்ரவரியில் நடைபெறவுள்ள பெய்ஜிங் குளிர்கால ஒலிம்பிக் போட்டிகளை இராஜதந்திர ரீதியாகப் புறக்கணிக்க உய்குர் ஆர்வலர்கள் அழைப்பு விடுத்துள்ளனர். ஆனால் பைடன்-ஜின்பிங் சந்திப்பில் அவ்வகை இராஜதந்திர உரையாடல்கள் முன்னிலைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. மனித உரிமைகள் விவகாரங்களின் மூலம் ஏனைய அரசுகளின் உள்விவகாரங்களில் தலையிடுவதை சீனா தொடர்ச்சியாக எதிர்த்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. எனவே சீனாவுடனான உறவை கட்டமைப்பதினை அடிப்படையாகக் கொண்டு அமெரிக்கா சீனா மீதான மனித உரிமை குற்றச்சாட்டுக்களை தவிர்த்து சென்றுள்ளதா என்ற எண்ணப்பாட்டை உருவாக்குகிறது.

> **இரு நாட்டுத்தலைவர்களும் தூய்மையான இதய சுத்தியுடன் சந்திப்புக்காள முன்னாயர்த்தங்களை மேற்கொண்டுள்ளார்களா? என்பது தொடர்பில் சந்திப்பிற்கு புறத்தே இடம்பெற்றுள்ள நிகழ்வுகள் அதிக சந்தேகங்களை உருவாக்கியுள்ளது. குறிப்பாக சீன ஜனாதிபதி சீன கொம்யூனிஸ்ட் கட்சியின் மாநாட்டில் வரலாற்று சட்ட வரைபூடாக அடுத்த வருடம் தொடர்ச்சியாக மூன்றாவது முறையாக தனது ஆட்சியை உறுதிப்படுத்தி சர்வதிகார விம்பத்துடனேயே சந்திப்பில் இணைந்துள்ளார்.**

மூன்றாவது, போட்டிகள் மோதலாக பரவுவதைத் தவிர்க்க வேண்டியதன் அவசியம் பேச்சுவார்த்தையில் மையப்படுத்தி உரையாடப்பட்டுள்ளது. பைடன், “தலைவர்கள் என்ற முறையில் நமது நாடுகளுக்கிடையேயான போட்டியானது, நோக்கமாகவோ அல்லது திட்டமிடப்படாமலோ மோதலாக மாறாமல் இருப்பதை உறுதிசெய்வது நமது பொறுப்பு. நாம் சில பொது அறிவுப் பாதுகாப்புகளை நிறுவ வேண்டும்” என்றார். அதேவேளை ஜின்பிங், “சீனா-அமெரிக்க உறவுகள் தடம்புரளாமல் தடுக்க வேண்டும். மோதல் இல்லாதது மற்றும் மோதாமல் இருப்பது இரு தரப்பினரும் கடைபிடிக்க வேண்டிய அடிப்பகுதி” என்று கூறினார். குறித்த விடயப்பரப்பில், அமெரிக்கா எளிய நேரடியான போட்டியை நோக்கமாகக் கொண்டு உரையாடியிருந்தது. அதற்குப் பதிலாக சீனா, தன் மீதான அமெரிக்க கொள்கை பகுத்தறிவு மற்றும் நடைமுறைப் பாதைக்கு திரும்ப வேண்டும் என்பதை வலியுறுத்தியது. அமெரிக்காவின் உரையாடலுக்கும் செயற்பாட்டுக்குமிடையே நிலவும் முரண்பாட்டை ஜின்பிங் நேரடியாகவே சுட்டிக்காட்டியிருந்தார்.

நான்காவது, வர்த்தகம் மற்றும் தொழில்நுட்பம் தொடர்பான இரு நாட்டுக்குமிடையிலான போட்டி தொடர்பில் உரையாடப்பட்டது. அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் நிர்வாகத்திற்குப் பிறகு சீனாவும் அமெரிக்காவும் வர்த்தகம் மற்றும் தொழில்நுட்பப் போட்டியைத் தூண்டிவிட்டன. பில்லியன் கணக்கான சீனப் பொருட்கள் மீதான வரிகள் மற்றும் சீன உயர் தொழில்நுட்ப நிறுவனங்கள் அமெரிக்கப் பொருட்களை அணுகுவதில் இருந்து தடுப்புப்பட்டியலில் வைக்கப்பட் டுள்ளன. ட்ரம்ப் காலகட்டத்தின் பல நடைமுறைகளைப் பராமரித்து வரும் பைடன் சீனாவின் நியாயமற்ற வர்த்தகம் மற்றும் பொருளாதார நடைமுறைகளில் இருந்து அமெரிக்க தொழிலாளர்கள் மற்றும் தொழில்களை பாதுகாக்க வேண்டிய தன் அவசியத்தை எழுப்பி, சீனா மீதான தடைகளையும் தொடர்ந்து பேணி வருகின்றார். சந்திப்பிலும் விநியோகச் சங்கிலி பற்றாக்குறை, பணவீக்கம் மற்றும் கட்டணங்களை தளர்த்துவதற்கான சாத்தியக் கூறுகள் போன்ற அழுத்தமான பொருளாதார சிக்கல்களை எந்த வாசிப்பும் குறிப்பிடவில்லை. எனினும், ANZ வங்கியின் (Australia and New Zealand Bank) தலைமைப் பொருளாதார நிபுணர் ரேமண்ட் யூங் கூறுகையில், “சீனாவும் அமெரிக்காவும் அந்தந்த உள்நாட்டுப் பொருளாதாரங்களைத் திருப்புவதில் கவனம் செலுத்த வேண்டும் என்று இன்றைய சந்திப்பு தெரிவிக்கிறது.” எனக்குறிப்பிட்டுள்ளார்.

ஹொங்கொங், உய்குர் முஸ்லிம்களுக்கான மனித உரிமைகள் மற்றும் தென் சீனக் கடல் தொடர்பான பதட்டங்கள் அதிகரித்து வரும் நிலையில், அமெரிக்க அதிபர் பைடன் மற்றும் சீன அதிபர் ஜி ஜின்பிங் சந்திப்பு சர்வதேச அரசியல் திருப்பங்கள் சார்ந்து அதிக எதிர்பார்க்கையை ஏற்படுத்திய போதிலும், உரையாடலின் முடிவுகள் இரு வல்லரசு சக்திகளுக்கிடையிலான சந்திப்புப் போலன்றி இரு தேசிய அரசுகளுக்கிடையிலான சந்திப்பு போன்றதொரு தோற்றப்பாட்டையே ஏற்படுத்தியுள்ளது. சர்வ தேச அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த விடயங்கள் தவிர்க்கப்பட்டு இரு அரசுகளுக்கிடையிலான உறவுகளுக்கே மூன்று மணி நேர உரையாடலில் அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது.

பைடன்-ஜின்பிங் இடையேயான சந்திப்பில் இரு தலைவர்களும் இரு நாட்டு உறவு வெளிப்படையான மோதலாக மாறாமல் போட்டியாகத் தொடர்வதனை உற்சாகப்படுத்தியுள்ளனர். இது சீனாவிற்கும் அமெரிக்காவிற்கும் இடையிலான போரைத் தடுக்கிறது. ஆனால் அனைத்துத் துறைகளிலும் சீனாவுடன் மேலும் போட்டியை அனுமதிக்கிறது. இப்போட்டி எதிர்காலம் தொடர்பில் அதிக சந்தேகங்களையே உருவாக்குகிறது. ஏனெனில் அமெரிக்க-சீன உறவில் பல இடைவெளிகள் தொக்கி நிக்கவே செய்கின்றது. தைவான் விவகாரத்தில் தொடர்ச்சியாகச் சீனா இறுக்கமான பிடியிலேயே உள்ளது. இது தொடர்பில் கருத்துரைத்துள்ள ரென்மின் பல்கலைக்கழகத்தின் அமெரிக்க ஆய்வு மையத்தின் இயக்குநரும் அரசாங்க ஆலோசகருமான ஷி யின்ஹாங், “தைவான் மீதான இரு தரப்பின் அடிப்படைநிலைப்பாடுகளும் இன்னும் தீவிரமோதலில் உள்ளன” என்று சுட்டிக்காட்டியுள்ளார். சந்திப்பு தொடர்பில் ஜின்பிங், “புதுப்பிக்கப்பட்ட உரையாடல் இருந்தபோதிலும், உயர் பதட்டங்கள் கணிசமாகக் குறையவில்லை” எனக்குறிப்பிட்டுள்ளமையும் அமெரிக்க-சீன உறவில் தொடரும் இடைவெளிக்கும் காணப்படும் பதட்டங்களையே வெளிப்படுத்தி நிற்கிறது.

மேலும், இரு நாட்டுத்தலைவர்களும் தூய்மையான இதய சுத்தியுடன் சந்திப்புக்களை முன்னாயர்த்தங்களை மேற்கொண்டுள்ளார்களா? என்பது தொடர்பில் சந்திப்பிற்கு புறத்தே இடம்பெற்றுள்ள நிகழ்வுகள் அதிக சந்தேகங்களை உருவாக்கியுள்ளது. குறிப்பாக சீன ஜனாதிபதி சீன கொம்யூனிஸ்ட் கட்சியின் மாநாட்டில் வரலாற்று சட்ட வரைபூடாக அடுத்த வருடம் தொடர்ச்சியாக மூன்றாவது முறையாக தனது ஆட்சியை உறுதிப்படுத்தி சர்வாதிகார விம்பத்துடனேயே சந்திப்பில் இணைந்துள்ளார். மாறாக அமெரிக்க ஜனாதிபதி பைடனும் சந்திப்பு தினத்தன்று காலை சீனாவின் பட்டி மற்றும் சாலை முன்முயற்சிக்கு எதிராக இருதரப்பு உள்கட்டமைப்பு ஒப்பந்த சட்டத்தை காங்கிரஸில் நிறைவேற்றியுள்ளார். அதனை வரலாற்று வெற்றியாகவும் காட்சிப்படுத்தியுள்ளார். அது தொடர்பில் தனது பேஸ்புக் பதிவில், “இருதரப்பு உள்கட்டமைப்பு ஒப்பந்தத்தின் காரணமாக, அடுத்த ஆண்டு முதல் கடந்த 20 ஆண்டுகளில் அமெரிக்காவின் உட்கட்டமைப்பு முதலீடுகள் சீனாவை விட வேகமாக வளரும் ஆண்டாக இருக்கும்.” என சீனாவுடனான எதிர்மனப்பாங்கை வெளிப்படுத்தி உள்ளார். இவ்வாறானதொரு எதிர்மனப்பாங்குடனேயே மாலை ஜின்பிங்குடனான சந்திப்பிலும் இணைந்தார்.

எனவே, அமெரிக்க-சீன நாட்டு தலைவர்களின் சந்திப்பு சர்வதேச அரசியல் திருப்பங்கள் சார்ந்த எதிர்பார்ப்புக்களுக்கு அதிகம் ஏமாற்றத்தையே அளித்துள்ளது. ஆனால், போர் தொடர்பான இருதரப்பின் விழிப்புகான கருத்துக்கள் தைவான் விவகாரத்தை மையப்படுத்தி எழும் என எதிர்பார்க்கப்பட்ட இராணுவமோதல்களைத் தடுப்பதில் இரு தரப்பும் விழிப்புணர்வுடன் இருப்பதை உறுதி செய்கிறது. இதனை அமெரிக்க-சீன உறவை மேம்படுத்துவதற்கான தொடக்கமாக கருதி தொடர்ச்சியான சந்திப்புக்களுக்கு வழிகோலுமாயின் முன்னேற்றகரமான மாற்றங்களை எதிர்பார்க்கக்கூடியதாக காணப்படும்.

"அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க
இகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார்"

கனகசபை கட்டடத் தொகுதி,
பருத்தித்துறை வீதி, நெல்லியடி.
தொ.பே.: 021 226 2564
www.theempunal.lk
news@theempunal.com

தீம்புனல் THEEMPUNAL

# நெருக்கடியில் இருந்து மக்கள் மீண்டால்தான் நாடும் நெருக்கடியிலிருந்து மீளும்

நாடு வழமைக்குத் திரும்பிக் கொண்டிருக்கும் நிலையில் கொரோனா தொடர்பான அச்சம் எழத் தொடங்கியிருக்கின்றது. நாட்டின் பலபாகங்களிலும் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கையும் இறப்போரின் எண்ணிக்கையும் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாக அறிய முடிகின்றது.
இலங்கையில் கொரோனா அச்சம் முதல் முதல் ஆரம்பமான போது அரசாங்கத்துக்கும் மக்களுக்கும் இருந்த பயம் இப்போது இல்லை என்பதே வெளிப்படையானது. கொரோனாவின் இரண்டாவது தீவிரப்பரம்பலின் போது சுகாதாரத்துறையினர் மற்றும் எதிர்க்கட்சிகளின் தீவிரமான எதிர்ப்பினைத் தொடர்ந்து ஏறத்தாழ ஆறு மதங்களுக்கு நாட்டினைப் பகுதியளவான முடக்கத்துக்குக் கொண்டுவந்து அரசு கொரோனாவை ஓரளவு கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்திருந்தது. இந்நிலையில் மீளவும் நாட்டினை இயல்பு நிலைக்குக் கொண்டுவந்திருக்கும் நிலையில் மீண்டும் கொரோனா தீவிரம் காட்டத் தொடங்கியிருக்கின்றது. அண்மைய நிலவரப்படி நாட்டின் பல பகுதிகளிலும் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கத் தொடங்கியிருக்கின்றது. இந்நிலையிலேதான் பாடசாலைகளும் வழமைக்குத் திரும்பியிருக்கின்றன. எதிர்வரும் கிழமைகளில் பாடசாலையில் அனைத்து வகுப்பு மாணவர்களையும் உள்ளீர்த்து கற்பித்தல் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்குரிய அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில். இலங்கையின் சில பகுதிகளில் பாடசாலை மாணவர்கள் கொரோனாத் தொற்றுக்குள்ளாகியிருக்கின்ற செய்தியானது பெற்றோர் மத்தியில் அச்சத்தினை ஏற்படுத்தத் தொடங்கியிருக்கின்றது. தொடர்ந் தும் தமது பிள்ளைகளை எவ்வாறு பாடசாலைக்கு அனுப்புவது என்ற அச்சத்தில் அவர்கள் இருக்கிறார் கள்.

அரசு தொடர்ந்தும் நாட்டினை முடக்கத்துக்குள் வைத்திருக்கக் கூடிய நிலையில் இல்லை. நாட்டின் பொருளாதாரம் ஈடாட்டம் கண்டுள்ள நிலையில் நாட்டினை வழமையான செயற்பாட்டுக்குள் கொண்டு வந்தாலே பொருளாதாரக் கட்டமைப்புக்களை ஓரளவாவது மீளத் தூக்கி நிறுத்தலாம் என்ற நிலையிலேயே அரசாங்கம் உள்ளது. ஆனால் மக்கள் தொடர்ந்தும் இத்தகைய இடருக்குள் சிக்குண்டு உள, உடலியல் ரீதியான பாதிப்புக்கு உள்ளாகும் போதும் அவர்களை காப்பதற்குரிய பொறுப்பான நடவடிக்கையினையும் அரசாங்கமே செய்யவேண்டும். அவ்வாறு இல்லாமல் தங்களுக்குரிய பொறுப்பு இது இல்லை என்று பாரா முகத்துடன் அரசு இருந்துவிட முடியாது.

உண்மையில் அரசு நாட்டினை மீளத் திறக்கும் நடவடிக்கையினை முன்னெடுக்கும் போது கொரோனா பாதுகாப்புத் தொடர்பாகவும் கவனத்தில் கொண்டிருக்க வேண்டும். நோயோடு வாழப்பழகிக் கொள்ளுங்கள் என்று சப்பையாக அறிக்கை விடுவது பொருத்தமானதல்ல. நாட்டின் பொருளாதாரம் எவ்வளவு முக்கியமோ அதே அளவுக்கு மக்களின் பாதுகாப்பான வாழ்வும் முக்கியமானது. ஆனால் அரசு எப்போதும் மக்கள் தொடர்பில் கரிசனை கொண்டு செயற்படுவதாக இல்லை. இன்று மக்கள் கொண்டுள்ள நெருக்கடிகளைச் சொல்லித் தீர்க்க முடியாது. பொருட்களின் விலையேற்றம் தொடக்கம் பொருட்களை பெற்றுக் கொள்ள முடியாது திண்டாடுவது வரையில் அவர்கள் எதிர் கொள்ளும் உள நெருக்கடி அதிகமானது. இவ்வாறானவர்களின் மனநிலையையும் வாழ்வாதார நிலையையும் கருத்தில் கொள்ளப்படாமலே அரசு தனது வரவு செலவுத் திட்டத்தினையும் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்திருக்கின்றது. இது இன்னமும் மக்களை நெருக்கடிக்குள் தள்ளிவிடும் ஆபத்து உள்ளது என்றே ஆய்வாளர்களின் கருத்துக்கள் இருக்கின்றன.

தற்போதைய நிலவரப்படி நாட்டினை மீண்டும் முடக்க வேண்டிய சூழ்நிலை அண்மித்துக் கொண்டிருப்பதாகத் தெரிகின்றது. ஆனால் அரசு அத்தகைய முடக்கத்துக்கு ஒத்துவருமா என்பது கேள்விக்குறியான விடயம்தான். அப்படி ஒத்து வரவில்லை என்றாலும் மக்களைப் பாதுகாப்பதற்குரிய சரியான வழிமுறையினை முன்னெடுப்பதற்குரிய ஒழுங்குகளைச் செய்வது தொடர்பில் சிந்தித்தே ஆக வேண்டும். ஏதோ ஒருவகையில் கொரோனாப் பாதுகாப்புக்குரிய கட்டுப்பாடுகளை முன்னெடுக்க வேண்டும்.

ஓரளவு கட்டுப்பாட்டுக்குள் இருந்த கொரோனாப் பெருந்தொற்று இன்று தீவிர மடைந்திருப்பதற்கு தனியே அரசையும் குறை சொல்லிவிட முடியாது. மக்களும் நிச்சயமாக விழிப்புணர்வுடன் செயற்பட்டிருக்க வேண்டும். நாடு திறந்த பின்னர் நாட்டின் பலபாகங்களிலும் மக்களின் நடமாட்டம் தீவிரமாகவே அதிகரித்துள்ளது. கொழும்பில் விடுதிகள், என்றும் இல்லாதவாறு நிறைந்திருப்பதாகவும் வெளிநாட்டு சுற்றுலாப்பயணிகள் விமான நிலையங்களில் அதிகளவில் வந்து இறங்குவதாகவும் அறியக் கிடைக்கின்றது. இந்த இடத்தில் மக்கள் தங்களதும் தங்கள் சார்ந்தவர்களின் பாதுகாப்புத் தொடர்பிலும் அதிக அக்கறை எடுத்துச் செயற்பட வேண்டும். ஆனால் அவ்வாறான அக்கறையும் செயற்பாடும் மக்களிடம் இருப்பதாகத் தெரியவில்லை. கொண்டாட்டங்களையும் திருவிழாக்களையும் மகிழ்ச்சியுடன் விமர்சையாக முன்னெடுக்கும் மனநிலையிலேயே மக்கள் உள்ளனர் என்பதும் வெக்கத்துக்குரிய விடயமாகும். மக்கள் பொறுப்புணர்ந்து செயற்பட்டால், வரும் ஆபத்துக்களை ஓரளவு கட்டுப்படுத்த முடியும்.

அதேவேளை வெளிநாட்டிலிருந்து வருபவர்கள் எந்தவகையான தனிமைப்படுத்தல்களுக்கும் உட்படுத்தாமல் நேரடியாகவே வெளியேறுவதற்குரிய நடவடிக்கைகளை அரசு முன்னெடுத்துள்ளது. இது தொற்றின் வேகமான பரவலை ஏற்படுத்துவதற்குரிய ஏதுவான சாத்தியங்களைத் தோற்றுவிக்கும். என்பதும் வெளிப்படை. வெளிநாட்டில் இருந்து வருபவர்கள் தடுப்பூசி ஏற்றியி ருந்தாலும் அவர்கள் தொற்றுக்காவிகளாகி இருக்க வாய்ப்புண்டு என்பதனை அரசு கவனத்தில் எடுத்துச் செயற்படவேண்டும். ஆனால் அரசு அதற்கெல்லாம் கவனம் கொள்வதாகத் தெரியவில்லை. இப்போது அரசின் கவனம் மாவீரர் தினத்தினை யாராவது கொண் டாடிவிடுவார்களா? யாராவது விளக்கேற்றி விடுவார்களா? என்பதாகவே இருக்கின்றது. அதற்குரிய தடுப்பு நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்குரிய சூழ்ச்சித்திட்டங்களையே முன்னெடுத்து வருகின்றது. அதன் ஒரு செயற்பாடே பொலிசாரைக் கொண்டு மாவீரர் தினம் கொண்டாடுவதற்கான தடை உத்தரவினை அந்தந்த மாவட்ட நீதிமன்றங்கள் ஊடாகப் பெற்று அதனை உரியவர்களுக்குச் சேர்ப்பிக்கும் செயற்பாட்டினை முன்னெடுத்து வருகின்றது. இறந்து போனவர்களுக்கான நினைவேந்தலை தடுப்பதில் தீவிரம் காட்டும் அரசு மக்கள் இறந்து போகாமல் இருப்பதற்குரிய நடவடிக்கைகளை முன்னெடுப்பதில் தாமதம் காட்டி வருவதாகவே தெரிகின்றது. அரசு ஒன்றைப் புரிந்து கொள்ள வேண்டும் மக்கள் நெருக்கடியில் இருந்து மீண்டால் தான் நாடும் நெருக்கடியில் இருந்து மீளும். ■

◒ தந்திரன்

# இலங்கை அரசை நெருக்கடிக்குள்ளாக்கும் தருணம்



பட்ட காலிலே படும் என்பதற்கிணங்க மீண்டும் மீண்டும் அரசாங்கம் திணறிக் கொண்டிருக்கிறது. மிகப் பெரிய நெருக்கடிக்கு முகம் கொடுத்துத் தனது ஆட்சிக்காலத்தில் சேடம் இழுக்கிறது. வெகு விரைவில் ஆட்சிக் கவிழ்ப்புக்கான சாத்தியங்கள் தென்படுகிறது.

இயற்கை அனர்த்தம் ஒரு பக்கம் விலையேற்றங்கள் இன்னொரு பக்கம், போராட்டங்கள் மறுபக்கம், தமிழ்த் தரப்பின் அமெரிக்க விஜயம், பாதீட்டின் மீதான வாதப் பிரதிவாதங்கள், டெங்கு ஒரு புறம் மீண்டும் தன் கோர முகத்தினைக் காட்ட விஸ்வரூபம் எடுக்கும் கொரோனா இன்னொருபுறம் என, அரசு தன்னை ஆசுவாசப்படுத்திக் கொள்ள அவகாசமே இல்லாமல் இடி மேல் இடி விழுந்து கொண்டிருக்கிறது.

இந்த நிலையிலேதான் தமிழர்கள் பல்வேறு வழிகளிலும் மரணித்துப் போனவர்களின் நினைவினைச் சுடரேந்தி நினைவு கூரும் நாளாகவும் கார்த்திகை மாதம் திகழ்கிறது. இந்ந மாதத்தின் 20 ஆம் திகதியினை நினைவு கூரும் நாளாகப் பிரகடனப்படுத்த அரசாங்கத்திடம் ஆயர் தரப்பொன்று வேண்டுகோள் விடுத்துள்ளது. அதே வேளை இவ்வேண்டுகோளை, திரும்பப் பெறுமாறு இன்னொரு தரப்பு எதிர்க்கிறது.

கார்த்திகை மாதம் என்பது எவ்வளவு மகத்தானது என்பது அனைவருக்கும் தெரிந்ததே. அதற்காக கார்த்திகை மாதத்தில்தான் இறந்தவர்களை நினைவு கூர வேண்டிய அவசியமில்லை பிறிதொரு மாதத்தில் இந்நினைவு நாளை கொண்டாடலாம் என அரச தரப்பு நினைக்கின்றது போலும்.

கார்த்திகை மாதத்தில் மரணித்தவர்களின் நினைவு நாளைக் கொண்டாடுதல் என்பது கார்த்திகை 27 ஐ கொண்டாடுதல் என்றே அரச தரப்பு கருதுகிறது. அதாவது விடுதலைப் புலிகள் தமது வீரர்களின் உன்னதமான கொடையை மனத்தில் நிறுத்தி கொண்டாடுவது. அது மாத்திரமன்றி மாவீரர்நாள், ஒரு எழுச்சி நாளாகவே பார்க்கப்படுகிறது. இதனை அரச தரப்பு ஒரு பொழுதும் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை என்பது நிறுத்திட்டமான உண்மை.

தமிழீழ விடுதலைப் புலிகளின் மீளுருவாக்கம் மற்றும் தமிழீழ ஆதரவுத் தளம் என்பன அதிகரிக்கும் என்று அரசாங்கம் கருதுவது கூட அரசாங்கத்தின் கற்பனைக்கு அதிகமான அச்ச நிலைப்பாடே ஆகும். ஆனால் தற்போதைய நிலையில் இவை எவையும் சாத்தியம் இல்லை என்பது கூட அரசாங்கத்திற்குத் தெரிந்துமிருக்கிறது.

இந்த நிலையில் மிதவாத தமிழ்த் தேசியவாதிகள் சிலர் கார்த்திகை 27 இல் இறந்தவர்களின் தினம் கொண்டாடப்படுதல் வேண்டும் என உணர்ச்சி பூர்வமான கருத்துக்களை விதைத்த வண்ணமுள்ளனர். இதனாலேயே பாதிரிமார்களின் கார்த்திகை 20 ஆம் நாளினை வாபஸ் பெறும் வண்ணம் வற்புறுத்தும் செயற்பாடாகும்.

நினைவு நாளைக் கொண்டாட விரும்புபவர்கள் இன்றைய கள யதார்த்தத்தினைக் கருத்தில் கொள்ள வேண்டும். சிங்கள மக்கள் மத்தியில் நம்பிக்கையற்ற அரசாக, கோத்த - மகிந்த சகோதரர்களின் அரசு தற்போது விளங்குகின்றது. அந்த நெருக்கடியினை அதிகரிக்க வேண்டிய செயற்திட்டங்களையே தமிழர் தரப்புச் செய்ய வேண்டியதாகிறது. இன்னுமின்னும் அரசாங்கத்தினை நெருக்கடிக்குள் தள்ளி விடுவதே தமிழர்களுக்குக் குறைந்தபட்ச அரசி யல் விமோசனத்தையாவது ஏற்படுத்தும்.

மாறாக நினைவு நாளை எதிர்ப்பின் மத்தியில் கொண்டாடுகின்றோம் என்ற பேரில், திணறிக் கொண்டிருக்கும் குடும்ப அரசியலைக் காப்பாற்ற, சில தமிழ்த் தரப்புக்கள் எடுக்கும் முயற்சியாகவே அந்நாளைக் கருத வேண்டியிருக்கும். அதாவது நினைவு நாளைக் கொண்டாடுவதனால் அரசு தென்னிலங்கையில் புலிப் பயங்காட்டி மீண்டும் தம்மை ஒரு நாயக விம்பமாகச் சிங்கள மக்கள் மத்தியில் தம்மை காட்டுவதற்கு அரசு முனையலாம்.

ஆதலால் தீவிர தன்மை இல்லாமல், மரணித்தவர்களின் நினைவினை மானசீகமாகக் கொண்டாடுதல் பொருத்தமானது. அரசியல் விமோசனத்தின் பின்னர் இறந்தவர்களின் நினைவினை ஒவ்வொருவரும் தீவிரமாகவும் எழுச்சியுடனும் கொண்டாடப்படுதல் பற்றி தமிழர் தரப்பு யோசிக்கலாம். ■



செல்வின்

# தூரமாய் போய்க் கொண்டிருக்கிறது எங்கள் அறிவுப் பாரம்பரியம்

அறிவு என்பது அதிகாரம் செய்வதற்கான அஸ்திரமும் அல்ல. கூலிக்காக விற்பனை செய்யப்படும் பண்டமும் அல்ல. கேட்டால் மட்டுமே கொடுக்கப்படும் என்றவரை இரும்புப் பெட்டகத்தினுள் பதுக்கி வைத்திருக்கும் செல்வமுமல்ல.

அது பகிர்ந்து பெருகுவதற்கான அட்சயப் பாத்திரம். கூடிவாழும் மாந்தரின் நலன்களுக்காகத் தன்னார்வத்தைத் தரும் ஆத்மபலம். தேடுவதற்குக் கூட சுதந்திரம் இல்லாமல் மூலைகளுக்குள் முடக்கப்பட்டிருக்கும் ஒவ்வொருவனையும் தேடிச் சென்று அவனை அதிமானிடனாக்கும் மந்திரக்கம்பளம்.

படித்தவர்கள், பட்டம் பெற்றவர்கள், அனுபவங்களின் திரட்சியினால் ஆற்றல் பெற்றவர்கள், ஆண்டுகள் தோறும் நடக்கும் போட்டிப்பரீட்சைகளில் சாதனை படைத்து அதிகாரக்கதிரைகளை அலங்கரிப்பவர்கள் என மார்தட்டிப் பெருமை கொள்ளும் நாங்கள், எங்களுக்குள் ஒரு சுயபரிசோதனையினைச் செய்வோமா?

எந்தளவிற்கு நாங்கள் பெற்றிருக்கின்ற அறிவு எங்களைக் கூலிக்கு அமர்த்தியுள்ள நிறுவனத்தின் பணிப்பரப்பிற்கு அப்பால் நான் வாழும் சமூகத்திற்காகவும் சகமனிதனுக்காகவும் என்னால் பயன்படுத்தப்பட்டிருக்கின்றது?

நான்பெற்றுள்ள அறிவினை சமூகத்தினது ஆக்கபூர்வமான நலனுக்காக எந்தளவுக்கு நானே முன்வந்து பகிர்ந்துள்ளேன்? அல்லது யாராவது வந்து கேட்காதவரை நான் இறங்கித் தேட வேண்டிய அவசியமில்லை என்ற மமதையில் தந்தக் கோபுரத்தில் வாழுவதாக என்னை வரையறுத்துள்ளேனா?

நான் பாடசாலையிலும் பல்கலைக்கழகத்திலும் சிறப்பு அறிவுசார் நிறுவனங்களிலும் பெற்ற கோட்பாட்டு அறிவையும் நாட்பட்ட அறிவையும் இன்றைய, மாறிவரும் உலகின் சவால்களுக்கு ஏற்ப இற்றைப்படுத்தி இருக்கின்றேனா? அல்லது தசாப்தங்கள் தாண்டியும் பூஞ்சணம் பிடித்த அறிவினை பூமாலைகளுடன் எங்கள் வீட்டுச் சுவர்களில் புகைப்படமாகத் தொங்கவிட்டு எங்கள் அறிவின் தொன்மையுடன் தொலைந்து போகப் போகின்றோமா?

எங்களுக்கு வழங்கப்பட்ட கல்வியின் நோக்கம் எதுவென அறிந்து காலத்திற்கும் சமூகத்தின் தேவைக்கும் ஏற்ப அதனைப் புடம்போட்டு இந்த உலகைப் புரட்டிப்போட முனைந்திருக்கின்றோமா? இல்லை எங்கள் அறிவைத் தனது பணத்தினால் விலங்கிட்டு சிறைப்படுத்தி எங்கள் சொந்தச் சமூகத்தையும் அதன் பலங்களையும் வளங்களையும் கொள்ளையிடும் பகல்கொள்ளைக்கார நிறுவனங்களின் கீழ்ப்படிவும் வினைத்திறனும் உள்ள கொத்தடிமைகளாகக் கோடரிக்காம்புகளாக எங்கள் இருப்பினைத் தக்கவைத்துக்கொண்டு இருக்கின்றோமா?

இன்றைய கல்வி என்பது எங்கள் ஒவ்வொருவரினதும் பிறப்பின் உன்னதமான காரணத்தை மறுத்துச் சந்தைப்பொருளாதாரத்திற்கான பண்டங்களை உற்பத்தி செய்யும் உழைப்புச்சக்தியாகவே எங்களை மாற்றும் இலக்கினைக் கொண்டுள்ளது என்பதனை நாங்கள் புரிய முனைந்திருக்கின்றோமா?

இன்றைய கல்வி என்பது எங்கள் ஒவ்வொரு குழந்தையும் பிறப்பிலேயே கொண்டிருக்கும் பிறப்பாற்றல்களைப் புறந்தள்ளி தனது உற்பத்திப்பொறிமுறைக்குச் சலிக்காமல் தொடர்ந்து உழைக்கக்கூடிய சிந்திக்கும் தேவையற்றதும் மனிதவலுக்கொண்டதுமான முட்டாள்களைப் படைப்பதனையே தனது சாதனையாக நிலைநிறுத்தியுள்ளது.

கோட்பாடுகளையும் வாய்ப்பாடுகளையும் வரலாற்றின் பதிவுகளையும் வரட்டுச்சித்தாந்தங்களின் மூலவர்களின் பிறப்புக்குறிப்புகளையும் மனனஞ்செய்து அதனைப் பரீட்சைக் கடதாசிகளின் மேல் முழுமையாக எவன் வாந்தியெடுக்கின்றானோ அவனே முதன்மையானவன் என்ற அளவுதடிகளினால், பல ஆயிரக் கணக்கான பிறப்பாற்றலும் வல்லமையும் கொண்ட குழந்தைகளும் இளவல்களும் இன்று கல்வியில் தோற்றவர்களாக ஆண்டுதோறும் பிரகடனப்படுத்தப்படுகின்றார்கள். இதற்கு யார் காரணம்?

எங்கள் மாகாணம், கல்வியில் கடைநிலையில் நிற்கின்றது என்று கடைகடையாகக் கூவிக் காரணம் தேடுகின்றோமே.

உண்மையில் தோல்வி யாருக்கு? யார் தோல்வியைப் பிரகடனப்படுத்துவது? தோல்வி என்பதன் பொருள் யாது? வெற்றி தோல்வி என்ற விடயங்கள் உண்மையானவையா? “முதலைக்கு நீரில் பலம்: யானைக்கு நிலத்தில் பலம்” என்ற

> **முன்னரே தீர்மானிக்கப்பட்ட பாடத் திட்டங்களில் அச்சடிக்கப்பட்டுள்ள விடயங்களைக் குறிப்பிட்ட கால வரையறுக்குள் மாணவர்களுக்கு கும்பலாக போதிக்கும் கடமை மட்டும் கொண்டவர்களை ஆசிரியர்களாக உற்பத்தி செய்வதுதான் எங்கள் கல்விக் கழகங்களின் உன்னதமான தொழிற்பாடா? இவர்கள் இறங்கிவந்து பார்க்கமாட்டார்களா? தங்களிடமுள்ள பாடக்குறிப்புகளையும் தங்களது அணுகுமுறைகளையும் இற்றைப்படுத்தமாட்டார்களா?**

அனுபவமொழி சொல்லும் உண்மை யாது?

ஒவ்வொரு குழந்தையின் பிறப்பாற்றல்களையும் அடையாளங்கண்டு அதனைப் பட்டைதீட்டி, மெருகூட்டி அவனை மலைமேல் இட்ட தீபமாகப் பிரகாசிக்கச் செய்கின்றவனே உண்மையான ஆசிரியன்.

முன்னரே தீர்மானிக்கப்பட்ட பாடத் திட்டங்களில் அச்சடிக்கப்பட்டுள்ள விடயங்களைக் குறிப்பிட்ட கால வரையறுக்குள் மாணவர்களுக்கு கும்பலாக போதிக்கும் கடமை மட்டும் கொண்டவர்களை ஆசிரியர்களாக உற்பத்தி செய்வதுதான் எங்கள் கல்விக் கழகங்களின் உன்னதமான தொழிற்பாடா? இவர்கள் இறங்கிவந்து பார்க்கமாட்டார்களா? தங்களிடமுள்ள பாடக்குறிப்புகளையும் தங்களது அணுகுமுறைகளையும் இற்றைப்படுத்தமாட்டார்களா?

எங்கோ பாரிய தவறொன்று மிகவும் துல்லியமாகத் திட்டமிட்டு நிகழ்த்தப்பட்டுக் கொண்டிருக்கின்றது. பகுத்து அறியும் ஆற்றல் கொண்டவன் மனிதன். அதனால்தான் மனிதனை விலங்குகளிலும் உயர்வானவன் என்று சொல்கிறார்கள் அது உண்மைதான். உண்மைதானா?

விலங்குகளுக்கும் ஏனைய உயிரினங்களுக்கும் பகுத்தறியும் தன்மை இல்லையா? எந்தவொரு தேனீயாவது தேன் என எண்ணி வேறு பொருளை தனது தேன்கூட்டில் சேர்த்ததுண்டா? அதனால் தேன் விசமாகி தேனீ இனம் அழிந்ததாகக் கேள்விப்பட்டதுண்டா?

இயற்கையின் பருவகால மாற்றங்களுக்கு ஏற்ப முன்கூட்டியே தனது குழுவுக்காக உணவினைச் சேகரித்து, களஞ்சியப்படுத்தும் எறும்பு எப்போதாவது உணவல்லாத ஒரு பொருளைத் தனது களஞ்சியத்தில் சேகரித்திருக்குமா?

மிக அழகான கூடு அமைத்து வாழும் தூக்கணாங்குருவி தொடக்கம் அணிலும் காக்கையும் கூகையும் கூட தங்கள் இருப்பிடத்தினைத் தெரிவு செய்யும்போதும் அதனை அமைப்பதற்கான மூலப்பொருட்களை இயற்கையிலிருந்து தேர்ந்தெடுக்கும் போதும் எவ்வளவு சிறப்பான பகுத்து அறியும் திறனுடன் செயற்படுகின்றன என்பது நாங்கள் அறியாததா?

அப்படியானால் ஏனைய உயிரினங்களிலிருந்து மனிதனை வேறுபடுத்தியிருப்பது எதுவெனக்கேட்டால் நான் கனவு காணுதல் என்பேன். ஏன் ஏனைய உயிரினங்கள் கனவுகாண மாட்டதா? என்ற மறு கேள்வி இவ்விடத்தில் தோன்றும். அவைகளும் காணலாம். ஆனால் மனிதனிடமுள்ள சிறப்பு என்னவென்றால் தான்காணும் கனவினை நனவாக்குவதற்காக முயன்று அடைதல் என்ற பேருண்மையாகும்.

பேரறிஞர் அப்துல்கலாம் “கனவு காணுங்கள் என்றார்”, மகாகவி பாரதி “கனவு மெய்ப்படவேண்டும்” என்றார். எமது தற்போதைய கல்வியோ எமது குழந்தைகளுக்குக் கனவு காணும் உரிமையினை மறுக்கின்றது. எமது இளவல்களுக்குத் தங்கள் கனவுகளை நனவுகளாக மாற்றுவதற்குத் தங்கள் செயற்பாடுகளைத் தெரிவுசெய்யும் உரிமைகள் மறுக்கப்படுகின்றது.

பெற்றோராகிய நாங்களோ எமது பிள்ளைகளின் கனவு காணும் உரிமையினையும் அதற்காக, தனது செல்திசையினைத் தெரிவுசெய்யும் உரிமையினையும் மறுப்பதுடன் ஏதோ பிறப்பிலேயே குறைபாடுடைய பிறப்பாற்றல்கள் எதுவுமேயற்ற மாமிசப்பொதிகளை எங்கள் குழந்தைகளாகப் பெற்றுள்ளதாக எண்ணுகின்றார்கள். அந்த மாமிசப்பொதிகளை எப்படியாவது சிரமப்பட்டாவது உற்பத்திச் சங்கிலியில் உழைக்கும் சக்தியாக இணைத்து விட்டால் தங்கள் கடமை முடிந்ததாக எண்ணுகின்றார்கள். இதனை விட மாபெரும் கொடுமையினை எங்கள் பிள்ளைகளுக்கு வேறு யாரால் இழைக்கமுடியும்.

எங்கள் சிந்தனையில் மாற்றம் வரவேண்டும். எங்கள் அணுகுமுறையில் மாற்றம் வரவேண்டும். நாங்கள் எங்களை மிகக்கடுமையான சுயபரிசோதனைக்கு உட்படுத்தவேண்டும்.

அறிவினை எவ்வாறு சாதாரண மனிதனின் உடமையாக்குதல் என்பதற்கு இக் கட்டுரையினை எழுதிக்கொண்டிருக்கும் போது நான் சந்தித்த அனுபவம் இங்கு முதன்மையானது.


அண்மையில் இலங்கை அரசாங்கம் பொருளாதார முயற்சிகளில் ஈடுபட ஆர்வம் கொண்டுள்ளவர்களுக்குக் காணிகளை வழங்குவதாக அறிவித்துள்ளது. அவ்விண்ணப்பத்தையொட்டி பலநூற்றுக்கணக்கானவர்கள் தங்கள் ஆரம்ப விண்ணப்பத்தைச் சமர்ப்பித்திருந்தார்கள். தற்போது ஆரம்ப விண்ணப்பத்தைச் சமர்ப்பித்தவர்களுக்கான நேர்முகத்தேர்வுக்கான அழைப்பு கிடைத்துள்ளது. அவர்கள் தாங்கள் திட்டமிட்டுள்ள செயற்திட்டம் பற்றிய அறிக்கையுடன் நேர்முகதேர்வுக்குச் செல்லவேண்டியுள்ளது. பெரும்பாலான விண்ணப்பதாரிகள் மிகப்பெரும் நெருக்கடிக்குள் சிக்குப்பட்டுப்போயுள்ளார்கள். ஏனெனில் ஒரு செயற்றிட்டத்தை எவ்வாறு தயாரித்தல் என்பது தொடர்பான முன்பரிச்சயமோ பயிற்சியோ அவர்கள் பெற்றிருக்கும் சாத்தியம் மிகக்குறைவானதே.

இத்தகைய நிலையில் எனது நண்பர் ஒருவர் தனக்கு அறிமுகமான ஒருவரை என்னிடம் இன்று அழைத்துவந்தார். அவரது எதிர்பார்ப்பு அவருக்கான திட்டஅறிக்கை ஒன்றை இன்றே நான் தயாரித்து அவருக்குக் கொடுப்பதன் மூலம் நாளைய தினம் நடைபெற இருக்கும் நேர்முகத் தெரிவில் அவரை வெற்றி பெறச்செய்வதே.

அவர்தான் இத்திட்டத்தை நாளைய நேர்முகத்தெரிவில் சமர்ப்பித்து அங்கு கேட்கப்படும் வினாக்களுக்குத் தெளிவாக பதிலளிக்க வேண்டும். யாரோ எழுதிய வித்துவத்தனமான செயற்றிட்டத்தைச் சமர்ப்பித்து விளங்கப்படுத்துதலும் விவாதித்தலும் யாருக்கும் இலகுவானதும் அல்ல.

இங்குதான் ஒரு கருத்திட்டத்தை எவ்வாறு தயாரித்தல் என்ற நிபுணத்துவம்சார் திறனை சாதாரண மனிதனின் ஆளுமையாக மாற்றுவது என்ற கேள்வி எழுகின்றது. கருத்திட்டத்தைத் தயாரிப்பதற்காகத் தர்க்கவியல் சட்டகம் (Logical Framwork) மாற்றத்திற்கான கோட்பாடு (Theory of Change), திட்டத்தின் விளைவு (Impact of the Project), சாத்தியப்பாடுகள் தொடர்பான ஆய்வு (Fesiciability studies)

(13 ஆம் பக்கம் பார்க்க...)


நன்றி: அவந்தா ஆட்டிக்கல

# நாட்டின் பொருளாதாரம் களைத்துப் போன மாடுகள் இழுக்கும் வண்டி

சிக்மலிங்கம் றெஜினோல்ட்

வரவு - செலவுத்திட்ட விவாதம் நடந்து கொண்டிருக்கிறது. அப்படியொரு விவாதம் இந்த வரவு - செலவுத்திட்டத்திற்கு அவசியமா? ஏனென்றால் இது எந்த வகையிலும் மக்களுடைய வாழ்க்கையைப் பற்றியும் நாட்டின் எதிர்காலத்தைப் பற்றியும் பொருட்படுத்தாத வரவு செலவுத் திட்டமாகும். அரசாங்கமே அப்படித்தான். யாரையும் எதையும் பொருட்படுத்தாத அரசாங்கம். தலைவர்களும் அப்படித்தான். தங்களைத் தவிர வேறு எதைப் பற்றியும் எவரைப் பற்றியும் சிந்திக்காத தலைவர்கள். இந்தச் சீரில் வரவு - செலவுத் திட்டத்தைப் பற்றிச் சொல்லவும் வேணுமா?

இலங்கை மீளக் கடினமான மிகச் சிக்கலான பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கியுள்ளதை அரசாங்கத்தின் தொடர் நடவடிக்கைகள் வெளிப்படையாகச் சொல்கின்றன. என்னதான் புதிய புதிய பொருளாதாரத் திட்டங்களைப் போட்டாலும் அத்தனையும் பூச்சியத்தைத் தாண்டுவதாக இல்லை. இதனால் மக்கள் போர்க்காலத்தையும் விட மிக அழுத்தமான பொருளாதாரச் சுமைக்குள் தள்ளப்பட்டுள்ளனர். ஒன்று பொருட்களின் விலையேற்றம். இரண்டாவது பொருட் தட்டுப்பாடு. மூன்றாவது புதிய அறிவிப்புகளின் பிரகாரம் பொருட்களுக்கான மட்டுப்பாடு என இந்தச் சிக்கலான பிரச்சினை நீள்கிறது.

ஆனால், அரசுக்கும் வேறு வழியில்லை. ஏற்கனவே போரினால் நாடு கடன் சுமைக்குள் தள்ளப்பட்டிருந்தது. பில்லியன் கணக்கான கடன்சுமை. மக்கள் ஒவ்வொருவருடைய தலைக்கும் இந்தக் கடன் சுமை உண்டு. இலங்கையில் வாழும் ஒவ்வொருவரும் ரூ.670,000 கடன் வைத்திருப்பதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது. இதில் ரூ. 290,000 வெளிநாட்டுக் கடனாக பதிவு செய்யப்பட்டுள்ளது. ஒக்டோபர் 2020 இறுதியில்,

> **இலங்கையில் வாழும் ஒவ்வொரு பிரஜையும் 5 லட்சத்து 30 ஆயிரம் ரூபாய் கடன் சுமையுடனேயே இருப்பதாக முன்னாள் கணக்காய்வாளர் நாயகம் விஜயசிங்க கூறியுள்ளார். இலங்கைப் பிரஜை ஒருவர் வெளிநாடுகளுக்கு செலுத்த வேண்டிய அல்லது படுகடன் எனச் சொல்லப்பட கூடிய அளவில் ஒரு வருக்கு 530,000 ரூபாய் கடன் இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.**

மத்திய அரசு திருப்பிச் செலுத்த வேண்டிய மொத்த கடன் தொகை ரூ. 14,605.6 பில்லியன் என்று இலங்கை மத்திய வங்கி வெளியிட்டுள்ள அண்மைய புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. இந்தத் தொகையில் ரூ. 8,258.9 பில்லியன் உள்நாட்டு கடன் என்பதுடன் ரூ. 6,346.7 பில்லியன் வெளிநாட்டு கடன்.

இதன்படி, 2020 ஒக்டோபர் மாத இறுதியில் நாட்டின் தனிநபர் கடன் ரூ. 669,981. இதில் ரூ. 291,133 வெளிநாட்டுக் கடன்களாக பதிவு செய்யப்பட்டுள்ளன. அல்லது இந்த நாட்டின் ஒவ்வொரு குடிமகனும் ரூ. இருநூற்று தொண்ணூறாயிரம் கடனாளியாவார்.

இலங்கையில் வாழும் ஒவ்வொரு பிரஜையும் 5 லட்சத்து 30 ஆயிரம் ரூபாய் கடன் சுமையுடனேயே இருப்பதாக முன்னாள் கணக்காய்வாளர் நாயகம் விஜயசிங்க கூறியுள்ளார். இலங்கைப் பிரஜை ஒருவர் வெளிநாடுகளுக்கு செலுத்த வேண்டிய அல்லது படுகடன் எனச் சொல்லப்பட கூடிய அளவில் ஒருவருக்கு 530,000 ரூபாய் கடன் இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஒரு நாட்டின் மொத்தக் கடனை நாட்டின் மொத்த மக்கள் தொகையினால் வகுக்கும்போது ஒரு நபர் தாங்க வேண்டிய கடனின் அளவுதான் தனிநபர் கடன் சுமை. இலங்கை மத்திய வங்கியின் கூற்றுப்படி, நாட்டின் மக்கள் தொகை 21.8 மில்லியன் ஆகும். இந்த நிலைமை மிகவும் பாரதூரமானது. பிறந்த குழந்தை ஒன்றுக்கு 530,000 ரூபாய் கடன் என்று சொல்லப்படுகின்ற நிலையில் இலங்கையின் பொருளாதாரம் எந்த அளவிற்கு பாதிக்கப்பட்டுள்ளது என்பதை உணர வேண்டும்.

இந்த நிலைமைக்கு கடந்த 35 வருடங்களாக ஆட்சியில் இருக்கின்ற அரசாங்கங்களே பொறுப்புக் கூற வேண்டும். ஆனால் இப்பொழுது நிலைமை கையை மீறியுள்ளது என்றே சொல்ல வேண்டும்.

காரணம், இனமுரண்பாட்டைத் தீர்த்துக் கொள்ளாமல் போரை நீடிக்க விட்டதன் மூலமும் ஜே.வி.பி கிளர்ச்சி போன்றவை உருவாகுவதற்கான களச் சூழலைப் பேணியதன் மூலமும் நாட்டின் பொருளாதாரம் மிகப் பின்னடைந்தது. இதேவேளை இந்தக் காலப் பகுதியில் உலகளாவிய ரீதியில் ஏற்பட்ட பொருளாதார மாற்றங்களை இலங்கை எதிர்கொள்ள முடியாமல் தடுமாறியதும் பிற காரணங்களாகும். முக்கியமாக இலங்கைக்கான பொருளாதாரக் கொள்கை ஒன்றை வகுப்பதில் தொடர்ச்சியாகக் காணப்படும் பலவீனமான நிலை அதனை மேலும் நெருக்கடிக்குள்ளாக்கியிருக்கிறது. இதைக் குறித்த கவலைகளைப் பலரும் தொடர்ச்சியாக எழுதியும் பேசியும் வந்துள்ளனர். தற்போது வடக்குக் கிழக்கின் முன்னாள் முதலமைச்சராக இருந்த அண்ணாமலை வரதராஜப்பெருமாள் தொடர்ச்சியாக "எழுந்து முன்னேற முடியா வகையில் இறுகிப் போயிருக்கும் இலங்கைப் பொருளாதாரம்" என்ற தலைப்பில் எழுதி வருகிறார். இதில் அவர், "இலங்கையின் பொருளாதாரம் தற்போது எதிர்நோக்கி வரும் நெருக்கடிகளை பலரும் கொரோனாவோடு தொடர்புபடுத்தியே புரிந்து கொள்கின்றனர். அரசாங்கமும் அப்படியானதொரு பிரமையையே மக்களுக்கு வழங்கி வருகின்றது.

முன்னர் உள்நாட்டு யுத்தம் முடிந்து விட்டால் நாடு செழிப்படைந்து விடும் என்றார்கள்: இன்று கொரோனாவுக்கு முடிவு கட்டி விட்டால் நாடு மீண்டும் முன்னேற்றப்பாதையில் வீறு நடை போடத் தொடங்கி விடும் என்கிறார்கள்.

ஆனால், இலங்கையின் பொருளாதாரம் தனது சுயபலமாக உள்ள வளங்களைக் கொண்டு சரியான சுயாதீனமான பாதையில் சுயசார்புத் தளங்களைக் கட்டியெழுப்பத் தவறியமை இன்று நேற்றல்ல சுதந்திரம் பெற்ற காலம் தொட்டே தொடர்கதையாக உள்ளது. அரச படைகளுக்கும் புலிகளுக்கும் இடையிலான யுத்தம் முடிவுக்கு வந்ததைத் தொடர்ந்து உலக நாடுகள் பலவும் உலக அமைப்புக்கள் பலவும் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் புனர்வாழ்வுக்கும் யுத்த அழிவுகளை புனரமைப்பு செய்வதற்காகவும் அள்ளிக் கொடுத்த கொடைகளையும் மிகப் பெருந்தொகை கடனுதவிகளையும் கொண்டு நடத்திய பொருளாதார நடவடிக்கைகளை கூட்டிப் பெருக்கி யுத்தத்தின் பின்னர் நாட்டின் பொருளாதாரம் 30 சதவீதம், 35 சதவீதம் என பாய்ச்சலில் முன்னேறிச் செல்வதாக கணக்குக் காட்டியது அரசாங்கம்.

ஆனால் அது 2010 ஆம் ஆண்டு தொடங்கிய அந்தப் பாய்ச்சல் அடுத்த ஆண்டுகளில் இறங்கு முகமாகி 2014 ஆம் ஆண்டோடு நாட்டின் பொருளாதாரமானது களைத்துப் போன மாடுகள் இழுக்கும் வண்டி போல முன்னோக்கி நகர மறுத்தது மட்டுமல்லாது, பின்னோக்கி அடி நகரும் போக்கில் அமையத் தொடங்கியது. 2018ல் மெதுவாக பின்னோக்கி நகரத் தொடங்கிய பொருளாதாரத்தை கொரோனா நோயின் பாதிப்புகள் 2020 மற்றும் 2021ம் ஆண்டுகளில் மேலும் மோசமாக பின்தள்ளிக் கொண்டிருக்கின்றது. பலமான சுய தளங்களை இலங்கையின் பொருளாதாரம் கொண்டிருந்தால் இவ்வளவு தூரம் மீள முடியா அளவுக்கு ஆழமான பொருளாதார பின்னடைவுகளைகளை அடைந்திருக்க மாட்டாது" என்கிறார்.

வரதராஜப்பெருமாள் பொருளியல் துறையில் பயின்றவர் மட்டுமல்ல அந்தத் துறையில் சமூக நிலைப்பட்டுச் சிந்திப்பவரும் ஆவர். ஆகவே அவருடைய இந்த அவதானங்கள் முக்கியமானவை.

இதற்குத்தான் தேசியப் பொருளாதாரக் கொள்கையும் தேசியப் பாதுகாப்புக்கொள்கையைப் போல ஸ்திரமானதாக இருக்க வேண்டும் என்கிறோம். ஓரளவுக்கு இது நிலைத்தன்மையைக் கொண்டிருக்க வேண்டும். எந்தத் தரப்பு (எந்தக் கட்சியினர்) ஆட்சியிலிருந்தாலும் பாதுகாப்புக் கொள்கையில் பாரிய மாற்றங்கள் நிகழ்வதில்லை அல்லவா?, அதைப்போலப் பொருளாதாரக் கொள்கையிலும் ஒரு நிலைத்தன்மை பேணப்படுவது அவசியமாகும். இல்லையென்றால் பொருளாதார நடவடிக்கைகளில் மட்டுமல்ல தேசியப் பொருளாதாரத்தின் அடித்தளமே தளம்பத் தொடங்கி விடும்.

இதுவே இன்றுள்ள சிக்கலான நிலைமைக்குக் காரணமாகும். ஆட்சி நடத்திய ஒவ்வொரு தரப்பும் தமக்குத் தோதான முறையில் பொருளாதாரத் திட்டங்களையும் கொள்கைகளையும் மாற்றி மாற்றி வளைத்து நெளித்ததன் விளைவு இன்று கொவிட் என்ற உலகளாவிய பேரிடர்ச் சூழலில் நாட்டைத் திணறும் நிலைக்குக் கொண்டு வந்துள்ளது. இதற்கு அனைவருமே பொறுப்பாளிகள். போரை வளர்த்தவர்கள், அதற்கு அனுசரணையாக இருந்தவர்கள், இனமுரணைத் தீர்ப்பதற்குத் தடையாக இருந்தவர்கள், இருப்பவர்கள் என அனைவரும் பங்காளிகளாகும்.

பொருளாதார வளர்ச்சி உட்பட ஒரு நாட்டின் அத்தனை துறைகளின் வளர்ச்சிக்கும் அடிப்படையானது அமைதியும் ஜனநாயகச் சூழலுமாகும். இவை இரண்டும் இலங்கையில் மிக நீண்ட காலமாகவே இல்லாதிருந்தது. இதனால்தான் 1970 களில் இருந்த இலங்கையின் கைத்தொழில்கள் கூடப் பின்னாளில் இல்லாது போக வேண்டியேற்பட்டது. மட்டுமல்ல போர் முடிந்த பிறகு புலம்பெயர் சமூகத்தினர் உட்பட பல்வேறு தரப்பினராலும் முன்னெடுக்கத் துணிந்த முதலீட்டு முயற்சிகளும் வெற்றியடையாமல் முடக்கமடைந்தன. இதில் முக்கியமானது முதலீடுகளுக்கான சூழலை உருவாக்குவதில் கொண்டிருந்த அசிரத்தையும் சிக்கலான நடைமுறைகளுமாகும். குறிப்பாக முதலீட்டாளர்கள் திருப்தியடையக் கூடிய அளவுக்கு இலகு நிலை நடவடிக்கைகளை உருவாக்குவதில் காணப்பட்ட குறைபாடும் அவர்கள் முதலீடுகளை மேற்கொள்வதற்குத் தனியாக கொடுக்க வேண்டும் என்ற கொமிசன்களும் இந்தப் பாதிப்புக்குக் காரணங்களாகின.

இதேவேளை போருக்குப் பிந்திய பொருளாதாரக் கட்டமைப்பை உருவாக்குவதிலும் கட்டமைப்பதிலும் உலகளாவிய அரசியல் பொருளாதாரப் போக்கினைச் சரியாக உள்வாங்குவதிலும் காணப்பட்ட நெருக்கடிகளும் தளம்பலும் இன்னும் ஒரு பின்னடைவைத் தந்தது. ஆக மொத்தத்தில் இப்படியே முன்னேற்றத்துக்குப் பதிலாக பின்னடைவுக்கான ஏதுக்களே அதிகமாகக் காணப்பட்டன. இது இன்று பெரும் பொருளாதார நெருக்கடியாக உருவெடுத்துள்ளது.

நிதி அமைச்சுப் பொறுப்பை ஏற்றபோது பசில் ராஜபக்ஷ ஒரு எச்சரிக்கை அறிவிப்பை விடுத்திருந்தார். எதிர்பாராத முடிவுகளை தான் எடுக்கப்போவதாகவும் நாட்டின் நன்மைகளுக்காகவே அதைத் தான் செய்யப்போவதாகவும் அது அதிர்ச்சியாக இருக்கும் என்றும் கூறியிருந்தார். கூடவே தான் ஒரு கண்டிப்பான தந்தையைப்போல நடக்க வேண்டியிருக்கும் எனவும் கூறியிருந்தார். உண்மையில் அவர் மோசமான வரலாற்றுப் பேர்வழியாக மாறியிருக்கிறார்.

இலங்கையில் எல்லாம் நேர்மாறாகவே உள்ளன. இலங்கைக்கு என்றொரு பொருளாதாரக் கொள்கை உண்டா? இருந்தால் அது எப்படியானது? அந்தக் கொள்கை எந்த ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்படுகிறது? அதன் சாதக அம்சங்கள் என்ன என்று யாராவது கூற வேண்டும். ■

# இரட்டைக் குடியுரிமையைத் துறந்தவரின் ஈராண்டு ஆட்சிக்காலம்! காலிமுகத்திடல் சொல்லும் கதைகள்!

அவதானி



இலங்கையில் ஈஸ்டர் தாக்குதல் நடந்து ஈராண்டும் கடந்து ஏழு மாதங்களாகிவிட்டதென்றால், பொதுஜன பெரமுனையின் அதிபர் வேட்பாளர் அதிமேதகு கோத்தபாய ராஜபக்ஷ வெற்றிபெற்று இம்மாதத்துடன் இரண்டு வருடங்களாகிவிட்டன.

எனினும் குறிப்பிட்ட ஈஸ்டர் தாக்குதலில் கொல்லப்பட்டவர்களினதும் குடும்பங்களுக்கும் படு காயமடைந்தவர்களுக்கும் இதுவரையில் நீதி கிடைக்கவில்லை.

2019 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் குறிப்பிட்ட ஈஸ்டர் தாக்குதல் நடந்தபோது, மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாகவும் ரணில் விக்கிரமசிங்க பிரதமராகவும் பதவியிலிருந்தனர்.

மைத்திரி ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியையும், ரணில் ஐக்கிய தேசியக்கட்சியையும் பிரதிநிதித்துவம் செய்தவர்கள்.

ஈஸ்டர் சம்பவத்தினால், அதனை தடுத்திருக்க வேண்டிய அந்த சுட்டமண் - பச்சை மண் நல்லிணக்க அரசு, மீண்டும் பதவிக்கு வரமுடியவில்லை.

யாரை ஜனாதிபதி வேட்பாளராக அறிவிப்பது என்பதில் ரணிலுக்கும் சஜித் பிரேமதாசவுக்கும் மத்தியிலிருந்த இழுபறிநிலையில் மைத்திரி தனது ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் ஆதரவை, ராஜபக்ஷ சகோதரர்களுக்கு காண்பித்தார்.

இறுதியில் கடந்த 2019 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 17 ஆம் திகதி நடந்த ஜனாதிபதித் தேர்தலில், தனது அமெரிக்க இரட்டைக்குடியுரிமையை துறந்துவிட்டு வந்த, கோத்தபாய ராஜபக்ஷ சுமார் 69 இலட்சம் வாக்குகள் பெற்று வெற்றிபெற்றார்.



அவர் தன்னை எதிர்த்து ஐக்கிய தேசியக்கட்சியிலிருந்து ரணிலின் புறக்கணிப்போடு போட்டியிட்ட சஜித் பிரேமதாசவை விட 13 இலட்சத்து 60 ஆயிரம் வாக்குகள் அதிகமாகப் பெற்று வெற்றியடைந்தார். அதே சமயம் 2019 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் நடந்த நாடாளுமன்றத்திற்கான பொதுத் தேர்தலில் ரணிலின் ஐக்கிய தேசியக்கட்சி ஒரு ஆசனமும் பெறாமல் படுதோல்வியடைந்தது. ரணிலும் காலம் கடந்து அவரது கட்சிக்குக் கிடைத்த வாக்குகளின் அடிப்படையில் தேசியப்பட்டியல் ஊடாக நாடாளுமன்றத்திற்குப் பின்கதவால் வந்தார்.



சஜித் ஐக்கிய மக்கள் சக்தி என்ற அமைப்பை கட்டி வளர்த்து, எதிர்க்கட்சித் தலைவரானார்.

ரணில், சஜித், மைத்திரியின் அந்த நல்லாட்சிக் காலத்தில் 2019 ஏப்ரல் மாதம் நடந்த ஈஸ்டர் தாக்குதலுக்கு நீதியும் கிடைக்கவில்லை. அதனைச்சொல்லி, தாங்கள் பதவியிலிருந்திருந்தால், மக்களைக் காப்பாற்றியிருப்போம். ஏற்கனவே 2009 இல் இலங்கையில் பயங்கரவாதத்தை முற்றாக ஒழித்துக்கட்டிய பெருமை எங்களுக்கே இருக்கிறது எனச்சொல்லி, முதலில் அதிபர் பதவியிலும் பின்னர் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்துடன் அரசுக்கட்டிலிலும் ஏறியிருக்கும் பொதுஜன முன்னணி, விலைவாசி உயர்வையடுத்து மக்களின் அதிருப்தியைச் சம்பாதித்துள்ளது.



கடந்த வாரம் 16 ஆம் திகதி ஐக்கிய மக்கள் சக்தி அணியின் தலைவர் சஜித் பிரேமதாச தலைமையில் நடந்த ஆர்ப்பாட்டம் கொழும்பு காலிமுகத்திடலில் அரசுக்குச் சவால் விடும் வகையில் அமைந்தது.

அந்தக் காலிமுகத்திடலுக்கு வாய் இருக்குமானால், பேசும் சக்தியோடு அதன் வரலாற்றையும் கூறியிருக்கும். ஆனால், அந்த பெருந்திடல், கடலின் அலையோசையையும் கேட்டவாறு தவழ்ந்து செல்லும் காற்றோசையுடனும் தன்னை ஆசுவாசப்படுத்திக்கொண்டு, அங்கு ஆர்ப்பாட்டத்திற்காக ஒன்றிணையும் மக்கள் வெள்ளத்தின் ஆர்ப்பரிப்புகளையும் தலைமைதாங்கும் தலைவர்களினதும் ஆவேசப்பேச்சுக்களையும் கேட்டு ரசித்துக்கொண்டிருக்கிறது.

இற்றைக்கு 69 ஆண்டுகளுக்கு முன்னர் 1952 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 22 ஆம் திகதி அதே காலிமுகத்திடலுக்குக் குதிரைச்சவாரி செய்ய வந்த விடத்தில் தவறிவிழுந்து இறந்தார் சுதந்திர இலங்கையின் முதலாவது பிரதமர் டீ. எஸ். சேனநாயக்கா.

அதனால், இடைக்காலப் பிரதமரானார் அவரது புதல்வன் டட்லி சேனநாயக்கா. இவரது அரசு அப்போது நடைமுறையிலிருந்த பங்கீட்டு அரிசிக்கான மானியத்தை இரத்துச்செய்து, ஒரு படி அரிசியின் விலையை 25 சதத்திலிருந்து 70 சதத்திற்கு உயர்த்தியதனால், சம சமாஜக்கட்சியின் தலைவர் கலாநிதி என். எம். பெரேராவின் தலைமையில் மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணி நடந்து நிறைவடைந்ததும் அதே காலிமுகத்திடலில்தான். அதனைத்தான் இன்றளவும் இலங்கை வரலாற்று ஏடுகள் ஹர்த்தால் போராட்டம் என்று சொல்லிவருகின்றன.

அதன்பிறகு அந்தத் திடல் ஆர்ப்பாட்டங்களுக்கெனவே ஒதுக்கப்பட்டதாயிற்று. அத்துடன் மே தினம், சுதந்திர தினம் உட்பட அனைத்து அரசு விழாக்களும் அங்கு நடைபெற்றுவருகிறது.

2017 ஆம் ஆண்டில் எதிரணியிலிருந்த ராஜபக்ஷ சகோதரர்களினதும் அவர்களுடன் இணைந்திருந்த எதிரணிக் கட்சிகளினதும் ஆர்ப்பாட்டம் பெரியளவில் முன்னெடுக்கப்பட்டதும் அதே காலிமுகத்திடலில்தான்.

அதன்பிறகு இரண்டு வருடத்தில் 2019 இல் நடந்த அதிபர் தேர்தலில் ராஜபக்ஷ சகோதரர்களில் ஒருவர் பதவிக்கு வந்தார்.

மீண்டும் அதிபர் தேர்தலுக்கு போட்டியிட முடியாத அண்ணன் மகிந்தவுக்கு பதிலாக தம்பி கோத்தபாய அமெரிக்காவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டு களமிறக்கப்பட்டார். அண்ணன் பிரதமர். தம்பி ஜனாதிபதி, மற்றும் ஒரு தம்பி நிதியமைச்சர்.

நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷ, வரவு - செலவுத்திட்டத்தை சமர்ப்பித்துள்ள வேளையில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித், தனது தலைமையில் அதே காலிமுகத்திடலில் தனது எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்திருந்தார்.

அங்கு இவ்வாறு எதிர்ப்பு அலையை உருவாக்கினால், அடுத்த தடவை தங்கள் கைகளுக்கு அதிகாரம் வந்துவிடும் என்ற குருட்டு நம்பிக்கையை அந்தக் காலிமுகத்திடல் ஏற்படுத்திவிட்டதோ என்றும் யோசிக்கத் தூண்டுகிறன.

1952 இல் இடதுசாரிகள் நடத்திய ஹர்த்தால் போராட்டம் அன்று ஒரு அரசாங்கத்தையே கவிழ்த்தது. அதற்கு ஈடுகொடுக்கமுடியாமல், அப்போதைய பிரதமர் டட்லி சேனநாயக்கா, தனக்கு வயிற்றுவலி எனச் சொல்லிக்கொண்டு பதவி துறந்தார். அதனால், உறவுமுறையில் அவரது மாமாவான சேர். ஜோன். கொத்தலாவல பிரதமரானார்.

அதன்பிறகு எத்தனையோ அரசுகள் மாறி மாறி வந்துவிட்டன.

> **1952 இல் இடதுசாரிகள் நடத்திய ஹர்த்தால் போராட்டம் அன்று ஒரு அரசாங்கத்தையே கவிழ்த்தது. அதற்கு ஈடுகொடுக்கமுடியாமல், அப்போதைய பிரதமர் டட்லி சேனநாயக்கா, தனக்கு வயிற்றுவலி எனச்சொல்லிக்கொண்டு பதவி துறந்தார். அதனால், உறவுமுறையில் அவரது மாமாவான சேர். ஜோன். கொத்தலாவல பிரதமரானார்.**

விலைவாசி உயர்வை எதிர்த்து அனைத்துக் கட்சிகளும் மக்களைத்திரட்டி ஆர்ப்பாட்டம், பேரணி நடத்திவிட்டன.

காலிமுகத்திடலும் அதற்காகவே உருவானது போன்று அத்தகைய ஆர்ப்பாட்டங்களை அனைத்து கட்சிகளும் அதற்காகவே நித்தியமாக்கிவிட்டது.

ஆறு தசாப்தங்களுக்கு முன்னர் அரிசியின் விலை சதக்கணக்கில் உயர்ந்ததற்கு எதிர்ப்புத் தெரிவித்து நடத்திய போராட்டம் வெற்றி கண்டது.

ஆனால், இன்று அரிசி மட்டுமல்ல, அத்தியாவசிய உணவுப்பொருட்கள் மற்றும் எரிபொருள் உட்பட அனைத்தும் விலையுயர்ந்துள்ள காலப்பகுதியில் சஜித் தலைமையில் நடத்தப்பட்டிருக்கும் ஆர்ப்பாட்டம் இலங்கையின் தற்போதைய அரசை கவிழ்த்துவிடுமா..? அல்லது மாற்றிவிடுமா..? அல்லது காலிமுகத்திடல் கண்ட ஆர்ப்பாட்டங்களில் இதுவும் பத்தோடு பதினொன்றாக அமைந்துவிடுமா..?

காலிமுகத்திடலும் அதனருகே ஆர்ப்பரித்துக் கொண்டிருக்கும் கடல் அலைகளும் மாறவில்லை. ஆனால், விலைவாசிகள்தான் மாறிக்கொண்டிருக்கின்றன. அங்கு வந்து கோஷம் எழுப்பும் தலைமைகளும் மாறிக்கொண்டிருக்கின்றன. ■

யாதுமானவன்

01

## இலங்கையின் இன முரண்பாட்டின் தோற்றுவாயும் நாடு குறித்த பிரக்ஞையும்


# இலங்கையில் தமிழர்களின் அரசியல் உறுதிப்பாடு

## ஏன் கேள்விக்குள்ளாகியிருக்கின்றது?

(06.11.2021 இன் தொடர்ச்சி)

சிங்கள மக்களின் மனநிலை ஏனைய இனத்தவர்களை இலங்கையின் அந்தஸ்துக்குரியவர்களாக ஏற்றுக் கொள்ள மறுத்தே வந்திருக்கின்றது. ஏதோவொரு வகையில் தங்களுடைய இருப்பினையும் அதிகாரத்தினையும் பாரிய அளவில் நிலைநிறுத்துவதற்குரிய செயற்பாடுகளையே அன்றுதொட்டு இன்றுவரை முன்னெடுத்து வருகின்றனர். தமிழ் மன்னர்களை சிங்கள மன்னர்கள் என்று உருமறைப்புச் செய்தது போலவே சாதாரண தமிழ் மக்களையும் சிங்கள இனமக்களான இனமறைப்பு வேலைத்திட்டங்களையும் செயற்படுத்தி வந்திருக்கின்றனர். இதற்குரிய ஆதாரங்களைக்கூட முற்றுமுழுதாக அழிப்பதில் திட்டமிட்ட செயற்பாடுகளை முன்னிறுத்தியுள்ளனர். ஒருவகையில் சிந்தித்தால் எதிர்காலத்தினை நன்கு உணர்ந்து செயற்பட்டதில் அவர்கள் வல்லவர்களாகவே உள்ளனர். அவர்கள் அளவிற்கு தமிழ் மக்களும் தமிழ்த் தலைவர்களும் செயற்பட்டிருக்கவில்லை என்பது உண்மை. இதன் வெளிப்பாடு தமிழ் மக்கள் தங்களைப்போலவே ஏனைய இன மக்களையும் இலங்கையின் இனக்குடிகளாக அங்கீகரித்து வந்திருக்கின்றனர் என்பதே. ஆனால் சிங்கள அதிகாரத்தினரிடமும் சரி சாதாரண மக்களிடமும் சரி தமிழரையோ ஏனைய இனத்தவரையோ இலங்கைக்கு உரித்துடைய மக்களாகக் கருதும் மனநிலை அன்றுதொடக்கம் இன்றுவரை இருந்து வந்ததில்லை. அவ்வாறு ஏற்றுக் கொள்ள நேர்ந்தால். சிங்களம் பேசும் மக்களுக்கென்று இருக்கக்கூடிய தனிநாடான இலங்கையும் இல்லாமல் போய்விடும் என்ற அச்சமே அவர்களிடம் அதிகம் காணப்படுகின்றது. சிங்களவர்களைப் பொறுத்தவரையில் தமது மொழிக்கென்றொரு தனிநாட்டு அடையாளம் அவசியம் என்ற மனநிலையே அதிகம் இருந்து வருகின்றது. அத்தகைய மன எண்ணமே அவர்களைத் தமது இருப்பை நிலைநிறுத்தக் கூடிய ஆதாரங்களைப் புனையவும் இருக்கும் ஆதாரங்களைப் பாதுகாக்கவும் ஏனைய இனத்துக்குரிய அடையாளத்தை அழிக்கவும் வழிப்படுத்தி வந்துள்ளது. ஆனால் தமிழர்களைப் பொறுத்தவரையில் ஆரம்ப காலத்தில் இருந்து சிங்கள இனத்தோடு சேர்ந்து வாழக் கூடிய கௌரவமான வாழ்வுரிமையினையே கோரி வந்திருக்கின்றனர். ஆனால் அதனைக் கூட நிறைவேற்றிக் கொடுப்பதற்கு அரச தரப்போ, சிங்கள மக்களோ தயாராக இருக்கவில்லை. சிங்கள அதிகாரத்தினர் தமிழ் மக்களுக்குரிய அனைத்து உரிமைகளையும் இலங்கையில் இருந்து இல்லாமல் செய்து வந்தேறு குடிகள் என்று நிறுவுவதிலேயே முனைப்புக் கொண்டிருந்தனர். இதனை சாதாரண சிங்கள மக்களும் அங்கிகரித்தே வந்திருக்கின்றனர். ஏனெனில் இத்தனை வருட இன அழிப்புப் போராட்டத்தில் தமிழ் இனம் தமது இருப்புக்குறித்துப் போராடி வருகின்றபோது சிங்கள மக்கள் நாங்கள் தமிழர்களோடு அமைதியாகவும் ஒற்றுமையாகவும் வாழவே விரும்புகின்றோம் என்று ஒன்றிணைந்து குரல் எழுப்பவில்லை. ஒருவேளை அவர்கள் அவ்வாறு குரல் எழுப்பியிருந்தால் நாட்டுக்குள் இத்தனை பாரியபிரச்சினைகள் தோன்றவோ அழிவு ஏற்படவோ வாய்ப்புக்கள் இல்லாது இருந்திருக்கலாம். இத்தனை யாண்டு சிங்கள மக்களின் மௌனம் தமிழர்களை தங்களில் ஒருவராகக் கருதவில்லை என்பதனையே வெளிப்படுத்தியிருக்கின்றது. ஆனால் தமிழ்த் தரப்புப் போராட்டம் நிச்சயமாக சிங்கள மக்களுக்கு எதிரானதில்லை. தனியே தமது இருப்புக் குறித்த போராட்டமாகவே இருந்து வந்திருக்கின்றது.

இலங்கையில் மேற்கத்தேயரின் ஆட்சியதிகாரம் நிலைபெற்று வரும் வரையில் இலங்கையின் இனக் குழும வரலாற்றில் பாரிய முரண்பாட்டு நிலை இல்லாது இருந்ததாக அவதானிக்கப்பட்டு வருகின்ற போதும். சிங்கள மயமாக்கம் தொடர்பில் அதிகாரத்தில் இருந்தவர்கள் சிந்தித்தே வந்திருந்தனர். சிங்கள ஆதிக்கவர்க்கத்தினரைப் பொறுத்தவரையில். தமது மதத்திற்கும் தமது மொழிக்கும் என்றொரு தனித்துவமான நாடு அவசியம் என்ற மனநிலையின் காரணமாக ஏனைய இனத்தினரை இலங்கையின் இராண்டாந்தரப் பிரசைகளாக கருதி வந்திருக்கின்றனர். அதனால் அவர்களை எப்போதும் தமக்கு கீழ் நிலையில் வைத்து ஆட்சி செய்யவே விருப்பம் கொண்டு செயற்பட்டிருக்கின்றனர் என்பதும் வெளிப்படை.


குவேனியிடம் விஜயன் அடைக்கலம் கோருதல்



விஜயன் வருகை பற்றி இலங்கை அரசு வெளியிட்டு பிறகு வாபஸ் பெற்றுக்கொண்ட தபால் தலை

இலங்கையில் தமிழ் அரசர்கள் அதிக ஆதிக்கம் மிக்கவர்களாக இருந்து வந்ததோடு முழுநாட்டையும் தமது ஆட்சியின் கீழ் கொண்டு வந்திருந்த வரலாறு சொல்லப்பட்டு வந்திருந்த போதிலும் அதனை நிரூபிக்கும் சாட்சியங்களை தேடிப்பெறுவதிலேயே சிக்கல்கள் இருக்கின்றன. இது சிங்கள ஆதிக்க சக்திகளால் உரு மறைப்புச் செய்யப்பட்டு வந்திருக்கின்றது என்பது அறியக் கூடியதான ஒன்றாகவே இருக்கின்றது. பல தமிழ் மன்னர்களை சிங்கள மன்னர்கள் வெற்றி கொள்வதற்கு எடுத்த பிரயத்தனங்களையும் பலவேறு சூழ்ச்சிகளின் நிமிர்த்தமே அவர்களை வெல்லக் கூடியதாக இருந்தமையினை அறியும் போது இது புலப்பாட்டுக்குரியதாகவே இருக்கின்றது. துட்டகைமுனு எல்லாள மன்னனை சூழ்ச்சி செய்தே வீழ்த்தினான் என்ற வரலாற்று உண்மை இதன் பாற்பட்டதாகவே இருக்கின்றது.

அதேவேளை தென்னிந்தியாவில் இருந்து படையெடுத்து வந்த சோழ, நாயக்க வம்சத்து தமிழ் மன்னர்கள் இலங்கையின் மிகப்பெரிய ஆதிக்க சக்திகளாக இருந்தனர் என்பதும் அவர்கள் தமது காலத்தில் கட்டுவித்த ஆலயங்கள் மிகப் பெரும் சாட்சியாக இருக்கின்றன. இத்தகையோரின் ஆட்சிக்காலத்தில் சிங்கள மக்கள் தென்னிலங்கையில் சென்று நிலைபெற்றே தமது அதிகாரத்தினை நிலைநிறுத்த முனைந்திருக்கின்றனர். கிட்டத்தட்ட பிரிட்டிஸ் ஆட்சியாளர்கள் இலங்கையினை தமது பூரண கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரும் வரையில் இலங்கையில் தமிழ் மன்னர்களின் அதிகாரம் நிலைபெற்று இருந்திருக்கின்றது.

சிங்கள இனத்தவருக்கும் தமிழ் இனத்தவர்க்கும் இடையே இன்றுவரை நிலவிவரும் பகை முரண்பாடானது இன முரண்பாடாக சொல்லப்பட்டு வருகின்ற போதும் நாட்டின் ஆதிக்கத்தினை முழுக்கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கும் மனோநிலையே சிங்களப் பெரும்பான்மையினரிடத்தில் காணப்படுகின்றது. இதன் படிக்கட்டுமான வளர்ச்சியே இன்று இனமுரண்பாடாக விஸ்வரூபம் எடுத்து நிற்கின்றது. ஒரு தேசத்துள் ஒன்றுக்கு மேற்பட்ட இனம் இருக்கின்ற போது ஒரு இனத்துக்குரிய கௌரவத்தினை இன்னொரு இனம் வழங்குவதற்கு தயாராக இல்லாத இடத்து இத்தகைய முரண்பாடுகள் ஏற்படுவது தவிர்க்கமுடியாத ஒன்றுதான். உலகில் பல நாடுகள் இத்தகைய போக்கிலிருந்து இன்று விடுபட்டு வளர்ச்சிப்போக்கினை எட்டியிருக்கின்றன. இலங்கை இத்தகைய இனமுரண்பாட்டுப் போக்கினை கைவிட்டு எல்லா இன மக்களுக்குமான கௌரவத்தினையும் வாழ்வுரிமையையும் வழங்க மறுத்து வருவதே இன்றுவரை தன்னிறைவு அடையாமல் இருப்பதற்கான காரணமாகவும் அமைகின்றது. உள் நாட்டுக்குள் இருக்கும் அகநிலை முரண்பாடுகளை நீக்கம் செய்யாமல் எந்த நாடும் உலக நாடுகளின் போக்குகளுடன் நிலைத்து நின்று செயற்பட முடியாது என்பதற்கு இலங்கைத் தீவு மிகப் பெரிய உதாரணமாகும்.

இவ்வாறான அகமுரண்பாடுகளை களைந்து நாட்டினை வெற்றிப் பாதைக்கு இட்டுச் செல்லக்கூடிய தலைமைத்துவத்தினைக் கொண்டவர்களாக இதுவரை சிங்களப் பெரும்பான்மை இனத் தலைவர்கள் உருவாக்கம் பெறவில்லை. கடந்த காலங்களிலும் சரி தற்போதைய காலங்களிலும் சரி ஆட்சி பீடம் ஏறும் தலைவர்கள் தமது அரசியல் இருப்பினைத் தக்கவைப்பதற்குக் கையாளும் ஒரே ஆயுதமாகவே இன முரண்பாடு கையாளப்பட்டு வந்திருக்கின்றது. இலங்கை சுதந்திரத்திற்குப் பின் ஆட்சி பீடமே-றிய அரச தலைவர்கள் ஆரம்பத்திலிருந்தே சிங்கள மக்களிடம் இலங்கை சிங்கள பௌத்தர்களுக்குரிய நாடு என்று உருவேற்றம் செய்து வந்திருக்கின்றனர். அத்தகைய உருவேற்றத்தின் பாற்பட்டு சிங்கள மக்களும் தமது அகத்தில் மிக ஆழமாக அதனைப் பதித்து வைத்திருப்பதோடு இன்றும் இலங்கையில் இனமுரண்பாட்டினைக் கடக்கமுடியாத சுமையை இலங்கைத் தீவு சுமந்து வருவதற்குக் காரணமாகின்றது. இத்தகைய அகமுரண்பாட்டினை சிங்களத் தலைவர்கள் மட்டுமல்ல இலங்கையினை காலனித்துவ ஆட்சிக்கு உட்படுத்தி வந்திருந்த பிரிட்டிஷ் ஆட்சியாளர்களும் மக்களிடையே உருவேற்றம் செய்து வந்திருக்கின்றார்கள். அதிலும் அவர்கள் இன்னும் மேலே சென்று ஒவ்வொரு இனத்துக்குள்ளும் உள்ளார்ந்தமாக இருந்த சாதிப் பிரிவினைக்கு ஊக்கம் கொடுத்து மேலும் அகநிலைச் சிக்கலை நாட்டில் உருவாக்கியிருக்கியிருந்தனர். இத்தகைய சாதிப்பிரிவினைகளுக்குள் அதிகம் அகப்பட்டுப்போன இனமாக தமிழினமே சிறப்பாக விளங்கியிருந்தது.

இலங்கையில் மன்னர் ஆட்சி நிலைபெற்றிருந்த காலத்தில் பிரபுக்களாக இருந்த நிலச்சுவாந்தர்கள் பிரிட்டிஷ் ஆட்சிக்காலத்தில் மேல் நிலைச் சமூகமாக எழுச்சி பெற்றிருந்தனர். அவர்கள் பிரிட்டிஷ் ஆட்சியாளர்களிடம் நட்புப்பாராட்டவும் அவர்களிடமிருந்து நலனைப் பெறவும் ஏதுவாக அவர்களது செல்வந்த நிலை செல்வாக்குச் செலுத்தியிருந்தது. இதன் பயனாக பிரிட்டிஷ் ஆட்சியாளர்களின் அனைத்துச் சலுகைகளையும் பெற்று மேலும் தங்களை கல்வியிலும், பொருளாதாரத்திலும் தங்களை வலுப்படுத்திக் கொண்டனர். இந்நிலையில் பொருளாதார வசதி வாய்ப்புக்கள் அற்ற குடிகள் கீழ்நிலைக்குடிகளாக கருதப்பட்டு அடக்கப்பட்டனர். அவ்வாறு செல்வாக்குப் பெற்ற மேல் நிலைக் கீழ்நிலைச் சமூகநிலைமை தொடர்ந்து வந்த காலங்களிலும் நிலைத்து நிற்கத் தொடங்கியது. இது சாதியமைப்பு முறையாக தீவிரம் அடையத் தொடங்கியதும், மேல் நிலைச்சாதி கீழ்நிலைச்சாதி என்ற பாகுபாட்டு தமிழினத்துக்குள்ளே மேலோங்கத் தொடங்கியது. இது தொடர்ந்து வந்த காலங்களில் சாதியப்போராட்டங்களை ஏற்படுத்தவும் தமிழினத்துக்குள்ளே அகமுரண்பாட்டுச் சிக்கல் நிலை பெறத் தொடங்கியது. இத்தகைய சாதிய அமைப்பு முறை சிங்கள இன மக்களிடையே இருந்தாலும் அதிகளவு செல்வாக்குநிலைக்கு உட்படவில்லை. அவர்கள் இனம் என்ற அடிப்படையில் ஒன்றுபட்டு நின்றதே இன்றுவரை மேலாண்மை இனமாக தங்களை நிலைநிறுத்துவதற்கு ஏதுவானதாக இருந்து வருகின்றது. ஆனால் தமிழ் இனம் இத்தனை போராட்டம், உயிர் இழப்புக்களைச் சந்தித்தும் கூட சாதிய முரண்பாட்டு நிலைக்குள் இருந்து வெளிவர முடியாத இனமாகவே விளங்குகின்றது. இது தமிழினம் தமக்கான அடையாளத்தினை நிலைநிறுத்துவதற்கும் சிங்கள ஆதிக்க வர்க்கத்தினரிடமிருந்து தமக்கான உரிமையினை மீட்டெடுப்பதற்கு தடையாகவும் விளங்குகின்றது.





(தொடரும்)

# புதிய அணுகுமுறை தந்திரோபாயமற்ற தமிழர் அரசியல் களம்

“தமிழர்கள் அரசியலை எப்படிப் பார்க்கிறார்கள்?” என்று ஒரு அதிரடிக் கேள்வியைத் தூக்கிப் போட்டார் நண்பர் ஒருவர்.

1980 களில் விடுதலை இயக்கமொன்றில் தீவிரமாகச் செயற்பட்டவர். அதில் ஏற்பட்ட கசப்பான அனுபவங்களால் இப்பொழுது பிச்சையும் வேண்டாம் நாயும் வேண்டாம் என்ற கணக்கில் அரசியலை விட்டொதுங்கி, விவசாயம் செய்து கொண்டிருக்கிறார்.



கருணாகரன்

“விவசாயத்தில் லாபமோ நட்டமோ என்பதற்கு அப்பால், ஒரு நிறைவுண்டு. குறைந்தபட்சம் நாலு மனிசருக்குச் சாப்பாடு போடக் கூடிய மாதிரியாவது இருக்கும். நாமும் நம்முடைய உழைப்பிலிருந்தும் உற்பத்தியிலிருந்தும் சாப்பிட முடிகிறது” என்கிறார்.

நண்பர், கடந்த இருபது ஆண்டுகளாகப் பத்திரிகைகளைப் படிப்பதைக் கூட நிறுத்தி விட்டார். தமிழ் இணையங்களைப் பார்ப்பதே இல்லை. காரணம் என்ன என்று கேட்டபோது, “எதையாவது புதிதாக அறியக் கூடியதாக இருந்தால்தானே அவற்றைப் படிக்க வேணும்? ஏதாவது புதிய அசைவுகள், புதிய மாற்றங்கள் நிகழாத - நிகழமுடியாத இந்த அரசியலை எதற்காகக் கவனிக்க வேணும்? ஒரு புதுமையும் இல்லாத பழைய - பழகிய சங்கதிகளைத் திரும்பத் திரும்பப் படிப்பதால் என்ன பயன்? அதைப் பாடமாக்கிக் கொண்டிருப்பதால் என்ன லாபம்? வாழ்க்கைக்கு உதவாதே” என்று சொல்கிறார்.

அதெப்படி, இப்படி எல்லாவற்றையும் ஒரேயடியாகத் தூக்கியெறிய முடியும்? இப்படி ஒட்டுமொத்தமாக எல்லாவற்றையும் எல்லாத்தரப்பையும் நிராகரிப்பது பொருத்தமாக இல்லையே. இதில் ஒரு வகையான அதிகாரத்தனமல்லவா உள்ளது. மற்றது உங்களுக்கு ஏற்பட்ட கசப்பான அனுபவங்கள்தான் இந்த நிராகரிப்பைச் செய்யத் தூண்டுகின்றன. இது ஒரு வகையான உளச் சோர்வின் வெளிப்பாடு. நம்பிக்கையீனத்தினால் உருவாகிய உளச்சோர்வு. இதை வைத்துக் கொண்டு பெருந்திரள் மக்களுடைய நம்பிக்கைகளையும் தெரிவுகளையும் நீங்கள் புறக்கணிக்கவோ நிராகரிக்கவோ முடியாதல்லவா. அந்த உரிமை உங்களுக்கில்லையே?” என்று கேட்டேன். சிரித்தார்.

“ நான் எதையும் ஒரேயடியாகத் தூக்கியெறியவில்லை. அந்தளவுக்கு முட்டாள் அல்ல. வரலாற்று அனுபவங்களின் அடிப்படையில், நமக்கு முன்னே உள்ள உண்மைகளின்படிதான் இந்த முடிவுக்கு வந்திருக்கிறேன். உங்களிடம் கேட்கிறேன்,

“நம்பிக்கையீனம் எப்படி ஏற்பட்டது? யாரால் ஏற்பட்டது? ஏன் ஏற்பட்டது? இதற்கான பொறுப்பை ஏற்றுக்கொள்வது யார்?” என்று பதில்க் கேள்வி கேட்டார்.

மேலும் அவர் சொன்னார், “நாற்பது வருசமாக ஒரே செய்தியைத்தானே தமிழ் ஊடகங்கள் வெளியிட்டுக் கொண்டிருக்கின்றன. சுதந்திரன் பத்திரிகையில் வந்த செய்திக்கும் இப்பொழுதுள்ள பத்திரிகைகளில் வருகிற செய்திகளுக்கும் இடையில் என்ன வித்தியாசம் இருக்கு? சுந்தரலிங்கம், நாகநாதன், அமிர்தலிங்கம் போன்றவர்கள் சொன்னதைத்தானே இப்பவும் சம்மந்தனும் மாவை சேனாதிராஜாவும் சிறிதரனும் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். உலகம் எவ்வளவு மாறி விட்டது. சர்வதேசப் பரப்பில் புதிய அணுகுமுறைகள், மாற்று நிலைப்பாடுகள், தந்திரோபாயம் என்று எவ்வளவு பெரிய வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. ஆனால் இங்கே இருபது வருசமாக ஒரே கட்டுரையைத்தானே பெரும்பாலான தமிழ் அரசியல் ஆய்வாளர்கள் எண்டு சொல்லுகிற ஆட்கள் எழுதிக் கொண்டிருக்கிறார்கள்! யாராவது இந்தப் பிரச்சினைக்கு இவ்வாறு தீர்வுகளைக் காண முடியும் என்று ஏதாவது புதிய ஐடியாக்களை முன்வைத்திருக்கிறார்களா? ஆக மிஞ்சிப் போனால், இந்தியத் தூதருடன் சந்திப்பு, டில்லிக்குப் பயணம், பிரித்தானியத் தூதரிடம் தமிழ் மக்களின் பிரச்சினை பற்றி எடுத்துரைப்பு, அமெரிக்கப் பிரதிநிதி நிலைமையைக் கேட்டறிந்தார்... வருகின்ற செய்திகளுக்குப் பின்னால் இழுபட்ட கற்பனைகளை எழுதிக் குவிக்கிறார்கள். இவர்கள் தாங்கள் எழுதிய அத்தனை கட்டுரைகளையும் தாங்களே ஒருதடவை திரும்பப் படித்துப் பார்த்தால் உண்மையில் வெட்கப்படுவார்கள். மனச்சாட்சியிருந்தால் இந்தத் துக்கத்தினால் இனிமேலாவது இந்த வெங்காய வேலை வேண்டாம் என்று பேசாமல் ஒதுங்கிக் கொள்ளுவார்கள். அல்லது தங்களைத்திருத்திக் கொள்ளுவார்கள். உங்களிடம் கேட்கிறேன், இந்த மாதிரிச் செய்திகளாலும் இந்த ஆய்வுகளாலும் கிடைத்த பயன் என்ன? எத்தனை சந்திப்புகள்... கைகுலுக்குதல்கள்... எத்தனை எவ்வளவு எடுத்துரைப்புகள்... என்ன விதமான மன்றாட்டங்கள்... இவ்வளவும் நடந்தும் கிடைத்தது என்ன? “இப்பொழுது சுமந்திரன் குழு அமெரிக்காவில் இடியப்பம் அவிக்கிறது” என்று புழுகமடைகிறார்கள் கொஞ்சப் பேர். ஆட்சி மாற்றத்துக்கு அமெரிக்கா விரும்புகிறது. அது அமெரிக்காவுக்குத் தேவை. இந்த மாதிரி முன்பும் இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் அதோடு நிற்கிற மேற்குலகத்துக்கும் தேவைகள் வந்தன. அதை முன்னுக்கு நின்று வலு கச்சிதமாகச் செய்து குடுக்கிற வேலையைத்

> சுந்தரலிங்கம், நாகநாதன், அமிர்தலிங்கம் போன்றவர்கள் சொன்னதைத்தானே இப்பவும் சம்மந்தனும் மாவை சேனாதிராஜாவும் சிறிதரனும் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். உலகம் எவ்வளவு மாறிவிட்டது. சர்வதேசப் பரப்பில் புதிய அணுகுமுறைகள், மாற்று நிலைப்பாடுகள், தந்திரோபாயம் என்று எவ்வளவு பெரிய வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. ஆனால் இங்கே இருபது வருசமாக ஒரே கட்டுரையைத்தானே பெரும்பாலான தமிழ் அரசியல் ஆய்வாளர்கள் எண்டு சொல்லுகிற ஆட்கள் எழுதிக் கொண்டிருக்கிறார்கள்!

தானே நம்முடைய தலைவர்கள் செய்து கொடுக்கிறார்கள். அப்படி விழுந்தடித்து அவர்களின் வேலையைச் செய்து கொடுத்தாலும் நம்முடைய ஒரு சிறு பிரச்சினையைக் கூட அவர்கள் செய்து தருவதில்லை. ஆகக் குறைந்தது, அரைகுறையாக இருக்கிற 13 ஆவது திருத்தத்தைக் கூட முறையாக அமுல்படுத்துவதற்கு இவை சிறுவிரலால் கூட இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுத்ததில்லை. இனியும் இவை அப்படி அழுத்தம் கொடுக்கப்போவதுமில்லை. எந்த அதிசயங்களையும் அற்புதங்களையும் செய்து விடப் போவதுமில்லை. ஆனால், நாங்கள் அடுத்த வீட்டுச் சாப்பாடு வரும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். இந்தப் பேமானித்தனமான நம்பிக்கையோடு எத்தனை நாளைக்குத்தான் - எவ்வளவு காலத்துக்குத்தான் பட்டினி கிடப்பது?....” என்று நண் பர் பொரிந்து தள்ளினார்.

“பல ஆண்டுகளாகப் பத்திரிகைளைப் படிக்காமல், அரசியல் பிரதேசங்களில் ஊடாடாமல் எப்படி உங்களால் இப்படி ஒரு மதிப்பீட்டுக்கு வரமுடியும்? இது தவறல்லவா?” என்றேன்.

“நான் எழுப்பிய கேள்விகளுக்கு முதலில் பதிலைச் சொல்லுங்கள். இதை நீங்கள் மறுத்துரைப்பதாக இருந்தால் அதை - அந்த நியாயங்களைப் பகிரங்கமாக முன்வையுங்கள். விவாதிப்போம்” என்றார்.

கூடவே, “ஏன் நீங்கள் கூட ஒரு தடவை தமிழர்களின் அரசியலும் தமிழ் அரசியல் ஆய்வாளர்களின் ஆய்வுகளும் சுயமோக - சுய இன்ப அரசியல், ஆய்வுகள் என்று விமர்சித்திருந்தீர்களே. கற்பனைக் குதிரைகள் ஓடுவதுமில்லை. களைப்பதுமில்லை என்றும் எங்கோ நீங்கள் சொன்னதாக நினைவு...” என்று என்னைச் சுட்டிக் கூறினார்.

“அது என்னுடைய பார்வையும் அவதானிப்புமாகும். நான் தொடர்ந்தும் தமிழ் அரசியல், ஊடகப் பரப்பில் ஊடாடிக் கொண்டிருக்கிறேன். அதனால் அதைப் பற்றிய விமர்சனத்தை முன்வைத்தேன். ஆனால், நீங்கள் இதற்கு அப்பால் விலகி நிற்கிறீர்களே!” என்றேன்.

“விலகி நின்றால் விமர்சனங்களை முன்வைக்கக் கூடாதா? அந்த உரிமையை மறுப்பது யார்? முதலில் நாங்கள் கூறும் கருத்துகளை மறுக்க முடிந்தால் அதற்கான தர்க்கங்களையும் ஆதாரங்களையும் முன்வையுங்கள்...அதுதான் செய்ய வேண்டியது. இன்று தமிழர்களுடைய அரசியல் மறுபரிசீலனை செய்ய வேண்டிய அவசியத்தில் உள்ளது. அதைச்செய்ய மறுத்துக் கொண்டு நிற்பது தவறு மட்டுமல்ல, மேலும் தமிழ்ச்சமூகத்தைப் பலவீனப்படுத்தும். நீங்களே ஒரு சிறிய மதிப்பீட்டைச் செய்து பாருங்கள், நாற்பது ஆண்டுகளுக்கு முதல் தமிழ்ச்சமூகம் இருந்த நிலையையும் இப்போது அது இருக்கிற நிலையையும். புலம்பெயர்ந்திருப்பதால் ஒரு பலம், வளம் இருப்பதாகத் தோற்றம் இருக்கலாம். அதை முழுதாக நான் மறுக்கவில்லை ஆனால், இங்கே நாட்டில் நம்முடைய நிலை என்ன? சவால்கள் எப்படியானவை? வரவர நெருக்கடி கூடிக்கொண்டிருக்கிறதே... வாழ்வாதாரத்துக்காக கையேந்தி நிற்கும் மக்கள் - குடும்பங்கள் ஆயிரக்கணக்கில்... இந்த நிலை முன்பிருந்ததா? உடல் உறுப்புகளை இழந்தவர்கள், பெற்றோரை இழந்த சிறார்கள், பிள்ளைகளை இழந்த பெற்றோர், காணாமல் போன உறவுகளைத் தேடிக் கொண்டிருக்கும் உறவுகள், துணையிழந்த பெண்கள் - மனைவியர்... என்று எவ்வளவு பெரிய இழப்புகளின் மத்தியில் இருக்கிறோம்.. இதை விட ஊரெல்லாம் படை முகாம்கள்...

ஆனால் நாங்கள் இன்னும் இதுகளைப் பற்றியெல்லாம் யோசிக்காமல் மேலும் மேலும் நெருக்கடியைத் தருகிற அரசியலையே - உழுத்துப்போன பழைய சரக்கையே திறமான பொருள் என்று தூக்கி வைத்துக் கொண்டிருக்கிறோம்...” என்றார் நண்பர்.

இதுவும் ஒரு நியாயம்தான்.

“ஆனால், தமிழ்ப் பெரும்பரப்பு உங்களுடைய இந்த நியாயங்களை கவனத்திற் கொள்ளுமா?” என்று கேட்டேன்.

“அது அதனுடைய தலைவிதியைப் பொறுத்தது. நீங்கள் கணக்கைச் சரியாகச் செய்தால்தான் சரியான விடை கிடைக்கும். பிழையாகச் செய்தால் பிழையான விடையே கிடைக்கும். 40 வருசத்துக்கு முன்பு மலையக மக்கள் இருந்த நிலையைப் பாருங்கள். இன்று அவர்களுடைய வளர்ச்சியைப் பாருங்கள். அவர்களுக்கும் ஆயிரம் பிரச்சினைகள் இப்போதும் உண்டு. சம்பளப்பிரச்சினை. காணிப்பிரச்சினை. வீடில்லாப் பிரச்சினை. அபிவிருத்திக் குறைபாடுகள் என... ஆனால் அங்கேயிருந்து ஒரு பிள்ளையாவது முன்பைப்போல வீட்டு வேலைக்காக யாழ்ப்பாணத்துக்கோ வீட்டுக்கோ யாராவது இப்பொழுது அழைத்து வர முடியுமா? மலையக மக்கள் தனியான அரசியல் சமூகமாக, கல்விச் சமூகமாக, ஊடகம், அரச தொழில்வாய்ப்புகள், சட்டத்துறை, தனியார்துறை எனப் பலவற்றிலும் வளர்ச்சியடைந்துள்ளது.

வடக்குக் கிழக்கில் உள்ள தமிழ்ச்சமூகம் கண்ட சிதைவையும் அழிவையும் அது சந்திக்கவில்லை. அதற்கு நெருக்கடிகள் உண்டு என்பதை நான் மறுக்கவில்லை. ஆனால் ஏனைய தரப்பினரை விட தம்மை அவர்கள் மேலுயர்த்தியுள்ளனர் என்பது கவனிக்கத்தக்கது அல்லவா. ஏன், முஸ்லிம்களிடத்தில் ஏற்பட்டுள்ள வளர்ச்சியைப் பாருங்க. அவர்களுக்கும் அரசியல் ரீதியான நெருக்கடிகள் பலதுண்டு. இதிலிருந்தெல்லாம் நாம் கற்றுக் கொள்ள மறுப்பது ஏன்? ” என்று சொல்லி முடித்தார் நண்பர்.

நம் இருவருக்கும் இடையில் நடந்த உரையாடலை இங்கே உங்கள் முன் வைத்துள்ளேன். இதைக்குறித்து நீங்களும் உரையாடலாம். ■



சி.அ.யோதிலிங்கம்

# சுமந்திரன் குழுவின் இலக்கில்லாத அமெரிக்கப் பயணம்

சுமந்திரன் தலைமையிலான குழுவினர் அமெரிக்க ராஜாங்கத் திணைக்களத்தின் அழைப்பின் பேரில் அமெரிக்கா சென்றுள்ளனர். சட்டத்தரணிகள் குழுவே செல்வதாகக் கூறினாலும் அதில் சட்டத்தரணி அல்லாத சாணக்கியனும் அடக்கம். எது எப்பிடியிருப்பினும் கிழக்குப் பிரதிநிதி ஒருவரை குழுவில் சேர்த்தமை வரவேற்கக் கூடியதே! குழுவில் இவர்கள் இருவரும் தவிர ஜனாதிபதி சட்டத்தரணி கனகேஸ்வரன் சட்டத்தரணியும் சட்ட விரிவுரையாளருமான நிர்மலா சந்திரஹாசன் ஆகியோரும் சென்றுள்ளனர். நிர்மலா சந்திரஹாசன் முன்னாள் நல்லூர்த் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் நாகநாதனின் மகளும், தந்தை செல்வாவின் மருமகளுமாவர். சாணக்கியனை இறுதி நேரத்தில் சுமந்திரனே இணைத்துள்ளார்.

கடந்த 15,16,17 ஆம் திகதிகளில் ராஜாங்க திணைக்கள முக்கியஸ்தர்களோடு கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளன. சுமந்திரனுக்குச் சார்பான புலம்பெயர் அமைப்புக்களைச் சேர்ந்தவர்களும் குழுவில் இணைந்திருந்ததாக ஒரு தகவல். யார் அழைப்புவிடுத்தது என்பது தொடர்பாக மாறுபட்ட கருத்துக்கள் வந்திருந்தாலும் பின்னர் அமெரிக்க ராஜாங்க திணைக்களமே அழைப்புவிடுத்தது என்பது உறுதியாகியுள்ளது.

சுமந்திரனை இந்தியா ஓதுக்கியுள்ளது. இதனால் தன்னை முக்கியத்துவப்படுத்த சுமந்திரன் இன்னோர் வழியால் முயல்கின்றார் என்ற செய்தியும் உண்டு. இப் பயணம் பசில் ராஜபக்ஷ அண்மைக்காலமாக நகர்த்தி வருகின்ற நிகழ்ச்சி நிரலின் ஒருபகுதி என்ற கதையும் அடிபடுகின்றது. 13 ஆவது திருத்தத்தை இந்தியா முதன்மைப்படுத்த முனைகின்ற போதும் தமிழ்த்தரப்பிடமிருந்து அதற்குப் போதிய ஆதரவு கிடைக்கவில்லை அதனால் இந்தியா அமெரிக்கா மூலம் முயற்சிகளைச் செய்கின்றது என்ற கருத்தும் உள்ளது.

இந்தப்பயணம் அங்கு பேசப்படப்போகின்ற விடயங்கள் பற்றி சுமந்திரன் பங்காளிக்கட்சிகளுடன் கலந்துரையாடவில்லை. சொந்தக்கட்சியுடனும் கலந்துரையாடவில்லை என்ற விமர்சனமும் உள்ளது. தவிர பயணக் குழுவில் உள்ளவர்கள் தமிழ் அரசியல் பற்றி பட்டறிவு அனுபவம் அற்றவர்கள் எவ்வாறு தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு பற்றி பேசுவர் என்ற கேள்வியும் முன்வைக்கப்படுகின்றது. சுமந்திரனை தமிழ் மக்களுக்கான அரசியலை செய்பவர் என தமிழ்த்தேசிய சக்திகள் கருதுவதில்லை. சுமந்திரன் இப் பயணத்தை கட்சிப் பயணமாகக் குறிப்பிடாமல் தனிப்பட்ட நிபுணர் குழுவின் பயணம் என்றே குறிப்பிடுகின்றார். சட்ட நிபுணர்கள் செல்கின்றார்களே தவிர அரசியல் நிபுணர்கள் எவரும் செல்லவில்லை. தமிழ் மக்களின் பிரச்சினை அரசியல் பிரச்சினையே ஒழிய சட்டப் பிரச்சினையல்ல. சுமந்திரன் அனைத்தையும் சட்டப்பிரச்சினையாக சுருக்குவதிலேயே கவனம் செலுத்துகின்றார்.

தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வுபற்றியே பேசப் போவதாகவும் செய்திகள் வந்திருந்தன. தமிழ் மக்களுக்கு ஒரு அரசியல் தீர்வு வேண்டும் என்பதிலும் அதற்கு சர்வதேச அழுத்தம் தேவை என்பதிலும் மாற்றுக் கருத்துக்கள் இல்லை. அரசியல் தீர்வுக்கு முதலில் அது பற்றிய அரசியல் தீர்மானம் கூட்டாக எடுக்கப்படல் வேண்டும். பின்னர் அத் தீர்மானத்தை சர்வதேச மட்டத்திற்கு கொண்டு செல்லவும் சர்வதேச அபிப்பிராயத்தை அதற்கு சார்பாக பெற்றுக்கொள்ளவும், வெளிநாட்டுக் கொள்கையும் பயிற்சி பெற்ற இராஜதந்திர லொபியும் உருவாக்கப்படல் வேண்டும். இந்தச் செயல்முறைகள் எதுவும் இங்கு இடம்பெறவில்லை. சர்வதேச சக்திகள் விரும்புகின்ற தீர்வுக்கு தாளம் போடுவது தமிழ் மக்களின் அபிலாசைகளுக்கு எந்த வகையிலும் உதவப் போவதில்லை

அரசியல் தீர்வு விவகாரத்தில் முதலில் மேற்கொள்ள வேண்டிய பணி கூட்டாக அரசியல் தீர்மானம் எடுப்பதாகும். சமஸ்டி ஆட்சிமுறை தான் தீர்வு என்றால் அதன் உள்ளடக்கம் எவ்வாறு இருக்க வேண்டும் என்பது தொடர்பாக பொது முடிவு எட்டப்படல் வேண்டும். சமஸ்டி ஆட்சி முறையில் பல உலக மாதிரிகள் உள்ளன. மிக உயர்ந்த வடிவத்தில் சுவிஸ்லாந்து சமஸ்டிமுறை, பொஸ்னிய சமஸ்டி முறை என்பன உள்ளன. தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வாக இறுதியாக எட்டப்பட்ட சமஸ்டி முறையாக பொஸ்னிய சமஸ்டியைக் குறிப்பிடலாம். மிகவும் பலவீன மான சமஸ்டி முறையாக இந்திய சமஸ்டிமுறை உள்ளது.



தமிழ் மக்களுக்கான சமஸ்டிமுறை ஒரு நாட்டின் மாதிரியைத் தான் பின்பற்ற வேண்டும் என்ப தில்லை. பல்வேறு நாடுக ளிலுமுள்ள சமஸ்டிமுறையில் தமிழ் மக்களுக்கு பொருத்தமான கூறு களை உள்வாங்கி அவை போதாவிட்டால் நாமும் புதிதாக சில விடயங்களைச் சேர்த்து தமிழ் மக்களுக்கான சமஸ்டி முறையை சிபார்சு செய்யலாம். இதற்கு முதலில் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வில் எத்தகைய உள்ளடக்கங்கள் தேவை என அடையாளம் காண வேண்டும். அதன் பின்னர் பல்வேறு நாடுகளிலும் உள்ள சமஸ்டி முறைகளில் தமிழ் மக்களுக்கு தேவையான கூறுகளை உள்வாங்கலாம்.



தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு கோட்பாட்டு அடிப்படையில் தேசிய இன அங்கீகாரம், இறைமை அங்கீகாரம், சுயநிர்ணய உரிமை அங்கீகாரம், அதற்கான ஆட்சிப் பொறிமுறை என்பவற்றைக் கொண்டி ருத்தல் வேண்டும். இக்கோட்பாட்டு விடயங்களுக்கு யாப்பு சட்ட வடிவம் கொடுக்கும் போது தாயக ஒருமைப்பாட்டை குறிக்கும் வகையில் வடக்கு - கிழக்கு இணைந்த அதிகார அலகு, சுயநிர்ணயமுடைய சுயாட்சி அதிகாரங்கள், மத்திய அரசில் ஒரு தேசமாக பங்குபற்றுவதற்கான பொறிமுறை, சுயாட்சி அதிகாரங்களுக்கான பாதுகாப்பு என்கின்ற நான்கு விடயங்களுக்கும் உத்தரவாதம் வேண்டும்.

இக்கோட்பாட்டு விடயம் 1985 ஆம் ஆண்டு திம்பு மாநாட்டின் போது தமிழ் மக்கள் சார்ந்த அமைப் புக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

> **“அரசியல் தீர்வு விவகாரத்தில் முதலில் மேற்கொள்ள வேண்டிய பணி கூட்டாக அரசியல் தீர்மானம் எடுப்பதாகும். சமஸ்டி ஆட்சிமுறை தான் தீர்வு என்றால் அதன் உள்ளடக்கம் எவ்வாறு இருக்க வேண்டும் என்பது தொடர்பாக பொது முடிவு எட்டப்படல் வேண்டும். சமஸ்டி ஆட்சி முறையில் பல உலக மாதிரிகள் உள்ளன. மிக உயர்ந்த வடிவத்தில் சுவிஸ்லாந்து சமஸ்டிமுறை, பொஸ்னிய சமஸ்டி முறை என்பன உள்ளன. தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வாக இறுதியாக எட்டப்பட்ட சமஸ்டி முறையாக பொஸ்னிய சமஸ்டியைக் குறிப்பிடலாம்.”**

அரசியல் யாப்புச் சட்ட வடிவம் தமிழ் மக்கள் பேரவையின் தீர்வு யோச னைகளிலும், வடமாகாணசபையின் தீர்வு யோசனைகளிலும், தமிழீழ விடுதலைப் புலிகளின் இடைக்கால யோசனைகளிலும் முன்வைக்கப்பட்டுள்ளது. இக் கட்டுரையாளரும் இவற்றை பல தடவைகள் கூறியிருக்கின்றார்.

தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு தொடர்பில் பல மாதிரிகள் தமிழ்த் தரப்பினால் மேலே கூறியது போல ஏற்கனவே முன்வைக்கப்பட்டுள்ளன. எனவே அவற்றையெல்லாம் கவனத்தில் எடுத்து தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு மாதிரியை முடிவு செய்து கொள்வது பொருத்தமானதாக இருக்கும்.

இங்கு முதலில் மேற்கொள்ள வேண்டியது அரசியல் தீர்வுக்கான நிபுணர் குழு ஒன்றை தமிழ்த் தரப்பு உருவாக்குவதே. தாயகத்திலும், புலம்பெயர் நாடுகளிலும் வசிக்கும், சட்ட, அரசியல் நிபுணர்களையும் உலக ரீதியாக பல்வேறு நாடுகளிலும் வசிக்கும் தமிழக வம்சாவழித்தமிழ் நிபுணர்களையும் இணைத்துக்கொள்ளலாம். தமிழர்கள் அல்லாத நிபுணர்களின் உதவிகளையும் பெற்றுக் கொள்ளலாம். இந் நிபுணர்குழு அரசியல் தீர்வுப்பொதி ஒன்றை உருவாக்கட்டும். பின்னர் அதனை அரசியல் தீர்மானமாக மாற்றுவதற்கு அரசியல் கட்சிகள் மத்தியிலும் பொது அமைப்புக்கள் மத்தியிலும் விவாதங்கள் நடாத்தலாம். முடிவில் திருத்தங்கள் இருப்பின் அவற்றையும் சீர் செய்து அரசியல் தீர்வுப் பொதியின் இறுதி வடிவத்தை ஏகோபித்த குரலில் உருவாக்க வேண்டும். அந்தத் தீர்வுப் பொதி தான் தமிழ் மக்களிற்கான தீர்வுப்பொதியாக இருக்கும்.

பின்னர் இவற்றை தாயக மட்டத்திலும் சர்வதேச மட்டத்திலும் பேசு பொருளாக்க வேண்டும். சர்வதேச மட்டப் பேசு பொருளாக்கல் மிக மிக அவசியம். அப் பேசு பொருளாக்கல் இல்லாமல் சர்வதேச அபிப்பிராயத்தையும் திரட்ட முடியாது. சிறீலங்கா அரசிற்கு வலுவான அழுத்தங்களையும் கொடுக்க முடியாது.

சர்வதேச மட்டத்தில் பேசு பொருளாக்குவதற்கு தமிழ் மக்களுக்கான வெளிநாட்டுக் கொள்கை உடனடியாக உருவாக்ககப்படல் வேண்டும். வெளிநாட்டுக் கொள்கை ஒன்றில்லாமல் சர்வதேச சக்திகளை வினைத்திறனுடன் அணுக முடியாது. தொடர்ந்து பயிற்சிபெற்ற ராஜதந்திர லொபியையும் உருவாக்க வேண்டும் தமிழ் மக்களைப் பொறுத்தவரை மூன்று அணிகளான ராஜதந்திர லொபிகள் தேவை. இந்தியாவை கையாள தனியான ஒரு லொபியையும், அமெரிக்க - மேற்குலக தரப்புக்களைச் கையாள ஒரு லொபியும், சிறீலங்கா அரசிற்கு நெருக்கமாக உள்ள சீனா, ரஷ்யா, பாகிஸ்தான் போன்ற தரப்புக்களை கையாள இன்னோர் தனியான லொபியும் உருவாக்கப்படுவது அவசியமானதாகும்

இவற்றை வெற்றிகரமாக்க இரண்டு நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்படல் வேண்டும். ஒன்று ஒருங்கிணைந்த அரசியலைக் கட்டியெழுப்புவதாகும். இரண்டாவது தமிழ் மக்களுக்கான ஒரு அதிகாரக் கட்டமைப்பை உருவாக்குவதாகும் இரண்டுமே மிகச் சவாலான விடயங்களாகும்

ஒருங்கிணைந்த அரசியல் இல்லாமல் சர்வதேச அரசியலைக் கையாளவும் முடியாது. ஆட்சியிலிருக்கின்ற பெருந்தேசியவாதத்தின் இனவாத முகத்திற்கும் முகம் கொடுக்கவும் முடியாது. அதிகாரக் கட்டமைப்பு இல்லாமல் வெளிநாட்டு விவகாரங்களை ஒழுங்காக கையாளவும் முடியாது.

அரசியல் தீர்வு விவகாரம் சுமந்திரனதோ, சம்பந்தனதோ தனிப்பட்ட பிரச்சினையல்ல இது தமிழ் மக்களின் எதிர் கால வாழ்வைத் தீர்மானிக்கின்ற விவகாரம். இங்கு தனி நபர்கள் மட்டும் தீர்மானங்களை எடுக்க முடியாது. மக் களின் அரசியல் பிரதிநிதிகளும், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளும் கூட்டாகப் பேசி முடிவெடுக்கின்ற விவ காரம். இதில் சுமந்திரன் தனித்து ஓடுவது தமிழ் மக்க ளின் நலன்களுக்கு ஏற்றதல்ல. தவிர சுமந்திரன் எதை அடிப்படையாக வைத்து பேசியிருக்கின்றார் என்பதும் மூடு மந்திரமாக உள்ளது. நல்லாட்சிக் காலத்து யோசனையைத்தான் முன்வைத்திருப்பார் என்றால் அது தமிழ் மக்களுக்கு எந்த வகையிலும் பயன்படப்போவதில்லை.

அரசியல் தீர்வை விட இன்னோர் விடயமும் இராஜதந்திர சமூகத்துடன் உரையாட வேண்டிய முக்கிய விடயமாக உள்ளது. சிறீலங்கா அரசின் பச்சை ஆக்கிரமிப்புக்களே அதுவாகும். கிழக்கின் ஆக்கிரமிப்பு முற்றப் பெற்ற நிலையில் வடக்கு நோக்கி இந் நகர்வு திரும்பியுள்ளது. சிங்கள கிராமசேவையாளர் பிரிவுகளை வவுனியா வடக்குடன் இணைத்து சனத்தொகை அடர்த்தியை செயற்கையாக மாற்றம் முயற்சி இடம்பெறுகின்றது. வடக்கில் சிங்களப் பிரதிநிதி ஒருவரை பெற்றக்கொள்வதே இதன் இலக்காகும். மட்டக்களப்பில் தேரர் ஒருவர் பிரதேச செயலகத்திற்குள் பலவந்தமாக நுழைந்து பிரதேச செயலரையே அச்சுறுத்துகின்றார். தொல்லியல் ஆக்கிரமிப்பும், படை முகாம்களுக்கான காணிப்பறிப்பும் இன்னோர் வகையில் தொடர்கின்றது.

இந்தப் பச்சை ஆக்கிரமிப்புக்கள் தமிழ் மக்களின் கூட்டிருப்போடும், கூட்டுரிமையோடும், கூட்டடையாளத்தோடும் தொடர்புடைய விவகாரமாக இருப்பதால் உடனடியாக தடுத்து நிறுத்தப்படல் வேண்டும். ராஜதந்திர சமூகத்தின் அழுத்தங்கள் இல்லாமல் இவற்றை தடுத்து நிறுத்துவது மிகவும் கடினமானது. இதனால் ஆக்கிரமிப்புக்களை நிறுத்த சர்வதேச பாதுகாப்புப் பொறிமுறை ஒன்று வேண்டும் என இக் கட்டுரையாளர் தொடர்ச்சியாக கூறி வருகின்றார்.

எனவே ராஜ தந்திர சமூகத்துடன் இவற்றைப் பற்றியும் அவசரமாகப் பேச வேண்டும். சுமந்திரன் இப் பணியினை வினைத்திறனுடன் செய்வார் என எதிர்பார்பதற்கில்லை. நல்லாட்சிக் காலத்தில் மைத்திரியுடன் இணைந்து சிங்களக் குடியேற்ற வாசிகளுக்கு காணிப் பத்திரம் வழங்கியவரிடம் இவற்றை எதிர்பார்க்க முடியாது. இதனால் தமிழ் மக்கள் இவற்றைக் கவனத்தில் எடுப்பதோடு தனியாக ஓடும் தரப்புக்களை தடுத்து நிறுத்தி கூட் டாக ஓடும்படி வலியுறுத்துவதும். இன்றைய சூழலில் மிகமிக அவசியமானதாகும். ■

# விக்ரமாதித்தன் – வேதாளம் கதைகளும் மறு வாசிப்பும்

த.அபிநாத்



இலக்கியச் சூழலில் பல கதைகள் காலம் கடந்தும் பேசப்பட்டு வருகின்றன. அத்தகைய கதைகளில் தமிழ்ச்சமூகத்தின் மத்தியில் ஆழவேரூன்றிய கதைகளாக விக்ரமாதித்தன் - வேதாளம் சார்ந்த கதைகள் விளங்குகின்றன. கதையின் நாயகனான விக்ரமாதித்தன் உச்சியினி நகரை ஆள்பவனாகவும், தேவர்கோனிடம் சிம்மாசனத்தைப் பரிசாகப் பெற்றவனாகவும் நுண்மதி மிக்கனவாகவும் ஈராயிரம் வருடம் காடாறுமாதம் நாடாறுமாதம் என ஆட்சி புரிந்தவனாகவும் குறிப்பிடப்படுகின்றான். மேலும் உச்சியினி நகரை அடுத்துள்ள, அடர்ந்த வனத்தில் துர்க்கையம்மன் கோவிலொன்று இருந்ததாகவும் அதற்குச் சற்றுத் தொலைவில் உள்ள சுடுகாட்டின் முருங்கை மரத்தில் வேதாளம் ஒன்று தொங்கிக் கொண்டிருந்ததாகவும் முனிவரின் பணிப்பிற்கிணங்கி அவ் வேதாளத்தை விக்ரமாதித்தன் தோளிலே சுமந்து வரும் போது அவ் வேதாளம் கதை சொல்வதாகவும் கதையின் நகர்வு அமைகின்றது. கதையின் இறுதியில் வேதாளம் புதிர் போட்டு, விக்ரமனிடம் அவிழ்க்குமாறு கூறும்! புதிருக்கான விடை தெரிந்தும் சொல்லாது இருந்தால் விக்ரமாதித்தனின் தலை வெடித்துவிடுகின்ற அதே நேரம் வாயைத் திறந்து பேசினாலோ வேதாளம் மீண்டும் முருங்கை மரத்திலே சென்று ஏறிவிடும். நுண்ணறிவு மிக்கவன் என்பதால், 23 கதைகளுக்கான புதிர்களை விக்ரமாதித்தன் எளிதாகவே அவிழ்த்து விடுகின்றான்.

வேதாளம் மொத்தமாக 24 கதைகளை விக்ரமாதித்தனிடம் கூறுகின்றது. அக்கதைகள் சிவனால் உமையம்மைக்குச் சொல்லப்பட்டவை. வேதாளம் முன்னொரு காலத்திலே சிவன் கோவிலில் பூசகராகப் பணியாற்றி, அக்கதைகளை ஒட்டுக் கேட்டு மனைவியூடாகப் பரவலடையச் செய்ததால், சிவனிடம் சாபம் பெற்றது என்பதும் குறிப்பிடத்தக்கது. விறுவிறுப்பும், சுவாரஸ்யமும் நிறைந்த இக் கதைகள் அம்புலி மாமா சிறுவர் இதழூடாக தமிழ்ச் சூழலுக்கு அறிமுகமாயின. இவை மறுவாசிப்புக்குள்ளாகி மாற்று வடிவங் கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

மருத்துவ அறிவியலை அடிப்படையாகக் கொண்டு விக்ரமாதித்தன் - வேதாளம் கதைகளை "விஞ்ஞான விக்ரமாதித்தன் கதைகள்" என ஆயிஷா இரா.நடராசன் மறுபுனைவாக்கம் செய்துள்ளார். நீரிழிவு, போலியோ, விசர்நாய்க்கடி நோய், மலேரியா, மாரடைப்பு, புற்றுநோய், ஏமக்குறைவு நோய் (Aids), சிறுகாய மருத்துவம் போன்ற நோய்கள் பற்றியும் அவற்றிலிருந்து மனித இனம் விழிப்புணர்வோடு இருக்க வேண்டிய தேவையினையும் அடிப்படையாகக் கொண்டு அக்கதைகளை எழுதியுள்ளார். 2009 இல் வெளிவந்த விஞ்ஞான விக்ரமாதித்தன் கதைகள், சாகித்ய மண்டலப் பரிசினை வென்றமையும் குறிப்பிடத்தக்கது.

யோ.கர்ணனின் "தேவதைகளின் தீட்டுத்துணி" தொகுப்பிலுள்ள "வேதாளத்திற்கு சொன்ன கதை" என்ற சிறுகதையும் விக்ரமாதித்தன் - வேதாளம் கதையின் மறுவாசிப்பாகவே அமைகிறது. இரா. நடராசனின் உத்தியின் வழியே யோ.கர்ணனால் 2011 இல் இச் சிறுகதை எழுதப்பட்டுள்ளது. முன்னாள் போராளியாக விக்ரமாதித்தனும் விசாரணை அதிகாரியாக வேதாளமும் சித்திரிக்கப்பட்டு, இறுதிப் போரில் புதையல் இரகசியம் ஒன்றினை வேதாளம் வினாவுவதாகக் கதை அமைகிறது. மறுமொழி விளம்பாமல் தலைசுக்குநூறாக சிதறும் கணத்திற்காய் விக்ரமாதித்தன் காத்திருப்பது போலக் கதை முடிகிறது. 2021 ஐப்பசியில் வெளிவந்த "சிறுவர் எழுதிய சிறுவர் கதைகள்" என்ற சிறுவர் கதைத் தொகுப்பிலே, ம.கனியா "விக்கிரமாதித்தனும் ரோபோவும்" என்ற சிறுவர் கதையினை எழுதியுள்ளமை வியப்பிற்குரியது. இக் கதையிலே வேதாளத்திற்கு மாற்றாக ரோபோவைப் பிரதியீடு செய்துள்ளார். ஆயிஷா நடராசனின் பாணியிலே விஞ்ஞான ரீதியில் எழுதப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. சிறுவர்களுக்கான சுட்டி விகடன் இதழில் சித்திரக் கதைகளாக விக்ரமாதித்தன் - வேதாளம் கதைகள் வெளிவருகின்றமையும் சுட்டிக்காட்டத்தக்கதாகும். இதனால் சிறுவர்களிடமும் புதுமையான சிந்தனைகள் வெளிப்படுகின்றன.

விக்ரமாதித்தன் வேதாளமும் கதையும், உத்திகளும் தமிழ்த் திரைப்படங்களிலே கூடக் கையாளப்பட்டிருப்பதைக் காணமுடிகிறது. கே.பாலசந்தர் இயக்கி நடிகர் ரஜனிகாந் அறிமுகமான "ஆபூர்வராகங்கள்" திரைப்படமானது, விக்ரமாதித்தன் அவிழ்க்க முடியாத முடிச்சினைக் கொண்ட 24 ஆவது கதையினை வைத்தே உருவாக்கப்பட்டுள்ளது. "என்னுடைய அப்பா யாருக்கு மாமனாரோ அவருடைய மகன் எனக்கு மருமகன் என்றால் அவருக்கும் எனக்கும் என்ன உறவு?" என அத்திரைப்படத்தில் இடம்பெறும் வசனம் இறுதிக் கதையான காலடிப் புதிர்க்கதையின் சாராம்சமே ஆகும். புஷ்கர் மற்றும் காயத்திரி இயக்கத்தில் வெளியான "விக்ரம் - வேதா" என்ற திரைப்படமும் விக்ரமாதித்தன் வேதாளம் கதையின் உத்தியினை உள்வாங்கியே உருவாக்கப்பட்டுள்ளது. காவலதிகாரியாக விக்ரமாதித்தனும் (விக்ரம்) வேதாளமாக (வேதா) எதிர்நாயகனும் அமைகின்றனர். காவலதிகாரியிடம் பிடிபடுகின்ற ஒவ்வொரு தடவையும் வேதா புதிர்களைக் கூறித்தப்பி விடுவதும், அப்புதிர்களை விக்ரம் அவிழ்ப்பதும் திரைப்படத்திலே சுவாரஸ்யத்தோடு நகர்த்தப்பட்டுள்ளன. இவ்வுத்தியைப் படம் முழுமையும் சிறப்பாகக் கையாண்டதால் பாராட்டுக்குரிய திரைப்படமாக அமைந்தது.

அனைத்தையும் ஒன்று சேர நோக்குகையில் தொன்மக் கதையான விக்ரமாதித்தன் - வேதாளம் கதையானது பன்முக வாசிப்பிற்குரிய கதைகளாக விரிவடைந்துள்ளமை தெளிவாகின்றது. எதிர்காலத்தில் மேலும் மாறுபட்ட வாசிப்புகளுக்கு உள்ளாகின்ற சாத்தியத்தினையும் கொண்டமைந்திருப்பது வெளிப்படை உள்ளமையாகும்.

# நிலைக்கண்ணாடி

தரிசனன்




## பிள்ளைகளின் ஆளுமை விருத்தியில் மூத்தோரின் பங்களிப்பு

நம் அனைவருக்குமே நமது பிள்ளைகள் பெயரும் புகழும் பெற்று உயர்ந்து வர வேண்டும் என்கின்ற ஆசையுண்டு. பொதுவாக இத்தகைய ஆசை எம்மைப் போலும் பிறருடைய பிள்ளைகளின் வளர்ச்சியைப் பார்த்து அவர்களைப்போல் தம் பிள்ளைகளும் வர வேண்டும் என்கிற விதமாகவே ஆசைப்படுகிறார்கள். "அதோ பார்த்தாயா அந்தப் பையன் என்ன விதமாய்ப் படிக்கிறான். எவ்வளவு திறமைசாலியாய் இருக்கிறான் அவனைப் போல நீயும் படித்தாலென்ன... ? நீ எங்கே படித்து உயரப் போகிறாய்? இம் முறை உனது புள்ளிகள் எதுவும் எண்பதைத் தாண்டவில்லையே. அந்தப் பையன் மிக அரிதாகத் தானே 90 க்குக் கீழே புள்ளி பெறுகிறான்.

நீ அம்முறை மூன்று பாடங்களுக்கு 75 புள்ளிகளைத் தாண்டவில்லையே... வர வர நீ மொக்குப்பிள்ளையாகத் தான் வரப்போகிறாய். உந்தக் கிரிக்கட்டும் கொம்பியூட்டரும் கடைசியில் உன்னைச் சீரழிக்கத்தான் போகின்றன பாரேன்... இப்படியாகத்தான் பல பெரியோர் - பெற்றோர் பிள்ளைகளை வழிப்படுத்த முயலுகிறார்கள். இப்படிப் பேசி "ஒரே பிள்ளைகளை வழிப்படுத்தினால்த் தான் அடுத்த முறை என்றாலும் அவன் முதலாம் பிள்ளையாக வந்து எல்லாப் பாடத்திலும் சிறந்த இடத்துக்கு வருவான்" எனப் பலரும் நினைக்கிறார்கள்.

பிள்ளையிடம் உள்ள குறைபாடுகள் போதாமைகளைக் குறித்து அவர்களை வழிப்படுத்த முயலும் பல மூத்தோர் பிள்ளைகளின் குறைகள் குறித்து அவர்களைத் தரங்குறைவாகப் பேசி யாரோடாவது ஒப்பிட்டு தாழ்த்திக் கூறித் தமது பிள்ளைகளை ஆளாக்க முயல்வது உண்டு. ஆளுமையும் தன்நம்பிக்கையும் உழைப்பும் உடைய பிள்ளைகள் தம்மைத் தாமே காப்பாற்றிக் கொள்வார் கள். மூத்தவர்களின் கண்டிப்போ தரக்குறைவான கணிப் புக்களோ அத்தகைய பிள்ளைகளை எதுவும் செய்வ தில்லை. ஆனால் மன உறுதி போகாத மனந்தளர்ந்து போகக் கூடிய பிள்ளைகள் மூத்தோர்களின் தரக் குறை வான கணிப்பினாலும் ஏச்சுப் பேச்சுகளாலும் மனந் தளர்ந்து பின் வாங்கி விடுகிறவர்களாகவும் ஆவதுண்டு. எப்போதுமே யாருடனாவது ஒப்பிட்டுத் தரங்குறைத்துப் பேசப்படுகின்ற பல பிள்ளைகள் தாமே தம்மைக் குறித்துக்குறைவாக எடைபோட்டுக் கொண்டு தலை தாழ்ந்து நடக்கும் தோல்வியாளர்களாகவே ஆகிப் போகின்றார்கள்.

தமது பிள்ளை இன்ன இன்ன பாடங்களில் இந்த இந்த விஷயங்களில்குறைவாக உள்ளனர் என விழிப்போடு புரிந்து கொள்ளும் பெற்றோர் பலர் எப்படியாவது ஓடியாடித் திரிந்து வழி தேடி அந்தப் பிள்ளைகள் எந்தத் துறையில் வல்லவர்களாக உள்ளனரோ அந்தத் துறைசார்ந்து அவர்கள் முன்னேற உதவி செய்து அவர்களை உயர வைத்து விடுகின்ற சம்பவங்களும் நமது சமூகத்தில் நிகழாமல் இல்லை. இதுவே யதார்த்தமான நடைமுறைக்கேற்ற அணுகு முறையுமாகும்.

வெறுமனே கனவு கண்டு குறைபாடுகளுக்காகப் பிள்ளைகளைக் கண்டித்தும் விமர்சித்தும் அடுத்தவர்கள் முன்னால் தரந்தாழ்த்தி நடத்தியும் நடத்துகிற மூத்தோர் அந்தப் பிள்ளைகளின் வீழ்ச்சிக்கும் வழிகோலும் மூடர்களாகவே இருக்கிறார்கள். ஆக்க பூர்வமான வழிமுறைகளைக் கண்டறிந்து பிள்ளைகளுக்கு ஏற்ற விதத்தில் அவர்களுக்கு வழிகாட்டி நம்பிக்கையூட்டி நடத்துகிற பெற்றோரின் அறிவார்ந்த புரிதலும் வழிகாட்டலுமே உண்மையில் அர்த்தமடையனவாயுள்ளன - பிள்ளைகள் மீது எவ்வளவு அன்பாயிருக்கிறேன் - அவர்களுக்காக எவ்வளவு செலவழிக்கிறேன் - இவர்கள் உருப்படுகிறார்களில்லையே எனப் புலம்பும் பெற்றோர்கள் தமது பிள்ளைகளின் ஆளுமையை இனம் கண்டு - மாற்றுத் தெரிவுகளினூடாகவேனும் அவர்களை ஆளாக்கவல்ல புரிதலுள்ள அறிவார்ந்த பெற்றோரே இன்றைய இளைய தலைமுறையின் தேவையாக உள்ளனர். ■

# கலாநிதி பண்டிதர் செ.திருநாவுக்கரசு அவர்களின் தமிழ் வளர்த்த தீவகச் சான்றோர்.

## (வாழ்க்கை - இலக்கிய - வரலாற்று ஆவணநூல்)

**புதுப்புனல் -18**

புலோலியூர் வேல்நந்தன்

தீம்புனலின் இவ்வார புதுப்புனல் பகுதியில் அறிமுகம் காண்பது ஒரு மிகப் பெரிய தொகுப்பு முயற்சி. தமிழ் வளர்த்த தீவகச் சான்றோர்கள் (வாழ்க்கை - இலக்கிய - வரலாற்று ஆவண நூல்) என்ற தலைப்பில் தீவகத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட கலாதிநி பண்டிதர் செ.திருநாவுக்கரசு அவர்களால் தொகுக்கப்பட்ட வரலாற்று ஆவண நூலாகும். மிகவும் பிரமிப்பை ஏற்படுத்தும் வகையில் மிக அதிகப் பக்கங்களில் (1279) இத் தொகுப்பு ஆவணம் வெளியிடப்பட்டுள்ளது. ஈழத்தில் வெளிவந்துள்ள மிகப் பெரியதொரு தனிநபர் ஆவணத் தொகுப்பு முயற்சி இதுவென்றே கூறமுடியும். எதிர்காலத் தலைமுறை தீவகப் பிரதேச தமிழ்ச் சான்றோர்களை அவர்கள் ஆற்றிய பணிகளை முழுமையாக அறிந்து கொள்ள வழிகாட்டும் ஒரு ஆய்வு வழிகாட்டியாகவும் இது விளங்கிச் சிறப்புப் பெறுகின்றது. அந்த வகையில் இதனைக் கலாநிதி செ.திருநாவுக்கரசு தொகுத்திருந்தாலும் அவருக்கு வேண்டிய ஆவணங்களைக் கொடுத்துதவியோரும். புலம்பெயர் நாடுகளில் வாழும் இம் முயற்சிக்கு உதவிய தீவகத்தை சேர்ந்தோரும் நன்றியோடு பாராட்டப்பட வேண்டியவர்கள்.


இத்தொகுப்பைத் தந்துள்ள கலாநிதி பண்டிதர் செ.திருநாவுக்கரசு அவர்கள் ஓய்வுநிலை கோப்பாய் ஆசிரிய கலாசாலை பிரதி அதிபர், தமிழ்ப்பாட விரிவுரையாளர் நாடறிந்த உயர்தர தமிழ்ப்பாட நூலாசிரியர், கவிஞர், பேச்சாளர், பாடலாசிரியர், ஆய்வாளர், விமர்சகர், நகைச்சுவை உணர்வோடு பழகிட இனிய மனிதர் எனப் பன்முகங்களுக்குச் சொந்தக்காரர் தீவகத்தின் அல்லைப்பிட்டிக் கிராமத்தை பிறப்பிடமாகவும் அனலைதீவைப் புகுந்த இடமாகவும் கொண்டவர். தன் குடும்ப நிலை காரணமாக இளமைக்காலத்திலே கூட்டுறவுத்துறை, தபால் திணைக்களம், இலங்கைப் போக்குவரத்துச்சபை ஆகியவற்றில் பணியாற்றி, பின்னர் தன் முயற்சியில் வெளிவாரியாகக் கற்று ஆசிரியராகி பின் கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் இணைக்கப்பட்ட விரிவுரையாளராகி பின்னர் கல்வி நிர்வாக சேவைப் பரீட்சையில் சித்தியடைந்து பிரதி அதிபராகிப் பணியாற்றிய சிறப்புக்குரியவர். தன் புலமைச் சிறப்பால் யாழ்பல்கலைக்கழக சித்த மருத்துவத்துறை, தமிழ் முதுமாணிக் கற்கைநெறி ஆகியவற்றுக்கு வருகை நிலை விரிவுரையாளராகக் கடமையாற்றியவர். கல்வி மாணிபட்ட ஆசிரியர்களின் தமிழ்ப்பாட விரிவுரையாளராக கடமையாற்றியவர். டானியலின் எழுத்துகள், உடுமலை தந்த கவிமலை, எண்ணங்களும் வண்ணங்களும் போன்றன இவரது முக்கியமான நூல்களாகும். இவற்றைவிட இடைநிலை உயர்தர மாணவர்களுக்கான தமிழ்ப்பாட நூலாக்கப் பணி இடைநிலை மாணவர்களுக்கான சைவசமய வினா - விடை போன்ற நூற் பணிகளும் முக்கியமானவை.

இந்த வகையில் அவரால் தொகுக்கப்பட்டுள்ள இவ் ஆவண நூல் பற்றிய முழுமையான ஆழமாக ஆய்வுக்கு இப் பத்தி இடந்தராது என்பதால் அந்நூல் குறித்த அறிமுகத்தை வழங்கி வாசகராகிய உங்களை வாசிக்கத் தூண்டுவதே என் நோக்கமாக அமைகிறது. அந்த வகையில் பெருங்கடலாய் அமையும் இத் தொகுப்பில் பதச் சோறாய் சில விடயங்களை மட்டும் பகிர்ந்து கொள்ள முனைகிறேன். இந்நூலின் தொகுப்பாசிரியர் வேலனை மத்திய கல்லூரியில் தமிழ் கற்பித்த தனது தமிழ் ஆசானாகிய தீவகத்தைச் சேர்ந்த பண்டிதர் திரு. க. இராசையா அவர்களுக்கு இந் நூலை சமர்ப்பித்துள்ளதுடன் தனது தமிழ் மீதான ஆர்வத்திற்கு வழிகாட்டிய பண்டிதரிடம் தான் தமிழ் கற்ற நினைவுகளையும் பகிர்ந்துள்ளார். இந்நூலுக்குரிய வாழ்த்துரையை தொகுப்பாசிரியரின் வழிகாட்டிகளில் ஒருவராகிய கலாநிதி செஞ்சொற்செல்வர் ஆறு திருமுகன் அவர்கள் வழங்கியுள்ளார். இந் நூலுக்குரிய அணிந்துரையைத் தொகுப்பாசிரியர் குறித்த அறிமுகத்துடன் தீவகத்தின் மற்றொரு கல்வி ஆளுமையாகிய புவியியல்துறைப் பேராசிரியர் கா.குகபாலன் அவர்கள் வழங்கியுள்ளார். நன்றியோடு முகவுரையைத் தொகுப்பாசிரியர் அவர்கள் வழங்கியுள்ளார் பொருளடக்கத்தை நோக்கின் இவ் ஆவணத் தொகுப்பானது தீவகத்தின் முக்கிய பிரதேசங்களான ஊர்காவற்றுறை, மண்டைதீவு-அல்லைப்பிட்டி, சரவணை-பள்ளம்புலம், வேலணை, புங்குடுதீவு, நயினாதீவு, நெடுந்தீவு, அனலைதீவு-எழுவைதீவு, காரைநகர் (காரைதீவு) என்ற அடிப்படையில் பிரிக்கப்பட்டு மேற்குறிப்பிட்ட பிரதேசங்களைப் பிறப்பிடமாகக் கொண்ட தமிழ் வளர்த்த சான்றோர்கள் பலரை, அவர்களது பணிகளைத் தேடித் தொகுத்துள்ளமை சிறப்புக்குரியதாக அமைகின்றது. அந்த வகையில் ஊர்காவற்றுறையைச் சேர்ந்த முதலியார் குலசபாநாதனுடன் கட்டுரை தொடங்குகின்றது. குறிப்பாக மாதகல் மயில்வாகனப் புலவரின் யாழ்ப்பாண வைபவமாலைக்கு உரை எழுதி வெளியிட்ட இவரது பணி விதந்துரைக்கப்பட்டுள்ளதுடன் இவரது வாழ்வு, வரலாறு, பணிகளும் மிக விரிவாக நோக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு கட்டுரையினதும் எடுத்துரைப்புமுறை, தகவல்களைத் தேடித் தொகுத்த முறை, மொழிநடை என்பவற்றின் வழி தொகுப்பாசிரியரின் புலமைச் சிறப்பை தேடல் ஆர்வத்தை அறிய முடிகிறது.
ஊர்காவற்றுறைக்குரியவர்களாக குலசபாநாதனுடன் சோ.சிவபாத சுந்தரம், காவலூர் டேவிட் இராஜதுரை, திரு.ஆ.சபாரத்தினம், காவலூர் எஸ். ஜெகநாதன், மா.பாலசிங்கம் போன்றோரும் ஆவணப்படுத்தப் பட்டுள்ளனர்.


அதே போல மண்டைதீவுக்குரியவர்களாக அகிலேஸ்வரசர்மா, அங்கயன் கைலாச நாதன், பண்டிதர் பா.சத்தியசீலன், செபஸ்தி அந்தோனிமுத்து உட்படப் பலர் ஆவணப்படுத்தப்பட்டுள்ளனர் விரிவஞ்சி அவர்கள் பற்றி தனித்தனியாக விபரிக்க முடியாதுள்ளது. இதே போல சரவணை - பள்ளம்புலம் சார்ந்து தில்லைநாதப் புலவர், பண்டிதர் மருதையனார், வித்துவான் வேந்தனார், சிவகாமி (தில்லைச்சிவன், பண்டிதர் குமரேசையா போன்றோர் முக்கியத்துவம் பெறுகின்றனர். வேலணை மண்சார்ந்து பேரம்பலப்புலவர், வித்துவான் க.பொ. ரத்தினம் பொன்னண்ணா, செல்வி வேதநாயகி தம்பு போன்றோர் ஆவணப்படுத்தப்பட்டுள்ளனர். மேற்சொன்ன பெயர்களைத் தவிர இன்னும் பலரையும் ஆவணப்படுத்தியுள்ள போதும் இக் கட்டுரையில் எல்லாப் பெயர்களையும் பக்க வரையறை கருதி இணைத்துக் கொள்ள முடியாமைக்கு வருந்துகிறேன் இத்தகையவரை குரு வழிகாட்டியாய் கொண்டதில் அக மகிழ்கிறேன்.

இதே போல புங்குடுதீவில் பேராசிரியர் சதாசிவம் பிள்ளை, கலாநிதி சிவராமலிங்கம் பிள்ளை, நாவேந்தன், மு.தளையசிங்கம், ஈழத்துச் சிவானந்தன், சு.வில்வரத்தினம், பேராசிரியர் சிவகாமி போன்ற பலர் ஆவணப்படுத்தப்பட்டுள்ளனர். இதே போல் நயினாதீவைச் சேர்ந்தோராக, நாகமணிப்புலவர், கு.ப.சரவணபவன், வித்துவான் குமாரசாமி, சந்தனநங்கை கந்தப்பு போன்ற பலர் ஆவணப்படுத்தப்பட்டுள்ளனர். நெடுந்தீவைச் சேர்ந்தோராக தனிநாயகம் அடிகள் வித்துவான் ஞானப்பிரகாசம், அடைக்கலமுத்துப் புலவர், கி.பி அரவிந்தன், பேராசிரியர் வை.கனகரத்தினம், புலவர் அரியநாயகம் எனப் பலர் ஆவணப்படுத்தப்பட்டுள்ளனர். இவ் ஆவணப்படுத்தல்களில் மரபுசார் அறிஞர்களுடன் நவீன இலக்கியத்துக்குப் பங்களித்தோரையும் இணைத்து ஆவணப்படுத்தியுள்ளமை சிறப்புக்குரியதாகும்.

அனலைதீவைச் சேர்ந்தவர்களாக புலவர் ஆறுமுகம், கணபதி, சரவணமுத்துப்புலவர் போன்றோரும் காரைநகரைச் சேர்ந்தவர்களாக அருளப்ப நாவலர், நாகமுத்துப்புலவர், பண்டிதர் அருளம்பலவாணர், மகாவித்துவான் எப்.எக்ஸ்.சி.நடராசா, கலாநிதி செ.சுந்தரம்பிள்ளை ஆகியோரது பணிகள் விரிவாக ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. நிறைவாக பூபாலசிங்கம் புத்தகசாலையின் நிறுவுனர் திரு.இ.இ.பூபாலசிங்கம் குறித்த சிறப்புக் கட்டுரையும் இடம்பெற்றுள்ளன. சில விடுபடல்கள் இந்நூலில் இருந்தாலும் கூட இத்தகைய பரந்த ஆவணத் தொகுப்பு முயற்சிக்காக தீவகமும் ஈழத்தமிழ் உலகும் நூலாசிரியருக்கு என்றும் கடமைப் பட்டுள்ளது என்பதில் ஐயமில்லை. ■




## சிறகை விரி பெண்ணே



முட்டி மோதி
முன்னேறிச் செல்லும் முகில்
முடிவில்லாப் பயணங்கள்
சிறகை விரி பெண்ணே

துளிர்க்கும்
வெற்றி விதையிலே
தோல்வியின் வாசனை
ஒதுங்கும் சூனிய மனம்
இருளின் பின் நிகழ்கிறது
சூரியனின் தோற்றம்
சிறகை விரி பெண்ணே

உறவுக்காய் வாழும் காக்கை
ஒத்தோடும் எறும்பு
நன்றியின் வரைபடமாய் நாய்
பாடங் கற்றுக் கொண்டு
சிறகை விரி பெண்ணே

உழைப்பின் உறுதி
தனிப்புள்ளிகளால் இணையும்
கோல வாழ்வு
திருமணக் கூட்டில் முடங்காதே
உன் திறமை
உலகறியட்டும்
சிறகை விரி பெண்ணே

சி. லக்ஷனா

# இலங்கை வேடுவ இனமும் அவர்களின் மொழியும்



சந்திரமதி போல்ராஜ்
நான்காம் வருடம்
ஊடகக் கற்கைகள் துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

தொடர்பாடல் முறைகளானது மனித வர்க்கத்தின் அளவிற்குப் பழமை வாய்ந்தது என்று கூறலாம். ஆதிகாலத்தில் மனிதன் சைகைகள், உடல் அசைவுகள், ஓசைகள், நெருப்புப் புகை என்பவற்றின் ஊடாக தமது கருத்துக்கள் எண்ணங்கள் மற்றும் தேவைகளை சக மனிதர்களோடு பரிமாறிக் கொண்டான். பின்னைய காலங்களில் மொழிகள் விரிவாகத் தொடங்கின. முதலில் பேச்சு வடிவம் மட்டுமே பயன்பாட்டில் இருந்த போதிலும் பின்னர் எழுத்து வடிவம் காலத்தின் தேவையுடன் உருவாக்கப்பட்டது.

இதனடிப்படையில் தொடர்பாடல் என்பது மனித வாழ்க்கையில் இன்றியமையாத ஓர் விடயமாகும். தற்போது இலங்கையில் வாழும் ஆதிக்குடிகளின் வாழ்க்கை முறையானது சாதாரண மக்களின் வாழ்க்கை நிலையிலிருந்து மாறுபட்டதைப் போன்று அவர்களது மொழியும் மாறுபட்டதாகவே காணப்படுகின்றது.

ஆரம்ப காலத்தில் மொழியியலாளர்கள் வேடுவ மொழியானது சிங்கள மொழியின் பேச்சு வழக்கு மொழியா? அல்லது வேறு மொழியா? என ஐயப்பட்டனர். 1959 ஆம் ஆண்டு முறையான ஆய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்ட போது வேடுவ மொழியானது “கிரியோஸ்” மொழியென்றும், இம் மொழியானது தம்பனவில் உள்ள பழைய மொழிகளுக்குள் மட்டுப்படுத்தப்பட்டதாகக் காணப்படுகின்றது எனவும் அறிந்தனர்.

மேலும் வேடுவ மொழியின் தாய்மொழி அறியப்படவில்லை, எனினும் சிங்கள மொழியின் தாய் மொழி இந்திய-ஆரிய மொழிகள் என அறியப்பட்டது. வேடுவ மொழியில் சொற்களின் வகையானது பெயர்ச்சொல், வினைச்சொல் மற்றும் உயர்திணைச் சொற்கள், பால் வித்தியாசத்தில் பயன்படுத்தப்பட்டன. சுய அடையாளம் தேடும் வேடுவர்கள் சிலருக்கு சில வார்த்தைகள் மற்றும் வாக்கியங்கள் மட்டுமே தெரிந்தபோதும் இம்மொழியை செவ்வனே கற்றவர்களும் இருந்தனர். குறிப்பாக இலங்கை கிழக்குக் கரையோரப் பகுதியில் வசிக்கும் இவ்வின மக்களின் சில குழுக்கள் தமிழ் போன்ற ஒரு மொழி பேசுகின்றார்கள். இவர்கள் பேசும் மொழி ஆரிய மொழி இல்லை ஆனால் ஆரிய மொழிகளின் சாயல் அண்மைக் காலமாக இவர்களது பேச்சில் கலந்துள்ளது. என மொழியியலாளர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

இவ்வாறாக வேடுவ மொழி சார்ந்து பல்வேறு கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. இதற்கமைய ரதுகலப் பகுதியைச் சேர்ந்த வேடுவர்களின் மொழி பற்றிய வரலாறு. அதற்கான சான்றுகள், தற்காலத்தில் அவர்களின் மொழிப் பயன்பாடு எவ்வாறு உள்ளது மற்றும் பழங்குடியினர்களின் மொழியியல் தேவைகள் பற்றிய விபரங்களை நேர்காணலின் ஊடாக அறிய முடிந்தது.

அந்தவகையில் இலங்கையின் பிபிலை - ரதுகலப் பகுதியில் வசிக்கக்கூடிய வேடுவர்களின் தலைவர் சூதாவன் நீலத்தோ அவர்கள் வேடுவ மொழி பற்றிய பல விடயங்களை கூறினார்.

வேடுவ மொழி தொடர்பில் அவர் கருத்துத் தெரிவிக்கையில் தற்போது ரதுகலப் பகுதியில் வசிக்கும் இவர்களின் பரம்பரை தானிகல என்ற பிரதேசத்தில்

**“எமது பிள்ளைகளுக்குத் தொடர்ந்து எமது வேடுவ மொழியைக் கற்றுக் கொடுக்கின்றோம். அதுமட்டுமன்றி இங்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளும் அயல் பிரதேசங்களில் வசிக்கக் கூடிய சிங்கள மக்களுக்கும் எமது மொழியை பயிற்றுவிக்கின்றோம். எமது பிரச்சினையை, தேவைகளை அனைவருக்கும், அரசாங்கத் திற்கும் வெளிப்படுத்துவதற்கும் சகமனிதர்களுடன் நல்லுறவைப் பேணிக் கொள்வதற்கும் சிங்கள மொழியை நாம் கற்றுக் கொண்டோம்.”**

வசித்ததாகவும் 1938 ஆம் ஆண்டு காலப்பகுதியிலேயே பிபிலை - ரதுகலப் பகுதியில் தம்மை பதிவு செய்து கொண்டதாகவும் குறிப்பிட்டார். தானிகலப் பிரதேசத்தில் வசிக்கும் போது அவர்களுக்கு வேடுவ மொழி மாத்திரமே தெரிந்தது. பின்னர் ரதுகலப் பிரதேசத்திற்கு இடம்பெயர்ந்து அங்குள்ள சிங்கள மக்களுடன் இணைந்து வாழ ஆரம்பித்த பின்னரே அவர்கள் சிங்கள மொழியைக் கற்றுக் கொண்டதாகவும் அதற்கு முன்பு வேடுவ மொழியில் மாத்திரமே உரையாடியதாகவும் குறிப்பிட் டார்.



ரதுகலப் பிரதேசத் திற்கு இடம் பெயர்ந்த போது அவ் வேடுவர்களையும் அவர்களுடைய வாழ்க்கை முறையையும் பார்வையிடப் பல சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளனர். இதன் போது ரதுகலப் பிரதேசத்தில் குறித்த காலத்தில் கிராம சேவகராகப் பணி புரிந்தவர் வேடுவர்களுடைய மொழியைக் கற்று அங்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளுடனும், வேடுவர்களுடனும் உரையாடலை மேற்கொண்டு கருத்துக்களை பரிமாறிக்கொள்ள உதவியுள்ளார்.

இவ்வாறாக ரதுகலப் பிரதேசத்தில் வசிக்கும் வேடுவர்கள் சிங்கள மக்களுடன் உரையாடல்களை மேற்கொண்டு காலப்போக்கில் சிங்கள மொழியைக் கற்றுக் கொண்டுள்ளனர் மேலும் சாதாரண சிங்கள மக்களைப் போன்று தற்போது சரளமாக சிங்கள மொழியைப் பேசுகின்றனர். தொடர்ந்து அவர் தமது மொழி பற்றிக் கூறுகையில் ஆரம்பத்தில் வேடுவ மொழியை சிங்கள மொழியாகவே கருதினார்கள் ஆனால் இவ்வேடுவ மொழி சிங்கள மொழியின் சாயலோடு அதன் ஒலியியல், உருப்பியல் அடிப்படையில் வேறுபட்டதாகவே காணப்படுகின்றது.

மேலும் இவ் வேடுவ மொழியில் எழுத்துருக்கள் இல்லை சில குறியீடுகளை மாத்திரமே பயன்படுத்தி தமது மொழி சார்ந்த விட யங்களை ஆவணப்படுத்தியுள்ளதாகக் குறிப்பிட்டார். மேலும் வேடுவ மொழியில் இத்தனை சொற்கள் தான் உள்ளன என்ற அளவீடுகள் எதுவும் இல்லை எனவும் குறிப்பிட்டார்.

ரதுகலப் பிரதேசத்தில் வசிக்கும் வேடுவர்களின் வாழ்க்கை முறை சாதாரண மக்களின் வாழ்க்கை முறை போன்று தற்போது மாற்றியமைக்கப்பட்டுள்ளது. வீட்டு வசதிகள், உட்கட்டமைப்பு வசதிகள், நீர் வசதி என்பவற்றோடு அவர்களின் பிள்ளைகளுக்கான கல்வி வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன.

மேலும் அவர்கள் பரம்பரை பரம்பரையாக வாழ்ந்த பிரதேசத்தையும் குகை மற்றும் குடிசைகளை “ஆதிவாசி மக்கள் உரிமை மத்திய நிலையம்” என ரதுகலப் பிரதேசத்தில் சுற்றுலாப் பயணிகள் பார்வையிடும் இடமாக மாற்றி அமைத்துள்ளனர். குறித்த இடத்தில் இவர்கள் பயன்படுத்திய பொருட்கள், கல்வெட்டுக்கள், அவர்களின் பரம்பரை மற்றும் உரிமைகள் பற்றிய நூல்கள், காட்சிப்படங்கள், வாழ்க்கை முறை பற்றிய புகைப் படங்கள் மற்றும் மொழி பற்றிய ஆவணங்களும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

இவ் ரதுகலப் பிரதேசத்தில் வசிக்கும் வேடுவர்களின் தலைவர் அவர்களின் மொழிப்பற்றித் தொடர்ந்து பேசுகையில், எமது பிள்ளைகள் சிங்களப் பாடசாலைகளில் தற்போது சிங்கள மொழியில் கல்வி கற்கின்றனர். ஆனால் பாடசாலை தவிர எமது பகுதிகளில் வேடுவ மொழியிலேயே உரையாடல்களை மேற்கொள்வர்.

எமது பிள்ளைகளுக்குத் தொடர்ந்து எமது வேடுவ மொழியைக் கற்றுக் கொடுக்கின்றோம். அதுமட்டுமன்றி இங்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளும் அயல் பிரதேசங்களில் வசிக்கக்கூடிய சிங்கள மக்களுக்கும் எமது மொழியைப் பயிற்றுவிக்கின்றோம். எமது பிரச்சினையை, தேவைகளை அனைவருக்கும், அரசாங்கத்திற்கும் வெளிப்படுத்துவதற்கும் சகமனிதர்களுடன் நல்லுறவைப் பேணி கொள்வதற்கும் சிங்கள மொழியை நாம் கற்றுக் கொண்டோம்.

மேலும் எமது இனத்தவரோடு வேடுவ மொழி மூலமே உரையாடல்களை மேற்கொள்வோம். அதற்குக் காரணம் வரலாற்றில் மட்டுமே பேசப்படும் ஒரு மொழியாக எமது வேடுவ மொழி மருவிச்செல்வதை நாங்கள் விரும்பவில்லை என தமது மொழி பற்றிய சில விடயங்களைப் பகிர்ந்து கொண்டார்.

இதனடிப்படையில் மொழியியலாளர்கள் கூறுவதைப் போன்று வேடுவ மொழி எனப்படும் “வெத்தா” எனும் மொழி சிங்கள மொழியின் சாயலுடன் காணப்படுகின்றதே அன்றி அது சிங்கள மொழி அல்ல. மேலும் இவ் வேடுவ மொழி ஒலியியல் மற்றும் உருப்பியல் அடிப்படையில் வேறுப்பட்டதாகவே காணப்படுகின்றது. சொற்களின் அளவுகள் எதுவுமின்றி குறியீடுகளாகவே பயன்படுத்தப்படுகின்றன. சாதாரண மனிதர்களைப் போன்று இவ் வேடுவ மக்களும் தமது மொழி மீது அதீதப் பற்று கொண்டு வாழ்கின்றனர் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

■

# என்ன உலகமடா பரமானந்தா? 30



தமிழ்க்கவி

"மழைக்கால இருட்டானாலும் மந்தி கொப்பிழக்கப்பாயாது"

"அப்பிடி பாஞ்சுட்டுதெண்டா...?"

அதை மற்ற மந்தியள் இனத்தில சேத்துக் கொள்ளா துகள். அதுகள்தான் வெப்பியாரத்தில தனிக்குரங்காத் திரியிறதுகள். அவைக்கு கொஞ்சம்... கொஞ்சமென்ன பெரிய ஆக்ரோசமே இருக்கும். தன்ர இனம் தன்னைக் கழிச்சு விட்டதுக்கு தான் காரணமில்லை. அவைதான் எண்டு அவையில உள்ள கோவத்தை எல்லாரிலும் காட்டிக் கொண்டு, காடுகளை ஒரு கலக்குக் கலக்கிக் கொண்டு திரியுங்கள்.

நீ ஏன்ரா தலையச் சொறியிறாய். ஙா... இப்பயேன் குரங்கின்ர கதை எண்டு பாக்கிறாய். ஹ...ஹ... எட பொடியா குரங்குகள்தான் எங்கட மூதாதையர் எண்ட கதை உனக்குத் தெரியாதே. இப்பவும் ஊருக்கை கன பேர் உந்தக் குரங்குகள் மாதிரித்தான் இருக்கினமடா? அவைக்கு இனசனம் சொந்த பந்தம் சிநேகிதம், எண்டு எதுகும் கிடையாதுடா, தானுண்டு தன்ர வீடு பிள்ளை, குட்டியள் சொத்து சுகம் எண்டு இதுகள்ளதான் கவலை. பின்ன என்னவோ சொல்லுவினமே... 'தான் தின்னி விருந்தறியாள் சீதனச் செல்வி சிலவறியாளெண்டு.' அவைதான் இவை எடே கண்ணை மூடிக்கொண்டு வட்டிக்கு விடுறதும் வட்டி பிந்தினா அதை முதலோட சேர்க்கிறதும். இவங்கள்தான்ரா... எட நான் உனக்கு விசியத்தைச் சொல்லாம வேறயேதோ பறையிறன்பார்.

இஞ்ச கிட்டவா கதைசொல்ல, உவள் கறுத்தப் பொன்னன்ர மோள் செல்லா இருக்கிறாளெல்லே அவள் குடியிருக்கிற வீட்டால எழும்பச் சொல்லிப் போட்டானாமடா காணிக்காறன். அவள் பாவி வீடு கேட்டுத் திரியிறாளடா? நீ என்ன சொல்லுறாயடா மழை இந்தப் போடு போடுது. இப்ப போய் எங்க வீடு பாக்கிற. ஙு... அங்கின அறையள் வாடைக்கு வீடுறவையும் இப்ப ஈரச் சீலையள் காயப்போட இடமில்லாம அலையிற நேரம். இப்ப போய் வீடு பிடிக்கேலுமே. பங்க குளத்துக்க இடம் பிடிச்சு கொட்டில் போடத்திரியுதுகாளடா... குளத்துக்கயும் ஏற்கெனவே காணிபிடிச்சு பிரதேச சபையின்ர கண்ணில மண்ணைத் தூவிட்டு (கண்ணைகையாயாகவும் மண்ணை காசாகவும் மாற்றி அர்த்தம் கொள்வது சிறப்பு) பெரிய பெரிய வங்களாக்களக்ள கட்டி வச்சிருக் கிற பணக்காரர் இப்ப புறச்சுவரில பிடிச்சிருக்கிற தண்ணிய எங்கத்தைல தள்ளிவிடுறது எண்ட யோசினயில நிக்கினம். இனி முதலையள் ஒருபக்கம் தங்கட காணி உறுதியள எடுத்துக்கொண்டு காணி தேடி வரப் போகுதுகள். அடாத்தாக் குடியேறினவை ஆடு, கோழி வளக்கிறவையெண்டா அதில கொஞ்சத்த அதுகளுக்குக் குடுத்துத்தான் சமாதானம் பேசி அதுகள திருப்பி அனுப்ப வேணும். நல்ல வேளையா அந்தக்குளத்துக்க வீடு கட்டி வாழ வீட்டுத்திட்டமும் குடுத்திருக்கினமடா... அதால அதுக்கொரு சட்ட வலுவும் வந்திட்டுது. பின்ன நாடு எக்கேடு கெட்டுப் போனா அவைக்கென்ன கொண்டமுதல்ல நட்டமோ... எட அவனுகள் முறைக்குமுறை வேற வேற மாவட்டங்கள்ள இருந்து வாறாங்கள் வேலேய்யும் வரைக்கும் சம்பளம், வேலேய்ய ஏலாமப்போனா பெஞ்சன். 'நாய் வாண்டா என்ன பூனை சிம்மாசனமேறினா என்ன.'

மெய்யேடா குரங்கு போலதானாமடா மனிசற்ற மனமும். இதில நிக்கிறது அதில தாவுறது. எண்டு பரபரக்கிதாம். மனம் ஒரு குரங்கெண்டு ஒரு பாட்டு வந்ததெல்லே. இப்ப இந்த மனிசற்ற எண்ணங்களையும் எண்ணிப்பாத்தா இது குரங்கின்ர மனமுமில்லையடா. அதுக்கு மாறான ஒண்டடா... தான் பெத்த குட்டி செத்தது தெரியாம இழுத்துக் கொண்டு திரியிற குரங்கை நான் நேரிலயே பாத்து அழுதிருக்கிறன். இதென்னடா தான் பெத்த பிள்ளையள் பிள்ளையளின்ர பிள்ளையள் வாழப்போற மண்ணை நாசம்பண்ணுற மனிசர என்னேய்ற. நாளைக்கு இந்த ஊரே குடிதண்ணிக்கு அலையப்போற நிலைமை வரப்போகுது. குளத்துக்குத் தண்ணிய, பெரியகுளந்தான் அனுப்புது. அதை சேமிக்க நல்ல இடவசதி உள்ள குளம் வேண்டாமே. எட பாவியள் நெஞ்சு பதைக்குதடா அண்டாடம் டிப்பர் வழிய மண்கொணந்து கொட்டிக்கொட்டி காணியள உசத்தி கடைகண்ணியளும் கட்டிப்போட்டாங்களே.

பொன்னன்ர பொடிச்சி ஏழை. அவளுக்கொரு இடங் கிடைக்கேல்ல. பென்னம் பெரிய முதலாளிமார் பெரிய பெரிய வங்களாக்களும் கட்டி சுத்துமதிலும் எழுப்பிப் போட்டாங்களடா. தன்ர சந்ததியின்ர வாழ்க்கையில மண்கொட்டுறமெண்ட எண்ணம் ஒரு எப்பன்தானும் இல்லையே.

எட நான் தெரியாமத்தான் கேக்கிறன் அம்பது வயசு போன ஒரு முதலாளி அப்சயர் வங்களா கட்டுறார். அவர் அதில எத்தின வரியம் இருப்பார். 'காடு வா வா எண்ணுது வீடு போ போ எண்ணுது.' கல்வீடு கட்டிக் கொண்டிருக்கினம். வீடு கட்டைக்கயே வீட்டு முதலாளிக்குக் கிட்னி கரைஞ்சு போச்சாம். அவரை ஆசுப் பத்திரிக்கு அனுப்பிப் போட்டு பெண்சாதி நிண்டு வேலைய மேற்பார்வை செய்யிறா. கீழ்ப்பார்வை காசு சம்பாதிக்க புரியன பெரியாசுப்பத்திரிக்குக் கொண்டு போயிற்றினம். இப்ப இவர் ஆருக்கு வீடு கட்டுறார். அவையட சந்ததிக்குத்தானே அதுகள் திண்டிட்டு படுத்தெழும்ப உவள சிலவழிக்கிறியளே அதுகளுக்கு சுத்தமான தண்ணி சுத்தமான சாப்பாடு எங்கயிருந்து வரப் போகுது. சைனாக்காரனிட்ட வாங்குவமே. பிளாஸ்டிக் அரிசி தயாரிக்கிறானாம். உதைத்தான் சொல்லுறது 'ஊருக்குச் சொல்லுதாம் பல்லி, கழனிப் பானையில விழுதாம் துள்ளி' எண்டு. நாங்க என்ன செய்தாலும் அதால வாற சிக்கல் ஒண்டும் எனக்கில்ல அது மற்றவை பாக்கட்டும் எனக்கென்னெண்டு நெக்கிறியள். ஆனா பொடியா. நீங்க செய்யிற வினையெல்லாம்... 'மாதா பிதா செய்யிறது மக்களுக்கு மக்களுக்கெண்டு' சொல்லுறது பொய்யில்ல. நீங்க கட்டுற வீடும் அவைக்குத் தான். நீங்கள் செய்த அழிவுகளால கயிட்டப்படப் போறதும் அவையள்தான்.

என்னவோ சொல்லுவினமே 'கெடுகுடி சொல் கேளாது, சாகப்போறவன் மருந்து குடியான்' பின்ன நாங்களும் அழுவாரைப் போல பாட்டாத்தான் பாடினாலும் உந்த அரசாங்க அதிகாரியளும் கொஞ்சமாவது கவனிக்காம விட்டிட்டு, இப்ப வேலியா நிக்கிறதை உடைக்காம விட்டிட்டு பிறகு டோசர் கொண்டு வரப்போகினமோ தெரியாது. அப்பவே சொன்னன் கேட்டியா எண்டு ஆர் கதைச்சும் சரிவராது.

அமெரிக்கா, அவுஸ்ரேலியா எல்லாம் அங்க பாரம்பரியமா வாழ்ந்த சனத்த அழிச்சும் அடிமையாக்கியும் அவகரிச்ச நாடுகள்தான். அதைப்போலதான்ராப்பா

> **"இனி முதலையள் ஒருபக்கம் தங்கட காணி உறுதியள எடுத்துக்கொண்டு காணி தேடி வரப் போகுதுகள். அடாத்தா குடியேறினவை ஆடு, கோழி வளக்கிறவையெண்டா அதில கொஞ்சத்த அதுகளுக்குக் குடுத்துத் தான் சமாதானம் பேசி அதுகள திருப்பி அனுப்ப வேணும். நல்ல வேளையா அந்தக்குளத்துக்க வீடுகட்டி வாழ வீட்டுத் திட்டமும் குடுத்திருக்கினமடா... அதால அதுக்கொரு சட்ட வலுவும் வந்திட்டுது. பின்ன நாடு எக்கேடு கெட்டுப் போனா அவைக்கென்ன கொண்டமுதல்ல நட்டமோ..."**

நாங்களும் பாம்பு பூச்சியளும் குரங்கு கொக்கு குருவியளும் முதலையள் ஆமையள் வாண்ட நிலத்தையும் அடாத்தா எங்கட வல்லமையக்காட்டிப் பிடிச்சிட்டம். இப்ப குரங்கு வந்து தோட்டத்த அழிக்குது. முதலை வந்து கோழியப் பிடிக்குதெண்டா ஆரெட்டச் சொல்லுறது. இனி அதுகளுக்கும் கொடி பிடிச்சுக் கொண்டு கோசம் போடச் சொல்லித் தந்து, தங்கட உரிமைக்காகப் போராடச் சொல்லித்தான் குடுக்க வேணும். உது நடக்கிற காரியமோ. அட போடா நாங்கள் போராடத் தெரிஞ்சாக்கள் தானே உதைப்பத்தி ஏதும் கதைக்கிறமோ. சைக் நாமள் கதைக்கப் போக அதுகள் பகையாப்போகும். நமக்கென்ன நாமள் பேயாம இருப்பம் எண்டுதானே நினைக்கிறம், இப்ப பாரடா 'ஏறச் சொன்னா எருதுக்குக் கோவம். இறங்கச் சொன்னா முடவனுக்குக் கோவம்" விட்டுத்தள்ளு. ■

(04 ஆம் பக்கத் தொடர்ச்சி)

## தூரமாய் போய்க் கொண்டிருக்கிறது எங்கள் அறிவுப் பாரம்பரியம்

இவ்வாறு பல துறைசார் சொல்லாடல்களைச் சொல்லி அவரைப் பயமுறுத்தவும் முடியும்.

திட்டமிடலாளர்களும் நிர்வாகிகளும் செயற்திட்ட முகாமையாளர்களும் வாரக்கணக்கில் அல்லது மாதக்கணக்கில் பயிற்சி நெறிகளில் கலந்து கற்றுக்கொண்ட கருத்திட்ட உருவாக்கம் என்ற விடயத்தைச் சாதாரண மனிதனுடனான சில மணித்துளி சந்திப்புக்களுக்குள் எவ்வாறு இலகுபடுத்தி பரிமாறுவது என்பது பலரின் பார்வையில் மிகவும் சவாலானது. சாத்தியமற்றது. மேற்கத்தைய நாடுகளின் புலமைசார் நிறுவனங்களால் விதந்துரைக்கப்பட்ட கருத்திட்ட உருவாக்கம் தொடர்பான செயன்முறையினை இங்கு சாதாரண மனிதனின் புரிதலுக்கும் பிரயோகத்திற்கும் சிந்தனையை விரிவுபடுத்துவதற்குமான கருவியாக எவ்வாறு அறிமுகப்படுத்துவது என்பதுவே எனக்கு ஏற்பட்ட சவால்.

நாங்கள் பல்கலைக்கழகங்களிலும் துறைசார் நிபுணத்துவப் பயிற்சிகளிலும் பெற்றுக்கொண்ட நுட்பமான விடயங்களை எனது சமூகத்தின் சகமனிதனுக்குப் புரியவைத்து அவனை வெற்றிபெற்றவனாக என்னால் மாற்றமுடியவில்லை என்றால் அதன்பொருள் நாங்கள் பெற்ற அறிவினை, தனியுரிமைச் சொத்தாக வைத்துக் கொண்டு எனது சகமனிதனை தொடர்ச்சியாக எனது அறிவின் அடிமையாக வைத்துக்கொள்ள நினைக்கும் எனது கபடத்தனத்தை எண்ணி எவ்வாறு பெருமைப்பட்டுக்கொள்வது.

அல்லது எனது அறிவினையும் அனுபவத்தையும் சகமனிதர்களுடன் பகிர விருப்பம் இருந்தும் கூட அதனை எவ்வாறு இலகுபடுத்தி தாய்மொழியில் பண்பாடு மற்றும் வாழ்வியல் சார்ந்த அனுபவங்களூடாக புரியவைக்க முடியாத எனது இயலாமையினை எவ்வாறு விவரிப்பது.

சேர்.ஐன்ஸ்ரைன் அவர்களது புவியீர்ப்புக் கோட்பாட்டினையும் ஆக்கிமிடீசின் கனவடர்த்திக் கோட்பாட்டினையும் பாட்டி சொன்ன கதைகளூடாக பாலர் வயதிலேயே எமக்குச் சொல்லித்தந்த பெருமைமிகு வாழ்வியலைக் கொண்ட சமூகம் இன்று பரீட்சைப்பேப்பர்களின் வினாக்களுக்கு விடையளிப்பதிலும் பட்டதாரிக் கவுண்களை சிறுவர்களுக்கு அணிவித்து புகைப்படமெடுத்து சுயபாராட்டுக்களால் பெருமிதம் கொள்ளும் முட்டாள்களாக ஏன் மாறினார்கள் என்பது நாங்களே எங்களைக் கேட்கவேண்டிய கேள்வியாக உள்ளது.

ஒரு கருத்திட்டத்தைத் தயாரிக்கும் ஆற்றல் கொண்டவனாக சாதாரண ஒரு மனிதனின் சிந்தனையினை எவ்வாறு விரிவுபடுத்துவது என்பதனை எதிர்வரும் வாரத்தில் விளக்குவேன். ■



# அமெரிக்கப் பயணம்:

# நேர்கோட்டில் இணையும் தரப்பினர்

(முதலாம் பக்கத்தொடர்ச்சி)

இணைத்துக் கூட்டும் கூட்டத்துடன் ரெலோவின் ஒற்றுமைக்கான கூட்டம் நீர்த்துப் போய், பயனற்ற முயற்சியாகச் செயலற்றுப் போகுமா? அல்லது எம்மால் முன்னெடுக்கப்பட்ட முயற்சி சம்பந்தன் ஐயா தலைமையில் முன்னெடுக்கப்படும் என்ற அறிவிப்போடு மீசை மண்ணைத் தட்டி விட்டு ரெலோ உள்ளிட்ட குழுவினர் இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்வார்களா? என்ற கேள்விகளும் எழுகின்றன.

ஆனால் சம்பந்தன் தமிழர்களின் தீர்மானிக்கும் சக்தி என்ற பாத்திரம் காலாவதியாகிப் பல ஆண்டுகள் கழிந்து விட்டன என்கின்றனர் நடப்பு அரசியலை அவதானிப்பவர்கள். சம்பந்தன் தமிழர்களுக்கான தீர்வு புத்தாண்டில் கிடைக்கும், தீபாவளியில் கிடைக்கும், தைப்பொங்கலில் கிடைக்கும் என்று குடுகுடுப்பைக்காரன் போலக் கூறி வந்த காலத்தில் இருந்தே அவர் காலாவதியாகி விட்டார். அவரது விம்பத்துடன் நிழலாக இருந்து எம்.ஏ.சுமந்திரனே விடயங்களைக் காய் நகர்த்தி வந்துள்ளார். உள்ளூர் அரசியலில் அவருக்கு வாலாயமான சூழல் கனியவில்லை என்றாலும், அவர் பல இளந்தலைமுறையினரையும், ஓய்வுநிலை அரச அதிகாரிகளையும், ஊடக வெளியையும் தமக்குச் சார்பாக நிலைப்படுத்தி முன்னேறி வருகிறார்.

மறுபுறம் சுமந்திரன் பாரம்பரியமான அரசியல் பாதையூடாக தமிழரசுக் கட்சிக்குள் வந்தவரல்லர். அவர் தமிழ் அரசியலுக்குள் களமிறக்கப்பட்டவர். அவரைப் போலவே வடக்கு மாகாண சபைத் தேர்தலில் முதலமைச்சர் வேட்பாளராக க.வி. விக்னேஸ்வரனும் களமிறக்கப்பட்டவர்தான். ஆனால் விக்னேஸ்வரனைக் களமிறக்கிய தரப்புக்களின் நலன் பேணும் வகையில் அல்லது சொல் கேட்கும் வகையில் அவர் நடந்து கொள்ளவில்லை. அதனால் அவர் மீது வசைமாரி பொழியப்படுகிறது. கம்பன் கழகத்தின் பெருந் தலைவராக கம்பன் விழாக்களில் கோலோச்சும் போது பெரிய ஆளுமையாகத் தெரிந்தவர் இப்போது அதே கம்பன் கழக அமைப்பாளர் ஜெயராஜினால் ஆளுமையற்றவராக விமர்சிக்கப்படுகிறார். மறுபுறத்தில் இன்று அந்தப் பெரும் ஆளுமையாக சுமந்திரன் முன்வைக்கப்படுகிறார்.

இது தனியே ஜெயராஜின் குரலல்ல. கொழும்பு மேட்டுக்குடி அரசியலே தமிழ் அரசியல் முகமாகும் ஒரு மாற்றமான சூழ்நிலை அண்மைக்காலத்தில் கட்டவிழ்ந்து வருகிறது. அது வடக்கின் முதலமைச்சராக யாழ்ப்பாண தமிழரசுக் கட்சியினர் மாவை சேனாதிராசாவைத் தீர்மானித்த போதிலும், கொழும்பு மேட்டுக்குடியின் தீர்மானத்தால் விக்னேஸ்வரன் மாற்றப்பட்டதில் இருந்து தொடங்கியது. இப்போதும் கொழும்பு மையத்தை ஒட்டிய தீர்மானங்களே முக்கியம் பெறுகின்றன. கொழும்பு மேட்டுக்குடி என்பது வணிக மற்றும் அரசியல் சார்ந்து மேலெழும் அமுக்கக் குழுவாகவே தோற்றம் தருகிறது. இது தனியே கொழும்பை மையப்படுத்தியதல்ல. தேச எல்லைகள் தாண்டியது. அத்துடன் தனியே தமிழ்த் தேசியத்துடன் மட்டுப்படுத்தப்பட்டதல்ல. தேசிய ரீதியிலும், பிராந்திய ரீதியிலும், அனைத்துலக ரீதியிலும் தொடர்புபட்டது. நாட்டின் ஆட்சியாளர்களுடனும் இவர்களில் பலருக்கு நல்ல தொடர்பு உள்ளது.

நாட்டில் புதிய அரசியலமைப்பு வரைபு ஒன்றினை இந்த வருட இறுதிக்குள் கொண்டு வர அரசாங்கம் முனைப்புக் காட்டி வருகிறது. நிச்சயமாக இந்த அரசியலமைப்பும் ஒற்றையாட்சி அரசியலமைப்பாகவே கட்டவிழும் என எதிர்பார்க்கப்படுகிறது. 1978 ஆம் ஆண்டின் இரண்டாம் குடியரசு யாப்பில், 13 ஆவது திருத்தத்தை மேற்கொண்டு மாகாண சபை முறைமை உருவாக்கப்பட்டு 34 ஆண்டுகள் கடந்து விட்டன. அந்த முறைமை தொடர்பில் சிங்களத் தரப்பிலும், தமிழர் தரப்பிலும் எதிர்ப்புக்கள் உள்ளன. மாகாண சபை முறை தேவையற்றதென சிங்கள தேசியவாதிகள் கருதுகின்றனர். மறுபுறம் மாகாண சபை முறைமை அதிகாரமற்றது. தமிழர் பிரச்சினை தீர்வுக்கு ஆரம்பப்புள்ளியாகக் கூடக் கருதத்தக்கதல்ல என்ற கருத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் உட்பட பலரும் உள்ளனர். இந்த நிலையில் மாகாண சபை முறைமையை இயற்கைச் சாவடையச் செய்வது தொடர்பில் இந்தியா உட்பட யாருக்கும் வருத்தமில்லை என்றே தெரிகிறது.

இதற்கு மாற்றாக, தமிழர்களின் இனப் பிரச்சினைக்கு ஒரு தீர்வினைப் பெற்றுத்தர வேண்டும். அது ஓரளவு இரு தரப்பு இணக்கத்துடன் அமைய வேண்டும் என்ற அடிப்படையில் ஒரு பொது இணக்க சூழ்நிலை ஏற்படுத்தப்பட்டுள்ளது. கடந்த நல்லாட்சி அரசாங்க காலத்தில் தயாரிக்கப்பட்ட அரசியலமைப்பு வரைவில் சம்பந்தப்பட்டவர்களையும் சேர்த்துக் கொண்டு, அந்த நல்லாட்சி அரசாங்கம் அமைவதற்குக் காரணமான தரப்புக்கள் ஒரு நேர்கோட்டில் சந்திக்கும் ஒரு நிலைமை ஏற்படுத்தப்பட்டுள்ளது. இன்னும் சொல்லப் போனால் புதிய அரசியலமைப்பு வரைபு என்பது நல்லாட்சி அரசாங்க காலத்தில் தயாரிக்கப்பட்டு வெளிவிடப்படாததான வரைபுடன் அதிக ஒற்றுமைகள் கொண்டதாக இருக்கும் என்றே சொல்லப்படுகிறது. கடந்த அரசாங்க வரைபுடன் தொடர்புபட்ட தரப்புக்களே தற்போது அமெரிக்காவில் ஒன்றுகூடியுள்ளன.

ஜனாதிபதி கோட்டாபய தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேசவுள்ளதாகத் தன்னிடம் கூறியதாக சுமந்திரன் அறிவித்ததும், வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸூடன் பேச்சுக்கான பேச்சுவார்த்தையை அமெரிக்கத் தூதரின் இல்லத்தில் சுமந்திரன் மேற்கொண்டதும், ஜெனிவா அமர்வையொட்டி காலதாமதமாக மென்மையான கடிதம் ஒன்றைச் சம்பந்தன் அனுப்பி வைத்ததும் வாசகர்கள் அறிந்ததே. அதன் தொடர்ச்சியாக சுமந்திரன் தலைமையிலான குழுவும், உலகத் தமிழர் பேரவைக் குழுவும் இணைந்து அமெரிக்காவில் தங்கி நின்று அமெரிக்க அதிகாரிகளுடன் பேசுகின்றன என்று செய்திகள் வெளியாகின.

சுமந்திரனைப் பிரதிபலிக்கும் பத்திரிகை வோசிங்டனில் 25 தரப்புக்களுடன் - அமெரிக்க இரண்டாம் நிலை அதிகாரிகளுடன் - குறித்த குழுவினர் பேச்சுக்களை முடித்துள்ளதாகவும், குழுவினர் வோசிங்டனில் தங்கியிருக்க சுமந்திரன் மற்றும் ஓரிரு உலகத் தமிழர் பேரவை உறுப்பினர்கள் மட்டும் ஐ.நா அதிகாரிகளைச் சந்திப்பதற்காக நியூயோர்க் சென்றுள்ளனர் என்றும் செய்தி வெளியிட்டுள்ளது. முன்னதாக அமெரிக்க அதிகாரிகளுடன் பேசிய விடயங்கள் தொடர்பில் அமெரிக்காவுக்கான இந்தியத் தூதுவர் தரஞ்சித் சிங் இரவு விருந்துடன் சுமந்திரனைத் தனியே சந்தித்து விபரங்களைக் கேட்டறிந்தார் எனவும் குறித்த பத்திரிகை செய்தி வெளியிட்டது. என்ன விடயங்கள் பேசப்பட்டன என்பது மூடுமந்திரமாகவே வைக்கப்பட்டுள்ளது.

எது எப்படியோ தமிழர் இனப்பிரச்சினைக்கு இந்திய இலங்கை ஒப்பந்தம் மூலம் ஒரு தீர்வுத் திட்டம் முன்வைக்கப்பட்டுச் செயற்படுத்தப்பட்டது போல, புதிய அரசியலமைப்பு வரைவின் மூலமும் ஒரு தீர்வுத் திட்டம் முன்வைக்கப்படப் போகிறது. அதற்கு தமிழ்த் தரப்புகள் ஆதரவு தந்துள்ளன என்ற தோற்றப்பாட்டினை ஏற்படுத்தும் முன்னோடி முயற்சியாகவே இந்த அமெரிக்காவின் காய்நகர்த்தல்கள் உள்ளன. அமெரிக்காவின் அழைப்பு அரசாங்கத்தின் வயிற்றில் புளியைக் கரைத்தது போல உள்ளதாகச் சில ஊடகர்கள் எழுதினாலும் உண்மை அதுவல்ல. இலங்கை அரசாங்கம், அமெரிக்கா, தமிழர்களின் மென்தரப்பு இணைந்த ஒரு ஓட்டமாகவே, இந்தியாவின் பாரதிய ஜனதா அரசாங்கத்தின் ஆசீர்வாதத்துடன் நடைபெறும் ஒரு காரியமாகவே இந்தச் சந்திப்புக்கள் கட்டவிழ்கின்றன. இது தமிழர்களின் அபிலாசைகளை ஓரளவுக்காயினும் பூர்த்தி செய்வதாக - உள்ளதில் வள்ளிசாக - அமைந்தாலே போதுமானது என்பதே இன்றைய நிலையாகும். ■



## தானோட்டி படகு தயார்!

தானோட்டி வாகனங்கள் சாலையில் வெள்ளோட்டம் பார்க்கத் துவங்கி விட்டன. அடுத்து, படகுகளும் தானோட்டிகளாக மாறத் துடிக்கின்றன. அமெரிக்காவின் புகழ் பெற்ற, எம்.ஐ.டி.யின் ஆராய்ச்சியாளர்கள், 2016 லிருந்து சோதித்து வரும் 'ரோபோட்' என்ற படகின் வடிவமைப்பும், ஆய்வும் முடிவுக்கு வந்துள்ளது.

அண்மையில் ஆம்ஸ்டர்டாம் நகரின் கால்வாய்களில் ரோபோட் - 3 என்ற இறுதி வடிவம் வெற்றிகரமாகச் சோதிக்கப்பட்டது. ஆம்ஸ்டர்டாமின் நீர்ப் பாதைகளில் எந்த சம்பவமும் இன்றி ரோபோட் - 3 வலம் வந்து காட்டியது.

நான்கு மீட்டர் நீளமுள்ள இந்த தானோட்டி படகுக்கு, தானோட்டி கார்களைப் போலவே லிடார் எனப்படும் லேசர் உணரி, நாலாபக்கமும் கண்காணிக்கும் 'கேமரா'க்கள், பக்கவாட்டில் உணரிகள் என, உயர் தொழில்நுட்பக் கருவிகள் பொருத்தப்பட்டுள்ளன.

ரோபோட் தானோட்டி படகு, எதிரே வரும் படகுகளுடன் மோதாமல், ஐந்து பயணியரை பத்திரமாக கரை சேர்த்து நிறுத்தி இறக்கி விட்டது. இந்தப் படகின் செயற்கை நுண்ணறிவு 'சில்'லுகளும் மென்பொருள்களும், வழித்தடங்களையும், பயணத்தில் நடப்பவைகளையும் பதிவு செய்து, அடுத்த பயணத்திற்கான அனுபவமாக வைத்துக் கொள்கின்றன.

நீர்வழி உள்ள உலக நகர்களில் ரோபோட் - 3 படகுக்கு வரவேற்பு இருக்கும். மேலும், இது போன்ற 50 படகுகளைக் கண்காணிக்க ஒரு நபர் இருந்தால் போதும் என்றும் எம்.ஐ.டி. விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். ■



## நிலக்கரி

நிலக்கரிக்கு உலகம் மெல்ல மெல்ல பிரியாவிடை கொடுத்து வருகிறது. அதை எரித்துப் புகையையும் சாம்பலையும் வெளியேற்றுவது கூடாது. என்றாலும் நிலக்கரிக்கு முற்றிலும் மதிப்பில்லாமல் போய்விடாது. ஒரு புதிய ஆய்வின் படி, உப்புக் கரிக்கும் கடல் நீரை, தூய குடிநீராக மாற்றுவதற்கு நிலக்கரி மிகவும் உதவியாக இருக்கும் என்பது தெரியவந்துள்ளது.

சவுதியிலுள்ள மன்னர் அப்துல்லா அறிவியல் தொழில்நுட்ப பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் இந்த வெற்றிகரமான ஆய்வை செய்துள்ளனர். நிலக்கரி மற்றும் விறகுக் கரி ஆகியவற்றை பொடி செய்து, கலந்து, அவற்றைப் பெரும் அழுத்தத்தில்கட்டிகளாக ஆக்குகின்றனர். பின், அதனுடன் பருத்தி இலைகளையும் சேர்த்து, ஒரு வடி கட்டியாக ஆக்கி, உப்பு நீர் தொட்டியில் இட்டு, சூரிய ஒளியில் வெப்பம் ஏற்றும் படி செய்தனர். இதில் வடிகட்டிக்குள் புகுந்த நீர் ஆவியாகி, வெளியேறி குளிர்ந்து குடிநீராக மாறுகிறது. கடல் நீரின் உப்பு வடிகட்டியிலேயே தங்கிவிடுகிறது. அந்த உப்பை கழுவி அகற்றி விட்டு, மீண்டும் நிலக்கரி வடிகட்டியை பல முறை பயன்படுத்தலாம். சவூதி ஆய்வாளர்கள், தற்போது நெதர்லாந்தைச் சேர்ந்த, 'பெரா' என்ற புத்திளம் நிறுவனத்திடம் ஒப்பந்தம் செய்துள்ளது. விரைவில் அது நிலக்கரி நீர் வடிகட்டியை சந்தைப் படுத்தும் எனத் தெரியவந்துள்ளது. ■

# பாண்டாக்களுக்கு இயற்கை தந்த வரம்!



இயற்கை எதையாவது செய்தால், அதற்கு உறுதியாக ஒரு காரணம் இருக்கும். ஆனால், பாண்டாவுக்கு கருப்பு, வெள்ளை நிறத்தை இயற்கை கொடுத்தது ஏன் என்றுதான் விஞ்ஞானிகளுக்கு இது வரை விளங்காமல் இருந்தது.

அண்மையில், ஒரு ஆய்வு அந்தக் காரணத்தைக் கண்டறிந்துள்ளது. பச்சை நிறமுள்ள இலை தழைகள், பழுப்பு நிறமுள்ள மரப்பட்டைகள் மற்றும் தரை ஆகியவற்றுக்கு இடையேதான் பாண்டாக்கள் வாழ்கின்றன. இந்தப் பின்னணியில் கறுப்பு, வெள்ளை நிறத்துடன் அவற்றால், வேட்டையாடும் விலங்குகளிடமிருந்து தப்பிக்க முடியாது என்றே விஞ்ஞானிகள் கருதினர்.

இது குறித்து பிரிட்டனைச் சேர்ந்த பிரிஸ்டால் பல்கலைக்கழகம், சீன அறிவியல் அக்கடமி மற்றும் பின்லாந்திலுள்ள ஜைவாஸ்கைலா பல்கலைக்கழகம் ஆகியவற்றைச் சேர்ந்த விஞ்ஞானிகள் கூட்டாக ஆய்வு மேற்கொண்டனர். ஒரு முறை, சீன ஆய்வாளர்கள் அனுப்பிய கானகப் புகைப் படங்களில், பாண்டாக்கள் இருப்பதைப் பின்லாந்து விஞ்ஞானிகளால் உடனே கண்டுபிடிக்க முடியவில்லை.

அப்போதே, இயற்கையின் புத்திசாலித்தனம் அவர்களுக்குப் புரிந்தது. பின், கணினி மாதிரிகளில் மனிதர்கள், சிறுத்தைகள், நரிகள் போன்ற மூன்று வகைப் பார்வைகளை வைத்துச் சோதித்தபோது, கறுப்பு, வெள்ளை நிறங்கள், பச்சை, பழுப்பு போன்ற நிறங்களுடன் வித்தியாசம் தெரியாமல் கலந்து தெரிந்தது தெரியவந்தது. இயற்கைக்கு பல மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு தெரிந்ததை, மனிதர்கள் இப்போதுதான் கண்டு பிடித்திருக்கிறார்கள்.

# தூக்கணாங் குருவி



ஒரு ஊரில் அழகிய இரு தூக்கணாங் குருவிகள் வாழ்ந்து வந்தன. அவை தினமும் காலையில் உணவு தேடிச் சென்று விடும். அதன் கூட்டுக்குள் காணப்படும் முட்டையை காகம் தினமும் கொத்தி உடைத்து விடும். இதனால் அவ் இரு தூக்கணாங் குருவிகளுக்கும் மன வேதனை. இவர்கள் தங்கள் நண்பனான அணிலிடம் இந்த விடயத்தைச் சொன்னார்கள். அணில் ஒரு நல்ல யோசனையை சொன்னது. மனிதர்களின் வீட்டுக்குள் சென்று கூட்டைக் கட்டி முட்டை போடும்படி. அவைகள் அப்படியே செய்தன. அதனால் அவற்றின் முட்டைகள் பாதுகாப்பாக குஞ்சுகள் ஆகியன.

**பி.நிக்ஷித்**





# வண்ண மயில்

நீல மயில் மேலெழுந்து
தோகை விரித்து ஆடுது
அதன் வண்ணமெல்லாம்
எண்ணங்களை கூட்டுது
கண்களெல்லாம் சுற்றிச் சுற்றியே
விண்வரை பாயுது
தோகை மயிலின் அசைவினிலே
பேதையென் மனசும் அலைபாயுது.

**சுவர்ணவி**

# விடுகதைகள்

01. அள்ள முடியும், ஆனால் கிள்ள முடியாது அது என்ன?
**நீர்**

02. அழகான பெண்ணுக்கு அதிசயமான வியாதி, பாதி நாள் குறைவாள், பாதிநாள் வளர்வாள் அது என்ன?
**நிலா**

03. வெட்டிக்கொள்வான் ஆனாலும் ஒட்டிக்கொள்வான் அவன் யார்?
**கத்தரிக்கோல்**

04. மூன்றெழுத்து பெயர், முற்றும் வெள்ளை நிறம் அது என்ன?
**பஞ்சு**

05. எவர் கையிலும் சிக்காத கல் எங்கும் விற்காத கல், அது என்ன?
**விக்கல்**

06. நான் சூரியனைக் கடந்து சென்றால் கூட எனக்கு நிழல் ஏற்படாது. நான் யார்?
**தென்றல்**

07. பகலிலே வெறுங்காடு, இரவெல்லாம் பூக்காடு. அது என்ன?
**வானம்**

08. அனைவரையும் நடுங்க வைப்பான், ஆதவனுக்கே அடங்குவான். அது என்ன?
**குளிர்**

09. ஒளி கொடுக்கும், விளக்கு அல்ல சூடு கொடுக்கும், தீ அல்ல பளபளக்கும், தங்கம் அல்ல. அது என்ன?
**சூரியன்**

10. தொட்டு விட்டால் மூடிக் கொள்ளும் பச்சை மாளிகை ஜன்னல்கள் அது என்ன?
**தொட்டா சுருங்கிச் செடி**

11. ஒற்றைக் காலில் ஆடுவான், ஓய்ந்து போனால் படுப்பான். அவன் யார்?
**பம்பரம்**

**சிறுவர் பகுதிக்கான உங்கள் சொந்த ஆக்கங்களை எங்களுக்கு உடனே அனுப்பி வையுங்கள்**

**தீம்புனல்**
கனகசபை கட்டடத் தொகுதி
பருத்தித்துறை வீதி, நெல்லியடி.
தொ.பே.: 021 226 2564





# லேசர் அடுப்பில் வெந்த கோழி!



உணவுப் பண்டங்களை முப்பரிமாண இயந்திரத்தில் அச்சிடும் முயற்சி பல ஆய்வகங்களில் வெற்றிகண்டு வருகிறது. பண்டங்களை, பல வண்ணங்களில், வடிவங்களில் துல்லியமாக அச்சிட முடிந்தாலும், அவற்றைச் சரியான பதத்தில் சமைப்பது மட்டும் பெரும் சவாலாக இருந்து வருகிறது.

அமெரிக்காவிலுள்ள, கொலம்பியா பல்கலைக்கழகத்தில், கிரியேட்டிவ் மெசின்ஸ் லேப் உள்ளது. இங்கு தோசை, கேக், இறைச்சி என பலவித உணவுகளை முப்பரிமாண அச்சியந்திரத்தில் அச்சிட்டு எடுக்கும் ஆராய்ச்சி தீவிரமடைந்துள்ளது. அண்மையில், இங்கு நீல லேசர் கதிர் மற்றும் அகச்சிவப்புக் கதிர்களைக் கொண்டு, கோழி இறைச்சிக் கைமாவை வேக வைக்கும் முயற்சி நடந்தது. முப்பரிமாண அச்சியந்திரம், கோழிக் கைமாவை ஒரு கூம்பு வழியே பிழிந்து, கோழி நெஞ்சுக்கறி வடிவில் துல்லியமாகச் செய்து காட்டியது. பின், அதன் மீது லேசர் மற்றும் அகச்சிவப்புக் கதிர்கள் சில நிமிடங்கள் பாய்ச்சசப்பட்டன. மொத்த இறைச்சியும் உருமாறாமல் வெந்து, அசல் கோழிக்கறி சமையல் மணம் வீசியது.

சில தன்னார்வலர்களுக்கு வழக்கமான முறையில் சமைத்த கோழிக் கறியையும், லேசரில் வேக வைத்த கறியையும் தந்து கருத்துக் கேட்டனர். கண்களைக் கட்டியபடி அவர்கள் இரு உணவையும் உண்டனர். இறுதியில், அனைவருமே அடுப்பில் வெந்த கறியை விட, லேசரில் வேகவைத்த கோழி நெஞ்சுக்கறியைத்தான் சுவையாக, மணமாக இருப்பதாக தேர்ந்தெடுத்தனர்.

இதில் கூடுதல் பலனாக, அடுப்பில் வெந்த கறி சற்று அதிகமாகவே சுருங்குவது தெரியவந்தது. லேசரில் வேகவைக்கும்போது இறைச்சி அவ்வளவாக சுருங்காததோடு, ஈரப்பதமும் குறைந்துவிடாமல் இருப்பதை விஞ்ஞானிகள் கண்டறிந்தனர். முப்பரிமாண உணவு அச்சியந்திரம் தள்ளுவண்டிகளில் வைத்து விற்கப்படும் காலம் விரைவில் வரத்தான் போகிறது.

# அதிகம் செலவு பிடிக்காத டயாலிசிஸ் இயந்திரம்!



சிறுநீரக கோளாறு உள்ளோருக்கு, இயந்திரம் மூலம் செயற்கையாக ரத்தத்தை சுத்திகரிப்பர். டயாலிசிஸ் என்று அழைக்கப்படும் இந்த சிகிச்சைக்கு இப்போதும் கூட சில ஆயிரம் ரூபாய்கள் தேவை. இந்த குறையை போக்க ஆஸ்திரேலிய விஞ்ஞானிகள் ஒரு புதிய டயாலிசிஸ் இயந்திரத்தை உருவாக்கியுள்ளனர். சிட்னியைச் சேர்ந்த 'எல்லன் மெடிக்கல் டிவைசஸ்' இந்த புதிய கருவியை வடிவமைத்துள்ளது.

வரும் 2030 க்குள், சிறுநீரக கோளாறால் டயாலிசிஸ் சிகிச்சை தேவைப்படுவோரின் எண்ணிக்கை 50 லட்சத்தைத் தொடவுள்ளதாக உலக சுகாதார நிறுவனம் கணித்துள்ளது. இப்போதே கூட, டயாலிசிஸ் தேவைப்படுவோரில் 75 சதவீதம் பேருக்கு, அந்த சிகிச்சையைச் செய்யும் வசதி இல்லை. எனவே தான், எல்லன் நிறுவனத்தின் கருவிக்கு முக்கியத்துவம் கிடைத்துள்ளது.

வீட்டில் இருக்கும் கெட்டில், பைகள், உப்பு, சர்க்கரை போன்ற பொருட்களை வைத்தே இந்தக் கருவி மிகவும் எளிய முறையில் உருவாக்கப்பட்டுள்ளது என எல்லன் நிறுவனத்தின் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இதனால், இக் கருவி மூலம் டயாலிசிஸ் செய்யும்போது, தற்போது ஆகும் செலவில் 10 சதவீதம் மட்டுமே இதற்கு ஆகும் எனவும் அதிகாரிகள் கூறியுள்ளனர். வளரும் நாடுகளில் உள்ள டயாலிசிஸ் நோயாளிகளுக்கு இந்த செய்தி இனிக்கும்.

இப் பத்திரிகையானது பருத்தித்துறை வீதி, நெல்லியடியில் அமைந்துள்ள Needa media corporation (PVT) LTD இனால் 20.11.2021 அன்று வெளியிடப்பட்டது.